
இதழ் 05
மே 2004

# துயரி



தமிழ்ச் சங்கம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில், இலங்கை

உள்ளே :

## கட்டுரைகள்


பண்பாடும் மாறுபாடும் - ஒரு சமூகவியல் நோக்கு. - ஐ. உதயகலா 3

சமூக யதார்த்தத்தை சித்தரிக்கும் வாய்மொழி இலக்கிய மரபுகள் : சர்ச்சைக்குரிய கவனயீர்ப்புக் குறிப்புகள் சில - றமீஸ் அப்துல்லாஹ் 8

முறையற்ற சொத்துப் பங்கீடும் சமூகச் சிதைவுகளும் - எம்.வை.எம். சுஹீறா 14

சமாதான இயக்கங்களின் தோற்றமும் செயற்பாடுகளும் - எம்.எம் பாஸில் 22

சேரனின் 'ஓட்டோ கிரா∴ப்': வாழ்வு பற்றிய அனுபவம் அல்லது அனுபவம் பற்றிய அழகியல் - ஏ.எம். குர்ஷித் 28

இலங்கையின் வறுமையும் அதனை ஒழிப்பதற்கான செயற்றிட்டங்களும். - சுலைஹா எஸ் முஹம்மட் 34

உலக வலம்வரும் தமிழ் இணையத் தளங்கள் - ஏ. ஆயிஷா 40

சிந்தனைப் போராட்டம் - எஸ்.எம். அய்யூப் 46

தனித்துவத்திலும் இனத்திலும் பண்பாட்டினது தாக்கம் : மூலம் : Francisco Morales . தமிழில் : ஏ. றமீஸ்

கிழக்கிலங்கை முஸ்லிம்களும் மருகிவரும் குடி வழக்கும் - யூ .எல். எம். அஜ்வத் 74

தென்கிழக்கு பிரதேச முஸ்லிம் மக்களின் பாரம்பரிய விவசாய செய்ம்முறைகளும், வாழ்வியலும் - எம்.எம்.ஏ. முஹியிதீன் 82


## சிறுகதை


கனவுகளின் காலம் - எம். அப்துல் றஸாக் 65


## கவிதைகள்


எம். நவாஸ் சௌபி, பாலைநகர் ஜிப்∴ரி, எம்.எம்.எம். நகீபு, முழுமதி எம். முர்தழா, ஏ.எம். நிப்றாஸ் , றயியுஸ், றஷ்மி, அக்மல் ஜஹான், ரத்னஸ்றீ விஜேசிங்க, (தமிழில் ஏ.எப். முஹம்மட் அஷ்ர∴ப்), மஜீத், றியாஸ் குரானா, அதீக் ஹாஸன்



**பிரதம ஆசிரியர்கள்:**
எம். அப்துல் றஸாக்
எஸ். எம். அய்யூப்
எம். வை. எம். சுஹீரா

**உதவி ஆசிரியர்கள்:**
ஏ. ஆயிஷா
ஜெஸ்மி எம். மூஸா
யூ. எல். எம். அஜ்வத்
எம் நவாஸ் சௌபி

**தொடர்புகளுக்கு :**
துயரி
தமிழ்ச் சங்கம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
இலங்கை

**கணினி வடிவமைப்பு :**
கொம்புறோ - அக்கரைப்பற்று.
பர்ஹான் எம் ஹனிபா




அது இலகுவில் நிகழ்வதில்லை
கணத்தில் நிகழ்ந்தாலும்
ஒரு யுகம் வாழ்ந்த சுகம்

அந்த வாழ்வின் மீது
நம்பிக்கையற்றுப் போனது.
உதிர்ந்து விழுந்த மலர்போல
அதன் வாசத்தையும்
காப்பாற்ற முடியவில்லை

மலட்டுக்காம்பாக அது இருக்கட்டும்
பூ மலர்வதும்
பனி போல் விழுந்து அதில்
உறங்குவதும்
விரும்புவதற்கானதல்ல.

மீண்டும் அந்தப் பாழடைந்த
வீட்டில்
குடியிருக்க முடிவதில்லை
தூரத்து வெட்ட வெளியில்
தனித்து நிற்பது போல்.

வலிமையற்ற வெற்றிடத்தில்
கடந்து போன காற்றை
நிரப்பாதீர்கள்.
காயப்பட சக்தியிழந்தவனிடத்தில்
பாழடைந்த வீட்டை
நினைவுபடுத்தி
பயமுறுத்தாதீர்கள்.

எம். நவாஸ் சௌபி



# பண்பாடும் மாறுபாடும்

## ஒரு சமூகவியல் நோக்கு...

ஐ. உதயகலா

பண்பாடு என்பதை 'தொன்மைப் பண்பாடு. (Primitive Culture) என்னும் நூலில் டைலர் (Tylor) என்ற மானுடவியலாளர் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறார். "அறிவு, நம்பிக்கை, சுவை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், சமூக உறுப்பினரான ஒருவர் கற்கும் திறன்களும், பழக்க வழக்கங்களும் அடங்கிய முழுமையான தொகுதியே பண்பாடு"

**Christopeer Jencks** பண்பாட்டைப்பற்றி விளக்கும் போது **"All which is symbolic : the learned... aspects ... of human society"** - இது மனித சமூகத்தின் ஒரு அடையாளமாக காணப்படுகிறது. அத்துடன் மனித வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும் உள்ளது. மேலும் மனிதன் சமுதாய அனுபவத்தின் மூலம் கற்றறிந்த விடயங்களும் பண்பாடு ஆகும். இவர், பண்பாடு என்றசொல் நான்கு வகையான உணர்வுகளில் அல்லது நோக்கில் பயன்படுத்தப்படுவதை வேறுபடுத்திக் காட்டுகிறார்.

01. மனோநிலை -

நாம் எவ்வாறு வாழ வேண்டும், வாழ்க்கையின் இலக்கினை அடைவதற்கு எவற்றினையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும்; பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனோ நிலையும் முயற்சியுமாகும். தன்னைப்பண்படுத்தி மற்றவர்கள்

ஏற்றுக் கொள்ளும் நிலையினை உருவாக்கல்.

02 நாகரீகத்தோடு சம்பந்தப்படுத்திப் பார்ப்பது –
குறிப்பாக சில சமுதாயங்கள் ஒப்பீட்டளவில் மற்றவைகளைவிட பண்பாட்டில் கூடியனவாகவும், உயர்ந்தனவாகவும் காணப்படுகின்றன. புரட்சி சம்பந்தமான கருத்துக்களுடன் நெருக்கமான தொடர்புடையனவாகவும் காணப்படுகின்றன. இந்தப் பண்பாட்டு நோக்கு **Herbert Spencer** உடைய சிந்தனைகளில் பிரதிபலிக்கிறது. இவர் மேற்கத்தைய சமூகத்தை ஏனைய சமூகங்களை விட சிறந்தது என்கிறார்.

03. கலையுடன் சம்பந்தப்படுத்திப் பார்ப்பது –
ஒரு சமூகத்திலுள்ள அறிவுசார் வேலைகள், கலைகள் என்பவற்றின் தொகுப்பு பண்பாடு என நோக்கப்படுகின்றது. முழு மனித சமூகத்தின் வாழ்க்கையிலும் விட திரையரங்குகளில், நேரடி நிகழ்ச்சி கூடங்கள், கலைக்கண்காட்சிக் கூடங்கள், நூலகங்கள் என்பவற்றில் பண்பாட்டை நாம் காண முடியும். இது உயர்ந்த பண்பாடு எனவும் வர்ணிக்கப்படுகிறது.

04. மனித வாழ்க்கையின் முழு அம்சமும் பண்பாடு –
இவ்வரையறையை **Ralph Linton** முன்வைத்த போது "ஒரு சமூகத்தில் பண்பாடு என்பது அந்த சமூகத்தின் உறுப்பினர்கள் பரம்பரை ரீதியாக கடத்தி வந்த பழக்க வழக்கங்கள் சிந்தனைகள், தொகுப்புகள் பண்பாடு எனப்படுகிறது.

பண்பாடு ஒரு சமுதாயத்திற்கு இருக்க வேண்டிய முழுமையான வாழ்க்கை முறையென குறிக்கப்பட்ட அங்கத்தவர்களால் பேணப்பட்டு வருகிறது. பண்பாடு என்ற பதத்தினை சாதாரண மக்களும், சமூகவியலாளர்களும் பயன்படுத்துகின்ற முறை பல்வேறு விதமானது. மனிதர்களால் உருவாக்கப்பட்டு அவர்களது செயற்பாடுகளால் வருவது பண்பாடு என்றும் மனிதனது செயற்பாடு இல்லாமல் உருவாவது இயற்கை என்றும் கூறலாம்.

ஒரு மக்கள் குழு தங்கள் வாழ்க்கையை சீரான முறையில் நிறுவுவதற்காக தங்களுடைய நடத்தைக் கோலங்களை சரி / தவறு என்று தீர்மானித்து ஒழுக்க ரீதியான செயற்பாடுகள் உள்ளடக்கிய ஒரு நடத்தைக் கோலத்தை பண்பாடு எனக்கூறுவர். பேச்சு, உடை, பாவனை என்பவற்றுக்கு மேலாக சிந்தனைப் போக்கு என்பவையும் பண்பாட்டில் முக்கியமாக உள்ளடக்கப்படும் ஒவ்வொரு சமூகமும், நாடும், தமக்கென ஒரு பண்பாட்டுக் கோலத்தை நிறுவும். அந்த அடிப்படையில் பார்க்கும் போது தமிழர் பண்பாடு சிங்களவர் பண்பாடு, இஸ்லாமியர் பண்பாடு, பிரித்தானியப் பண்பாடு, பிரான்சியப் பண்பாடு, யப்பானியப் பண்பாடு என்று பல்வேறுபட்ட பண்பாடுகளை நாங்கள் காணலாம். இந்த அடிப்படையிலேயே வயது, வர்க்கம், சமூகநிலை, இனத்துவம் போன்றபின்னணியிலேயே பண்பாடு வேறுபட்டுக் காணப்படுகிறது.

உதாரணமாக பிரித்தானியாவை எடுத்துக் கொண்டால் அங்கு தொழிலாளர் வர்க்கம், மத்தியவர்க்கம், உயர் குழாம் போன்றவர்களிடையே நடத்தைக் கோலங்கள் மாறுபாட்டுக் காணப்படுகின்றன

**Oscar Lewis** என்ற அமெரிக்க சமூக வியலாளர் பண்பாடு என்ற எண்ணக் கருவுக்கு முக்கியத்துவம் கொடுத்து பின்வருமாறு விளக்குகிறார். "வர்க்கங் களுக்குள்ளும், சேரிகளிலே வசிப்பவர்க ளுக்குள்ளேயும் உப பண்பாடுகள் காணப்படுகின்றன. இந்த சேரிகளில் வாழ்பவர்களிடையே **'Culture of Poverty'** வறுமையின் பண்பாடு எனப்படும் உளப்பாங்கானது ஒரு குறிக்கப்பட்ட நடத்தைக் கோலங்களை மையமாகக் கொண்டுள்ளது".

உதாரணமாக – உயர் வர்க்கம் மீது நம்பிக்கையீனம், உயர் அதிகாரிகளிடம் சந்தேகம், சட்டங்களை நிலைநாட்டி நடைமுறைப்படுத்துபவர்கள் மீது நம்பிக்கையீனம், வெறுப்பு போன்றவை ஏனைய வர்க்கங்களிலே தமது செல்வாக்கை செலுத்த முடியாது என்ற தாழ்வுச்சிக்கல் நிலையில் உள்ளவர்கள். ஆண் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்கின் றவர்கள், அதனை மறுக்கிறவர்கள் போன்றோர் தமக்கென ஒரு தனியான பண்பாட்டை நிறுவிக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். இந்த அடிப்படை யிலே பார்க்கும் போது **Community** குழுமங்கள் என்ற பதம் தனிப்பட்ட பண்பாட்டை உடையவர் களுக்கு உபயோகிக்கப்படுகிறது.

இவ்வாறாக பண்பாடு மக்களிடையே அதிக செல்வாக்கு செலுத்துவது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இருந்தும் எங்களில் அனேகமானோர் தாம் நினைப்பதுதான் பண்பாடு எனக் கொள்கின்றோம். எனினும் பண்பாட்டு மாறுபாடுகள் எங்களை வியக்க வைக்கி ன்றன. இயன் ரொபேட்சன் **(Ian Robertson 1987)** பின்வருமாறு கூறுகிறார்.

"அமெரிக்கர்கள் சிப்பியைச் சாப்பிடுகின் றார்கள். ஆனால் நத்தையை அல்ல. பிரான்சியர்கள் நத்தையைச் சாப்பிடுகிறார் கள் ஆனால் வெட்டுக்கிளியைச் சாப்பிடுவ தில்லை. சூளுஸ் **(Zulus)** இன மக்கள் வெட்டுக்கிளியைச் சாப்பிடுகிறார்கள் ஆனால் மீன் சாப்பிடுவதில்லை. இந்துக் கள் பன்றி சாப்பிடுகிறார்கள் ஆனால் மாடுகள் சாப்பிடுவதில்லை. சீனர்கள் பாம்பு சாப்பிடுகிறார்கள் ஆனால் மனிதர் களைச் சாப்பிடுவதில்லை. நியுக்கினியில் காணப்படும் ஜேல் **(Jeale)** இன மக்கள் மனிதரை விரும்பி உண்கிறார்கள்". இவ்வாறாக பண்பாடானது சமூகத்திற்கு சமூகம் மாறுபட்டுக் காணப்படுகிறது.

எங்களுடைய வாழ்க்கையில் பழக்க வழக்கங்கள், நடை, உடை, பாவனை போன்றவற்றிலும் மாறுபாடுகள் காணப்படு கின்றன. பாரம்பரிய இஸ்லாமியப் பெண்களாக இருந்தால் தங்களுடைய முழு உடம்பையும், முகத்தையும் மறைப்பார்கள். அப்படி அவர்கள் மறைக்காவிட்டால் வழமைக்கு அல்லது பண்பாட்டுக்கு மாறானவர்கள் என்று நினைக்கக்கூடும். அமெரிக்கப் பெண்களாக இருந்தால் தமது முகம், கைகள், கால்கள் போன்ற அவயவங்கள் எல்லாம் வெளியில் தெரிய உடை அணிவார்கள் ஆனால் வயிற்றுப் பகுதியையும் மார்பையும் மூடுவார்கள். அப்படி மூடாவிட்டால் அவர்கள் பண்பாட்டில் இருந்து மாறுபட்டவர்கள் என நினைப்பார்கள். பிலிப்பைன்சில் வாழும் ரசடே **(Tasaday)** பழங்குடி மக்கள் ஆடை இல்லாமல் நிர்வாணமாக நாளாந்த வேலைகளுக்குச் செல்வார் கள். அப்படி அவர்கள் இல்லாவிட்டால் பண்பாட்டுக்கு மாறானவர்கள். இவ்வாறு பல்வேறு சமூக மாறுபாடுகளில் மாறுபட்ட பண்பாடுகளை அவதானிக்கிறோம்.

மேலும் பண்பாடுதான் சமூக மாறுபாடுகளை ஏற்படுத்துகிறது என்பதையும், அத்துடன் பண்பாட்டுக்குள்ளேயே மாறுபாடுகள் உருவாகின்றதையும், இறுதியில் இப்பண்பாட்டு மாறுபாடானது பால் வேறுபாடுகளை தெளிவுபடுத்துவதையும் நாம் காணலாம்.

ஒன்றிலொன்று தங்கியிருக்கும் உலக நாடுகளின் பொருளாதாரமும், நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சிகளும் ஒவ்வொரு பண்பாட்டினது நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் இன்னொரு பண்பாட்டுடன் தொடர்புபடுத்துகிறது. அதைவிட மேலதிகமாக இன்று இடம்பெயர்வு, அகதிகள் வாழ்க்கை, நவீன போக்குவரத்து முறை என்பவற்றினாலும் பல்வேறு வகையான பண்பாட்டினைக் கொண்டுள்ள மக்கள் கூட்டத்தினை காணலாம்.

வெவ்வேறு பிரதேசங்களில் ஒரே குழுக்களாக நாங்கள் வாழும் வரைக்கும் மனிதப் பண்பாட்டின் மாறுபாடுகள் குறைவாகவே காணப்படும். ஒற்றுமையான பண்பாட்டுடன் நாங்கள் செல்வது சுழல் காற்றுடன் பயணம் செய்வது போன்றதே. அங்கு நாங்கள் வேறுபாட்டை அல்லது மாறுபாட்டை உணர்வதில்லை. ஆனால் காற்றுக்கு எதிராக நாங்கள் பயணம் செய்யும்போது அல்லது வித்தியாசமான ஒரு பண்பாட்டில் இருக்கும் போது மாறுபாடுகளை அறிகிறோம் அல்லது உணர்கிறோம்.

இவ்வாறாக மாறுபட்டு இருக்கின்ற நிலையிலும் நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற உணர்வோடு சிந்தித்து ஒற்றுமைப்பட்டு வாழமுற்படும்போது சிறந்த பண்பாடுடனான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் ●


உசாத்துணைகள் :

01. HARALAMBOS AND HOLBORN - Sociology themes and perspectives' 2000 Harpercollins Publishers Limited London
02. GERARD O'DONNELL, Mastering Sociology 1994, The macmillan press Limited London
03. HOWARD F. TYLOR Sociology the Essentials 2001 London Wciv 7 AA



**துயரி தன் குறித்த எதிர்வினைகளை எதிர்பார்க்கிறது. ஒன்றின் வளர்ச்சியில் அது நடந்துவரும் பாதை பற்றிய தெளிவு அவசியமாகின்றது. அப்போதுதான் அது அடைய வேண்டிய இலட்சியம் தெளிவாகும் என்பதை துயரி உணர்கிறது. உங்கள் காத்திரமான ஆக்கங்களையும். விமர்சனங்களையும் துயரியின் வளர்ச்சிக்கு உரமாக்குங்கள்.**

தெறித்து விழும் நினைவினில்
அள்ளுண்டு - பல்லாண்டுகளுக்கப்பால்
பாயும் மனதினைப் பாடுவேன்
அது கனவுகள் காணும் காலம்
முட்களின் மீதொரு பயணம்
தீயின் கிடங்கினில் மீதொரு உறக்கம்
அடிமை யுகத்தின் மீதொரு வாழ்க்கை
நிகழ்த்தாததொரு காலத்தின்
மனிதனைப் பாடுவேன்

பிரிவினையற்று தோழமையுற்று
காலங்களால் துதிக்கப்பட்ட
மனிதராய் அன்றொரு வாழ்வு
எமக்கென்றிருந்தது.
அன்றில் வசந்தங்கள் ஆட்கொண்டிருந்த
எம்மைப் பின்னொரு யுகம்
முழுமைக்குமாய் மூடிற்று
பிற்பாடு சுவாரஸியமற்றுப் போன
வாழ்வொன்று எமக்கென
இலவசமாய்க் கிடைத்திற்று.

நாகத்திலிறங்கிய இடியாய்
அதற்கஞ்சியபடி சிதறித் தொலைந்தோம்
கனவுகள் காணும் ஓர் காலத்தை
இழந்தோராய் அவதியும் அவலமும்
பக்கத்திலிருக்க கழிக்க வேண்டியதாயிற்று
வாழ்வை.

# பாலை நகர் ஜிப்ஃரி




# சபிக்கப்பட்ட யுகம்

இனிப்பட எதுவுமற்றதொரு நாளில்
சமாதானம் என்றெழுந்ததுங்கள் குரல்
பின், மீளவும் கனவுகள் காணும் காலத்தின்
தரிசனம் நிகழுமென்றெண்ணி விடுதலையுற்றோம்
மன்னித்துக் கொள் - விடுதலையுற்றாய்
எனது காலம் - அதனது கனவுகள்
அதன் வசந்தம் இன்னும் விடுதலையுறவில்லை
புதிதான சிறைக்குள் இன்றதன் இருப்பு

துயரத்தின் துரத்துதலில்
இடைவெளியின்றித் தொடரும்
என் யுகத்தை சபித்த முனிவன் யார்?
எனது இடத்தில்
இடறி வீவதற்கும் அனுமதி கோரும்படியாய்
நான் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள
அவலத்தின் குரலாய் எழுகிறேன்
யார் முனிவன் என் யுகத்தை சபிப்பது?



# சமூக யதார்த்தத்தை சித்தரிக்கும் வாய்மொழி இலக்கிய மரபுகள்

சர்ச்சைக்குரிய கவனயீர்ப்புக் குறிப்புகள் சில

**றமீஸ் அப்துல்லாஹ்**

வாய்மொழி இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறைகளை தெளிவாக எடுத்துச் சொல்வனவாக அமைந்திருக்கின்றன. தற்காலத்தில் மக்களின் கல்வி, நாகரிக, பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ப, சமய, சமூக வாழ்நிலைகளில் பல்வேறு வளர்ச்சிகள் இடம்பெற்ற போதும் பழங்கால மக்களின் வாழ்க்கை முறை இந்த மரபுகளிலிருந்து பெரிதும் விலகிச் சென்றிருக்கிறது. குறிப்பிடத்தக்க சில அம்சங்களினூடாக இதனை தெளிவாகக் குறிப்பிட முடியும்.

"பெயரறியப்படாத மக்கள் கூட்டத்தை காலந்தோறும் நாகரிக சமுதாயங்கள் தம்மகத்தே கொண்டுள்ளன" என்பார் கவிஞர் தாகூர். இந்த நாட்டார் இலக்கிய மரபுகளிலே காணப்படும் முக்கியமான அம்சம், அத்தகைய பெயரறியப்படாத மக்கள் கூட்டத்திலிருந்து பிறந்த இலக்கியங்கள் கூறுகின்ற விடயங்கள் இன்றும் நமக்கு மத்தியில் பின்பற்றப்படுகின்றன என்பதுதான். குறிப்பாக வாய் மொழி இலக்கியம் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருக்கின்ற பிரதேசங்களுள் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற கிழக்குப் பிரதேசம் முக்கியமானது. முஸ்லிம்களுடைய வாழ்க்கை முறை ஏனைய சமயங்களிலிருந்து தனித்துவமானதாகவும், வேறுபட்டதாகவும் அமைந்த போதும் வாய்மொழி இலக்கிய மரபினூடாகப் பார்க்கின்ற போது குறிப்பிட்ட சில அம்சங்களில் இந்த வேறுபாடுகளைக் கண்டு கொள்வது கடினமாகவுள்ளது.

### 01. சமய நம்பிக்கைகள் சார்பானவை :

வாய்மொழி இலக்கிய மரபில், குறிப்பாக தமிழர்களின் சிறு தெய்வ வழிபாடும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மக்களது இன்ப, துன்ப வாழ்வியல் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்ற

அம்சமாக இவ்வழிபாட்டு அம்சங்கள் பின்பற்றப்படுகின்றன. கெட்ட பிசாசுகள், ஷைத்தான்கள் என்பவற்றிலிருந்து காத்தல், நோய்களிலிருந்து காத்தல், வெள்ளம், வரட்சி, புயல் முதலானவற்றிலிருந்து காத்தல், கெட்டவர்களிலிருந்தும், கள்வர்களிடமிருந்தும் காத்தல், உயிர் உடமைகளைக் காத்தல், வழித்துணையாக அமைதல் போன்ற விடயங்களுக்காக இந்த சிறு தெய்வ வழிபாடுகள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. இதையொத்த வகையில் முஸ்லிம்களிடம் இத்தகையதொரு நம்பிக்கையும், வழிபாடும் இருந்து வந்துள்ளதா என்பது பற்றி வினா எழுப்ப வேண்டியுள்ளது.

முஸ்லிம்கள் ஏக தெய்வக் கொள்கையைக் கொண்டவர்கள் அல்லாஹ் மாத்திரமே அவர்களுடைய இறைவனாவான். ஏனைய சிறிய, பெரிய தெய்வங்கள் எதுவும் அவர்களிடமில்லை. அவ்வாறு இருப்பதாக அவர்கள் கருதுவதும் ஏற்றுக் கொள்வதும் நம்பிக்கை கொள்வதும் இஸ்லாமிய மார்க்க சட்டத்திற்கு முரணாக அமைவதோடு இஸ்லாத்தை நிராகரிப்பதற்கு சமமானதாகும்.

பழங்கால மரபிலிருந்து இறைவன் அல்லாதவர்களிடம் உதவி தேடுவதும், அவர்களை நம்புவதும், அவர்களுக்காக காணிக்கை செலுத்துவதும், படையல்கள் செய்வதும் முதலானவை முஸ்லிம்களிடமும் இருந்து வருகின்றன. இதனையொட்டி வழங்குகின்ற வாய்மொழி இலக்கிய மரபிலுள்ள பாடல்கள் இதற்குத் தக்க சான்றாகும்.

**மையதீன் ஆண்டவரே ப..தாதில் உள்ளவரே**
**செய்யது ஒலி நாயகரே**
**ஒரு சீர் பிழையும் வந்திடாமல்**

இப்பாடல் இறை நேசர் ஒருவரிடம் பாதுகாப்புத் தேடுகின்ற மக்களின் பண்பினை எடுத்துக் காட்டுகின்றது.

**காட்டுப் பள்ளி அவுலியாவே**
**கருணையுள்ள சீமானே**
**பூட்டுடைச்ச மீரானுக்கு**
**புடையன் கொத்த உதவி செய்டா**

**கைவிடுவேன் என்று எண்ணி**
**கவலைப்படாதே கண்ணே**
**அல்லாஹ் மேல் ஆணை**
**உன்னை அடையாட்டி காட்டுப் பள்ளி.**

**மச்சானும் மச்சினனும்**
**மாடு தேடிப் போகையிலே**
**காரமுள்ளு தையாம**
**கலந்தரப்பா காப்பாயே**

இப்பாடல்களில் வரும் காட்டுப்பள்ளி அவுலியா, கலந்தரப்பா அவுலியா முதலான இறை நேசர்களிடம் உதவி தேடுவது இஸ்லாமிய ஷரிஆ மரபுக்கு முரணானது. இதே போல இப்பிராந்தியங்களிலுள்ள இறைநேசர்களின் அடக்கஸ்தலங்களையொட்டி பல பாடல்கள் எழுந்துள்ளன. அவ்வடக்கஸ்தலங்களில் குறிப்பிட்ட இறை நேசருக்காக கோழி, ஆடு முதலானவற்றை பலியிடுவதும், அவற்றைச் சமைத்து உண்பதுமான கந்தூரி வழங்குவதும் நிகழ்கின்றன. இக்குறிப்பிட்ட அடக்கஸ்தலங்களை யொட்டி பல பாடல்களும் நிலவுகின்றன.

**"கொண்டுவட்டுவான் பள்ளிக்குப்**
**- போகலாம்**
**வீரையடி அப்பா வேடிக்கை பார்க்கலாம்**
**நடந்து வாடி என் கண்மணி**

வங்கால ரோட்டில வரம்படியாகுது
வந்த சனத்திற்கு இருப்பிடமாகுது
கொக்குக் குருவிகள் கூட்டம் உண்டாகுது
கூடும் பறவைகள் அதிகம் உண்டாகுது
பக்காவும் கொக்கும் வரம்புள்ளித் தாராவும்
செங்கால் நாரையும் சேர்ந்த மரங்கொத்தியும்
நடந்து வாடி என் கண்மணி
வீரையடி அப்பா வேடிக்கை பார்க்கலாம்
நடந்து வாடி கண்ணே

பிறிதொரு பாடலில் .....

பச்சை வெள்ளை வைச்சித் தைச்ச
கொடிச் சீலையொன்று
உச்சியில் உயர்த்தி வைச்ச காரணம்
அதனை ஊர் மனிதர் பார்க்க நல்ல பூ ரணம்
வாடலும் கொண்டலும் வீச
ஆடியே கொடிப்பறக்க
கூடிடும் வெண்கல ராகம் பேசவே
அதன் குஞ்சமும் குலுங்கி விளையாடுதே
ஹவ்ழும் அழகாய்க் கட்டி
மணலும் பரவிக்கொட்டி
வுழுவும் எடுத்து வந்தார்களே
பள்ளியில் தொழுகை விரிப்புடன் நடந்தார்களே
பச்சைக் கிளி மொழியாலே

மச்சினிப் பெண்ணாளே வாராய்
மக்கா நகர் கொடியேற்றம் பார்க்கலாம்
நம்ம பாவ வினை எல்லாம் தூரப் போக்கலாம்.

## 02. காதல், பாலியல் உந்துதல் சார்பானவை:

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாய்மொழி இலக்கிய மரபில் காணப்படும் காதல் பாடல்கள் வாய்மொழி இலக்கிய ஆய்வாளர்களிடையே பெரும் சர்ச்சையைக் கிளப்பி இருக்கின்றன. இப்பாடல்கள் ஆணுக்கும் பெண்ணுக்கு மிடையே உண்மையானதாகப் பாடப்பட்டனவென்றும், ஆணாக - பெண்ணாக கற்பனை செய்து பாவனை அடிப்படையில் பாடப்பட்டதென்றும், மிகவும் அரிதாக ஆண்களாலும் - பெண்களாலும் பாடப்பட்டவை என்றும் கருதப்படுகின்றன. ஆனால் உண்மையில் மிகவும் இறுக்கமான சமயக் கட்டமைப்பைக் கொண்ட முஸ்லிம்கள் மத்தியில் காதல், பாலியல் அம்சம் சார்ந்த வாய்மொழிப் பாடல்கள் வழங்கியுள்ளன என்பதனை மறுக்க முடியாது.

சுத்திவர வேலி
சூழ வர முள்வேலி
எப்புறமும் வேலி
எதால புள்ள நான் வரட்டும்

காவல் அரணோ மச்சான்
கள்ளனுக்கு முள் அரணோ
வேலி அரணோ மச்சான்
வேணுமெண்ட கள்ளனுக்கு

பூவலத் தோண்டி
புதுக்கொடத்த கிட்டவச்சி
ஆரம் உழுந்த கிளி
அள்ளுதுகா பார் நல்ல தண்ணி

நடையழகி நளின
சித்திர வாயழகி
இடையழகி - கதிஜா ஒரு
இன்ப முத்தம் தாகிளியே

கோடியால் வந்து நின்று
கொக்காட்டம் பண்ணாதீங்க
ஊடு நிரைஞ்ச சனம்
உம்மாவும் திண்ணயிலே

**தெருவால போகவொண்ணா**
**தேன் போல மணக்கிறது**
**கனியருந்த நான் வருவேன் - உன்ர**
**காக்காமார் காவலுகா**

என்று காதல் உணர்வுகளைப் பாடுகினற இப்பாடல்கள் நமது முஸ்லிம் மக்களுக்கு மத்தியில் நிலவிய காதல் ஒழுக்கத்தை வெளிகொண்டு வருகின்றன. அதே போல பாலியல் உந்துதலை எடுத்துச் சொல்லும் வாய்மொழிப் பாடல்களும் நமக்கு மத்தியில் வழக்கிருக்கின்றன.

**குத்துமுலக்காரி யென்று**
**கொடுத்து வெச்சேன் நாலு பணம்**
**சாய்ஞ்ச முலக் காரியெண்டா**
**தந்திடுகா என் பணத்த**

**நீயொரு வல்லக்காரனெண்டு**
**வாங்கிவெச்சன் உன் பணத்த**
**கோழித் தத்துவக்காரா**
**கொண்டுபோடா உன் பணத்த**

களவொழுக்கத்தில் ஈடுபடும் ஆண் - பெண்களுக்கிடையே நிலவும் பாலியல் பலவீனங்கள் பற்றி இப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. பெண்களின் உறுப்புக்களை பாலியல் உணர்வுகளோடு சித்திரிக்கும் பாடல்களும் வழங்கியுள்ளன.

**தேமல் முலையும்**
**தேனினிக்கும் செவ்வுதடும்**
**வாழை உடலும்**
**என்னை வாட்டுதடி நித்திரையில்**

**இடுப்புச் சிறுத்த பொட்ட**
**இரு தொடையும் நொந்த பொட்ட**
**கொக்குச்சாண் பொட்ட**
**உனக்குக் கோபமென்ன என்னோடு**

இதே போல களவொழுக்கத்தில் திருப்தி காணாத ஒருவனுடைய பாலியல் உணர்வுகளை வெளிப் படுத்தும் பாடல் வரிகளும் கவனத்திற்குரியவை

**ஒப்பாரக் கள்ளி**
**உனக்களித்த காசு பணம்**
**தோப்பாறு வெட்டையில**
**ஒரு தோப்பு வேண்டிப் போட்டிடுவன்**

வாய்மொழி விடுகதைகள் கூட இத்தகைய பாலியல் உந்துதல் நிறைந்தவைகளாக உள்ளன.

"காலடாக்க போட்டு கோல உள்ள வச்சி சப்புப் பென அடிச்சா சொட்டு சொட் டென பறக்கும்"

"இடுப்பு அசைய, மார்பு குலுங்க உள்ள உட்டா வெள்ள தள்ளும்"

இவ் விடுகதைகளின் விடையாக 'குரக்கன் மா' அமைந்த போதும் இவ்விடுகதையின் உணர்வு பாலியல் உந்துதலை வெளிப்படுத்துவதாகவே அமைந்து விடுகின்றது.

"மாடேறி மேயாத மகிழம்பூ திட்டியிலே
மண்ணேறி மொன்னியில பால் குடிக்குது"

இதற்கு விடையாக 'நளவன் கள் இறக்குவது' குறிப்பிடப்படுகிறது. இதே போல பல விடுகதைகள் உள்ளன. இந்தப் பாடல்களும், விடுகதைகளும் இதையொத்த சில நாட்டார் கதைகளும் வாய்மொழி உந்துதலை வெளிப்படுத்தும் மரபில் உள்ளன.

## 03. எதிர்ப்புக் குரல்கள் சார்பானவை :

வாய்மொழி இலக்கிய மரபில் மிகவும் விரிவாக

ஆராயப்பட வேண்டியது இவ்வம்சம். சமூகத்தின் உயர் மட்டத்தினரால் பெரிதும் பாதிக்கப்பட்ட அடித்தள மக்கள் தமது பாதிப்புகளுக்கெதிராக எழுப்பிய அதிர்வுகளை வெளிப்படுத்துவனவாக எதிர்ப்புக் குரல்கள் அடங்கிய வாய்மொழி இலக்கியப் பாடல்கள் அமைந்துள்ளன. இது பள்ளிவாசல்களை நிருவகித்த மரைக்கார்மார்களுக்கெதிராகவும், சமூகத்தின் மேல் தட்டிலிருக்கும் முதலாளிகள், போடிமார்களுக்கெதிராகவும், அரசியல் வாதிகளுக்கெதிராகவும் எழுந்திருப்பது இந்த வகையில் குறிப்பிடத்தக்கன.

"தலைமை தெறிச்சிடுவாய்
தலைமகனைத் திண்டுடுவாய்
மூலம் பொறுத்திடுவாய் - என்ட
முதுகெலும்பு நோகுதடா

வெள்ளி எரிஞ்சி
விளக்கடியில் விழுவது போல் - ஒண்ட
தலமை தெரிச்சி
தலவாசலில் விழும்டா

களவொழுக்கத்தில் ஈடுபட்ட ஆண்களுக்கெதிராகவும் சில பாடல்கள் எழுந்துள்ளன.

"போட்ட வரம்பால
புறா மேய்ஞ்சி போறது போல்
நாட்டாருக்கெல்லாம்
நடவரம்போ என் சடலம்

முஸ்லிம்கள் தங்களது இன அடையாளங்களை பேணுவதற்காகவும் மாற்று சமயத்தினரை தாழ்த்தியும் இவ்வெதிர்ப்புக் குரல்களை வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

"கறுத்தக் கொறவா
காலூருச் சிங்களவா
மண்டூருத் தட்டான்
என்ன மதிப்பெடுக்க இல்லையாக்கும்

இதே போல ஊர்களை இழித்துப் பழித்தும் எழும் குரல்களையும் வாய்மொழிப் பாடல்களில் கேட்க முடிகிறது.

சம்மாந்துறையாரே
சங்ககெட்ட ஊராரே
வெயிலேறித் தண்ணி வாக்க - ஒங்க
வேதமென்ன சிங்களமோ.

சுண்ணாம்புமில்ல
சூடுபோடு மாடுமில்ல
வண்ணணுமில்ல - இந்த
மல்கம்பிட்டி ஊராருக்கு

அப்பம் சுடும் காத்தான்குடியார்
அவல் இடிக்கும் காரைதீவார்
முட்டி இடுக்கும் சம்மாந்துறையார்
முகப் பழக்கம் நிந்தவூரார்

மொத்தத்தில் இந்தக் குறிப்புகளினூடாக எழுகின்ற முக்கியமான செய்தி, வாய்மொழி இலக்கிய மரபுகள் கட்டுப்பாடுகள் ஏதுமற்ற இயல்பான சமூக யதார்த்தத்தை சித்தரிக்கின்றன என்பதாகும். இந்த இயல்பு இந்த யதார்த்தத்தின் ஒலித் தன்மை செந்நெறி இலக்கியங்களுக்குக் கிடையாது. அத்தகைய செந்நெறி இலக்கியத்தினூடாக சமூக சமயப் பண்புகள் வெளிப்படையாக வெளிவருவதுமில்லை. ஆகவே சமூக யதார்த்தத்தை கண்டறிவதற்குரிய மிக சிறப்பான ஆயுதம் வாய்மொழி இலக்கிய வடிவங்களே. இக்குறிப்புகள் பற்றிய விரிவான ஆய்வுகள் நாட்டாரியலில் இடம் பெற வேண்டும். ●




உனது மீஸான் கட்டைகளின்
வலிமை
எனக்கில்லை
மன்னித்துக் கொள்
உனது கபுறடியில் நின்று
முறையீடு செய்கிறேன்


பறிகொடுத்த எங்களது
நிலங்களிலிருந்து
கடைசியாய்
உன் கன்னத்தில் வைத்த
பிடி மண்ணளவும்
நாங்கள் மீட்டதில்லை

உனக்கான
கபுர்க்கொடியின் உதடுகள்
காற்றில் பேசும் கவிதைகளையும்
நான் எழுதியதில்லை

உனக்கு மிஞ்சிய கபுர்க் குழியும்
கடத்தப்பட்டுப் போனவர்கள்
கண்டதில்லை
நாளையும்

எனக்காக எஞ்சியிருப்பது
உன் மார்புக்குள் முளைத்து
கபுரில் வளர்ந்து நிற்கும்
மரம்.

**எம். எம். எம். நகிபு**



# முறையற்ற சொத்துப் பங்கீடும் சமூகச் சிதைவுகளும்

எம்.வை.எம். சுஹீரா

இஸ்லாமிய வாழ்க்கை முறை ஒரு பூரணத்துவமான வாழ்க்கை முறையாகும். இவ்வாழ்க்கை முறையின் அடிப்படைக் கொள்கைகள் முழுமையாகப் பின்பற்றப்படும் போது, அதனைப் பின்பற்றிய சமூகம் தோல்வியடைந்ததாகவோ, சிதைவுண்டதாகவோ வரலாறு கிடையாது. இன்று இஸ்லாமியக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றிக் கொண்டுவரும் பல முஸ்லிம் சமுதாயங்கள் எல்லோருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இஸ்லாமிய வாழ்க்கையில் 'சொத்துப்பங்கீடு' என்பது முக்கியமான ஒன்றாகவுள்ளது. இதுவே சமூக, பொருளாதார வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைந்துள்ளது. இதனை நிருவகிக்கும் இடமாக குடும்பம் எனும் உயிரியல் அலகு காணப்படுகின்றது. இன்று இக்குடும்பங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைபற்ற சொத்துப் பங்கீடு மொத்த சமூகத்தையுமே பாதிப்பதாகவுள்ளது. இந்நிலையின் வெளிப்பாடு இன்று எம் சமூகத்தை பிழையான, விலக்களிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றும் நிர்ப்பந்தத்திற்குள் தள்ளிவிட்டிருக்கிறது. 'அடிக்கட்டுமானத்தின் வெளிப்பாடே மேற்கட்டுமானமாகும்' **(Super Structure is the reflaxen of infrastracture)** என்ற கார்ல்மார்க்ஸின் சிந்தனையுடன் இவற்றை ஒப்பிட்டு நோக்கும் போது இம்முறையற்ற சொத்துப்பங்கீடு நம் அடிப்படைகளையே சிதைக்க ஆரம்பித்திருக்கிறது.

பொதுவாக எமது தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் திருமணம் மூலம் ஆண், பெண் இருவருக்கும் முறையாக, இஸ்லாமிய அடிப்படையில் கூறப்பட்ட பங்கீடுகள் இல்லாமல் போய் பெண்ணுக்கே கூடுதலான சொத்துக்கள் வழங்கப்படுவதைக் காணலாம். வெளிப்படையான பார்வையில் இது பொருள் வளம் கொண்டவர்களாக குடும்பங்களை உருவாக்கிவிட்டாலும், உள்ளார்ந்த ரீதியில் சமூகப் பிறழ்வுக்கும், பண்பாட்டு விழுமியத் திரிபுகளுக்கும் வழிகோலுகின்றது. மேலும் இத்தகைய இஸ்லாமிய சொத்துப் பங்கீடு என்ற ஒன்று உள்ளதா என்று கேட்கும் அளவிற்கு இஸ்லாமிய மூலாதாரத்தையே நடைமுறை வாழ்வில் அழித்து கொண்டு வரும் ஒன்றாகவும் மாறிவருகின்றது.

இத்தகைய வரலாற்றுத் தவறு எங்கு விடப்பட்டுள்ளது என ஆராய வேண்டிய தேவைப்பாடு எமக்குள்ளது. ஏனெனில் எமது சமூகத்துள் காணப்படுகின்ற இத்தகைய பிற்போக்கான நிலைமைகள், முன்னுதாரணமான செயற்பாடுகளை யுடைய எம் சமூகத்தை ஏனைய சமூகங்களுக்கு மத்தியில் மேம்படுத்திக் காட்டாது. எனவே சிறந்த சமூகம் ஒன்றினை மீளமைப்பது **(Reformation)** எம் புலமைச் சமூகத்தின் கட்டாயப் பாடகவுள்ளது.

ஆரம்பகாலக் கிழக்கிலங்கை இஸ்லாமிய சமூகத்தில் ஒரு எளிமையான வாழ்க்கை முறையும் அதனோடு இணைந்த உறவு நிலைகளுமே காணப்பட்டன. இங்கு 1960களுக்கு முற்பட்ட காலகட்டத்தில் குடும்ப உறவு என்பது முக்கியமானதாக இருந்தது. சொத்துக்கள் பிரிந்து போகக்கூடாது என்பதற்காக உறவுகளிடையே திருமணங்கள் நடைபெற்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட மக்கள் செல்வம் படைத்தவர்களாக தொடர்ந் தும் இருந்து வந்தனர். ஏனையோர் மத்திய தரத்தினராகவும் **(Middle Class)** விளிம்பு நிலை மக்களாகவும் **(Lover Class)** வாழ்ந்து வந்தனர். முன்னேற்றம், சமூகச் சீர்திருத்தம், நவீனத்துவம் என்பனவைகளின் பேரில் எமது சமூகம் வீணடிக்கப்படக் கூடாது என்கின்ற ஆதங்கம் அவ்வாரம்பகால இஸ்லாமிய சமூகத்திடம் காணப்பட்டது.

இத்தகைய நிலையானது 1960களை ஒட்டியெழுந்த முஸ்லிம் அரசியல் பிரவேசங்களினாலும், புதிய கல்விக் கொள்கைகளினாலும் மாற்றமுறத் தொடங்கியது. (பதியுதீன் மஹ்மூத், சேர் ராசிக் பரீட்) 1980களின் பின்னரான புதிய கல்விச் சீர்த்திருத்தம் மக்களின் அடிப்படையான பொருளாதார அந்தஸ்து நிலை மாற்றத்திற்கு பிரதான காரணமாய் அமைந்தது. இத்தகைய கல்வியில் அதிக ஆர்வமும், மேல் நிலையும் மத்தியதர மக்களிடமே அதிக அடைவுகளைக் கொடுத்தது. இவ் வேளையில் கூடுதலான பண பலம் படைத்தவர்களிடையே உளவியல் ரீதியிலானதொரு தாழ்வு மனப்பான்மை உருவாகியது. ஏனெனில் சமூகத்திற்குள் பணம் படைத்தவர்களைவிட கல்வி நிலையில் மேம்பட்ட குழு (ஆசிரியர், வைத்தியர், பொறியியலாளர்...) உயர் மதிப்புப் பெறுவதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே இம்மதிப்பினை தமது குடும்பத்துடன் இணைத்துக் கொண்டு அதன் மூலம் தமது பொருளாதார நிலையை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ள மேல் வகுப்புச் செல்வந்தர்கள் முனைந்தனர். இதன் விளைவு உயர் கல்வி அந்தஸ்துப் பெற்றவர்களை தமது பெண் மக்களுக்கு கூடியளவு பணம் கொடுத்து திருமணம் முடித்துக் கொடுத்தனர். இப்பகுப்பு உயர் பொருளாதார அந்தஸ்த்துப் பெற்றவர்களுக்கு இயலுமானதொன்றாக இருந்தது. இதன் ஒரேயொரு நன்மை மத்தியதர, விளிம்பு நிலை மக்களுக்கும் பொருளாதார ரீதியில் ஒரு ஒன்றிப்புக்கு துணை போனதுதான். இதனால் பணக்காரர்களிடமிருந்த பணம், அந்தஸ்து நிலை என்பன மத்திய தர, விளிம்பு நிலை மக்களிடம் வந்தடைந்தமையால் பொருளாதாரச் சமநிலை இச்சமூகத்தில் நிலவியது. இத்தகைய நிலைப்பாடு ஒரு ஆரோக்கியமான சமூகத்திற்கு பொருத்தமான முறையாக இருப்பினும்

முறையற்ற சொத்துப் பங்கீட்டிற்கும் முழுமையாக பெண்ணுக்கு சொத்தைக் கொடுத்து திருமணம் முடித்துக் கொடுக்கும் நிர்ப்பந்தத்திற்கும் அடிப்படையாய் அமைந்தது.

மேலும் பிற கலாசாரத் தாக்கங்களால், குறிப்பாக தமிழ் கலாசாரத்தில் பெண்களுடன் சீதனம், சொத்து அனுப்பும் பழக்கம் கூட எமது சமூகத்தில் நுழைந்து விட்டது. தமிழ் பண்பாட்டின் படி எவ்வளவு சொத்துக்களை ஒரு பெண்ணுடன் அனுப்புகிறோமோ அவ்வளவிற்கு மாப்பிள்ளை வீட்டில் – புகும் வீட்டில் மதிப்பு இருக்கும் எனும் கருத்து எமது கலாசாரத்துடனும் கலந்து விட்டது. (ஏனோ பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்துச் செல்லும் தமிழ்க் கலாசாரத்தின் நற்பண்பாட்டை மட்டும் நமது சமூகத்தினர் விட்டு விட்டனர்)

திடீரென ஏற்படுத்தப்பட்ட இத்தகைய வரலாற்று ரீதியான மாற்றமும், புதியதொரு கலாசாரத்தின் தொடக்க நிலையும் காலமாற்றத்தால் ஒரு குடும்பத்தில் பெண்ணைத் திருமணம் முடிக்க வேண்டுமாயின் பெருந்தொகைப் பணம் சொத்து கொடுக்க வேண்டும் எனும் ஒரு கட்டாய நிலையை உருவாக்கிவிட்டது. அத்துடன் பணமும் சொத்தும் உள்ளவர்களின் பண்புகளைப் பார்த்துப் பழகும் தன்மை **(Assumilation / Acculturation)** என்பன இன்று எமது சமூகத்திற்குள் அதிகரித்து வருவது. ஆண்களையே பாரிய சுமைக்குள் தள்ளியுள்ளது.

01. தன் குடும்பத்துப் பெண் பிள்ளைகளை பல இலட்சங்களுடன் திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டும்.

02. தமக்கு எவ்வித சொத்தும் இல்லாது போவதால் தான் இன்னுமொரு குடும்பத்திடம் சீதனம் வாங்கித் திருமணம் புரிய வேண்டும்.

இவற்றின் விளைவாக இன்று பல குடும்பங்கள் பல்வேறு வகையான துன்பங்களைச் சந்திக்க வேண்டியுள்ளன. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை நாடிச் செலலல், வட்டிக்கு பணம் கொடுத்தல், பெண்கள் உயர்கல்வி பெறத் தடை என்பன பூதாகரமாய் விஸ்வரூபமெடுக்கத் தொடங்கியுள்ளன.

பொதுவாகவே இன்று அதிகமான பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை நாடிச் செல்கின்றனர். இது பொருளாதார முன்னேற்றத்திற்கு குடும்பம் என்ற அமைப்பில் உதவினாலும் மறுபுறம் பல வகையான அனாச்சாரங்களுக்கு அவர்கள் ஆட்படுத்தப்படுகின்றனர். பெரும்பாலான பெண்கள் வேலை வாய்ப்பினை நாடுவதற்கு மிக முக்கியமான காரணம் கைக்கூலி இல்லாவிடினும் ஒரு வீடாவது வழங்கும்போதே ஒரு ஆணைத் திருமணம் செய்ய முடியும் என்ற சமூக விம்பமேயாகும். இத்தகைய வெளிநாட்டு வேலை வாய்ப்பினைப் பெற்றுச் செல்லும் பெண்களுக்கு சமூகத்துள் ஒரு நிலையான அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை அவர்களை ஒதுக்கிப் பார்க்கும் தன்மையினையே சமது சமூகம் கொண்டுள்ளது.

அநேகமான மத்தியதர, விளிம்புநிலைக் குடும்பங்கள் பெண்களின் உழைப்பினா லேயே இயங்குகின்றது. ஆயினும் அங்கு அதற்கான உரிய அந்தஸ்து நிலை கூட வழங்கப்படுவது கிடையாது. மேலும் இத்தகையவர்களை எந்த ஒரு படித்த, அறிவாளிகள் என்று சொல்லப்படுகின் றவர்களும் திருமணம் முடித்ததான வரலாறு எமக்குத் தெரிந்தவரை இல்லை எனலாம். தற்செயலாக இவ்வாறான குடும்பங்களில் உள்ளவர்களை தாமாகத் திருமணம் முடிக்க வரும் ஆண்களைக் கூட படித்த வர்க்கமே எள்ளிநகையாடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இத்தகைய போக்கு கள் காரணமாக பல பெண் குடும்பங்கள் தமக்குள்ளேயே ஒடுங்கிக் கொள்ளும் உளவியலுக்கு ஆட்படுகின்றனர். இவ்வா றான நிலை ஒரு ஆரோக்கியமான சமூகத்தை எப்படி உருவாக்கும்?

இஸ்லாமிய முறைப்படி வட்டி கொடுப்பது ஹறாமாக இருக்கும் அதேவேளை இன்று அதனை விட்டால் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேறுவழியில்லை எனும் நிலைக்குப் பல குடும்பங்கள் தள்ளப்பட்டு விடுகின்றன. இதனால் வட்டி இன்று ஒரு புற அமைப்பு வியாபார நிறுவனமாக இயங்கி வருகின்றது. ஒரு ஆணுக்கு, அவனுக்குரிய முறையான சொத்துப் பங்கீட்டை வழங்கும்போது அம்முதலீட்டைக் கொண்டு குடும்பத்தை நிர்வகிக்க முடியும். ஆனால் இன்று பெண்ணுக்கு முரணான வகையில் வழங்கப்படும் சொத்துப் பிரிப்பே இத்தகைய நிலைக்கு அடிகோலியுள்ளது எனலாம்.

மேலும் இன்று திருமணம் முடிக்கும் ஆண்கள் யாரும் தம் சுய சம்பாத் தியத்தில் ஒரு பகுதிப் பணத்தையோ, அதற்கு நிகரான பொருளையோ மகராகக் கொடுத்து பெண்களைத் திருமணம் செய்து கொள்வதே கிடையாது. பல இலட்சம் கைக்கூலி வாங்கி அதில் சிறு தொகையினை மகர் செலுத்தி திரு மணம் முடிக்கின்றனர். இத்தகைய திருமணமும், வாழ்க்கை முறையும் எப்படி உண்மையான இஸ்லாமிய திருமண வாழ்க்கை முறையாகும். உடை, உணவு, பெயர் என்பவைகளை மட்டும் கொண்டு உண்மை முஸ்லிமாக அடையாளப்படுத்துவதுதானா இஸ்லாமியன் என்பதற்கும், முஸ்லிம் என்பதற்குமான வரைவிலக்கணம்? இங்கு கவனிக்கப்பட வேண்டிய அடிப்படை என்னவென்றால் முறையான சொத்துப் பங்கீடு மட்டும் போதும் முறையான திருமணத்திற்கும் வாழ் வியலுக்கும் என்பதே. முதலில் அவை களைச் சிறப்பாகக் கையாள சிந்திக்க வேண்டும்.

இன்று அதிகமான மத்திய வகுப்புப் பெண்கள் உயர் கல்வி, வேலை வாய்ப்பு என்பனவைகளுக்குச் செல்லக் காரணம் அதன் மூலம் உழைப்பது என்பதே நோக்காகும். ஏனெனில் இவைகளின் மூலமே வீடு கட்டுவதும், கைக்கூலி கொடுப்பதும் சாத்திய மாகிறது. அதேபோல பல ஆண்கள் இன்று உயர் படிப்புகளைப் படித்து படிப்பின் தகுதிக்கு ஏற்ப பல இலட்சங் களையும் வாங்கிக் கொள்கின்றனர். (பெண்களின் உயர்கல்விக்காக எந்த ஆணும் சீதனம் கொடுத்து அவளைத் திருமணம் முடிப்பதில்லை) தாம்

தாம் கற்றதற்கும் வெளிநடப்புக்கும் சம்பந்தமில்லாத வகையில் தொடரும் இவர்களின் வாழ்க்கை நெறிக்கு அடிப்படைக் காரணம் இம்முறையற்ற சொத்துப் பங்கீடே. எனவே மீண்டும் மீண்டும் சீதனத்தை வலியுறுத்தும் ஒரு சமூகக் கட்டமைப்பையே தொடர்ந்து உறுதிப்படுத்துபவர்களாக இவர்கள் அமைந்தும் விடுகின்றனர். இன்னுமொரு காலத்தில் தாம் ஒரு குடும்பத் தலைவனாக மாறும்போது அதே சுமைக்குள் தம்மை ஆள்படுத்தியும் கொள்கின்றனர். இது தொடர்ந்தும் ஒரு சுழற்சியான இயங்கியலாக சமூகத்திற்குள் வலம் வந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு தொடர்ச்சியான சமூக உயர் அந்தஸ்து **(Socila Status quo/ stratum)** உயர் படிப்பு மூலம் பெறப்படும் கைக்கூலி ஒருவரை வந்தடையும்போது இயல்பாகவே குடும்பத்தின் பொருளாதார பாதுகாப் பிற்காக தமது குடும்ப எண்ணிக்கையும் குறைக்கப் படுகின்றது. இத்தகைய காரணங்கள் மூலமாகவும் இஸ்லாமிய சமூகம் என்பது வளர் நிலைக்கு அல்லது மேம்பட்ட நிலைக்கு உயர்ந்து செல்லத் தடையாகின்றது. இத்தாக்கம் முஸ்லிம் அரசியலில் பாரிய பின் தள்ளலைக் கூட உருவாக்கும். ஆக ஒன்றுடனொன்று பின்னப்பட்ட வகையில் தொடர்ச்சியான சமூக உருக்குலைவுகளைக் இங்கு காணமுடிகின்றது.

ஒரு நுண்ணிலைப் பகுப்பாய்வின் மூலமாக, சொத்துப் பங்கீடுகளில் காணப்படும் நடைமுறைத் தன்மை யானது முரண்பட்ட வகையில் அமை யவே அதன் வழியிலாலான சமூகத்துள் குடும்பம், கலாசாரம், பொருளாதாரம், விழுமியம் என்பனவைகள் ஒரு வரையறையினைத் தாண்டிய உடை வினுள் சென்று கொண்டிருப்பதனையும் காணமுடிகின்றது.

இன்று இதன் விளைவுகளைப் பாரியளவில் சந்தித்துக் கொண்டிருக்கும் நாம் இந்நிலையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். இதற்கு ...

- இன்று நிலவும் மோசமான சொத்துப் பிரிப்பு சமூகக் கட்டமைப்பினை உடைக்க வேண்டும். இது தனியான நபர்களால் செய்ய முடியாத ஒன்று. இவற்றிற்கு விதிவிலக்காக பலர் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிய நிலையில் காணப்படும் இஸ்லாமிய சொத்துப் பிரிப்பினை முறையாகத் தொடர்பவர்களை ஒன்றுசேர்த்து ஓர் இயக்கமாகத் தொழிற்பட முனைய வேண்டும். இதன் மூலம் இச்சமூக முறைக்குள் இருந்துகொண்டு போராட வேண்டும்.
- சிறந்த புரட்சிக்கு உயர் அறிவு அந்த ஸ்து முக்கியமானது. இதனை எமது பல்கலைக்கழக நிறுவன மாணவர்கள் சிந்தித்துச் செயற்பட முனைந்தால் இங்கிருந்தே அதற்கான அடித்தளம் போடப்பட லாம். இதனால் இவை பற்றிய புரிதல் கள் புலமைத்துவ மட்டங்களில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
- பொதுவாக எமது குடும்ப அமைப்பு தந்தை வழி முறையினாலான **(Patriarcha family)** குடும்ப அமைப் பினைக் கொண்டது. ஆண் தலைமைத்துவம் குடும்பத்திற்குள் நிலவுவதால் அவர்கள் தமது

சொத்துக்களை முறையான வகையில் பிரித்து வாங்கிக் கொள்ளலாம்.

இன்றைய பல்கலைக்கழக இளைஞர்கள் சமூகத்திற்குள் ஒரு நிலையான வாழ்க்கையினைப் பெற்றுக் கொள்ளும் தனிப்பட்ட குணத்தைக் கொண்டுள்ளனர். எனவே இதனுடன் தன் குடும்பப் பங்கும் முறையாகச் சேரும்போது உண்மையான திருமணத்தில் இணைந்து சமூகத்தைச் சீரழிவு நிலையிலிருந்து பாதுகாக்கலாம் என்பதோடு நமது தனித்துவ அடையாளங்களையும் பேணிக் கொள்ளலாம்.



ஈழத்து இலக்கிய முயற்சிகள் திடீர்த் தேக்க நிலையை நோக்கி பயணித்துக் கொண்டிருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாக மாறிக் கொண்டிருக்கிறது. யுத்த காலத்தில் உக்கிரம் பெற்றிருந்த நமது படைப்பின் வேகம், யுத்தம் முடிந்த பின்னான அதன் விளைவுகளை பதிவு செய்யத் தவறிக் கொண்டிருக்கின்றதென்ற மனச்சாட்சி மட்டும் மெல்ல உறுத்த ஆரம்பித்திருக்கிறது. நல்ல கவிதையொன்றையோ, சிறு கதையொன்றையோ படித்து வெகு நாட்களாயிற்று. சீரிய இலக்கியத்தை தூக்கி நிறுத்தும் சிற்றிதழ்களின் வரவு கூட இறங்கு முகம்தான் இங்கு. இந்த அவகாசம் சிந்தித்துக் கொண்டிருப்பதற்கானதல்ல. மிக வேகமான இயங்கு தளத்தில் செயற்பட வேண்டும் என்பதற்கானதுதான்.

நமது படைப்பாளிகள் முன் இவற்றையொரு வேண்டுதலாகவே முன் வைக்க விரும்புகிறோம்.

கிழக்கிலங்கையின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவரும், ஈழத்துச் சிறுகதையுலகின் தவிர்க்க முடியாத ஆளுமையுமான 'மருதூர் கொத்தன்' அண்மையில் காலமான செய்தியறிகிறோம். ஈடு செய்ய முடியாத அன்னாரது குடும்பத்துயரில் தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கமும், துயரியும் பங்கு கொள்கிறது.

- ஆசிரியர் குழு -

# மூர்தழாவின் மூன்று கவிதைகள்

## ஏமாற்றம்

இருள் தொடரும் மர்மவெளியில்
மெல்ல மெல்ல அவிழ்கிறது ஞானம்

இன்னும் அறியப்பட முடியாத சூட்சுமமாய்
திகைத்து ஏங்குகிறது வாழ்க்கை

நமக்கு வாய்த்த வாழ்க்கையின் புள்ளிகள்
கலங்கித் தெரிகிறது
பல சமயங்களில்.

வழக்கமாய் சந்திக்கும் தெருக்கள்
நீரில் மூழ்கிக் கிடக்கின்றன

சுவரின் மிக விருப்பமான மூலையில்
நிறுத்தப்பட்டிருக்கும்
ஓவியங்களின் முன்
மறுபடியும் மறுபடியும்
ஏமாந்து விடுகின்றன கண்கள்

புலன்கள் எப்போதும் எம்மை
ஏமாற்றியே விடுகின்றன
இருத்தலை ஸ்தாபிக்கும் முயற்சியில்
காயமுற்றுத் திரும்புகின்ற அவை.

எனினும்
விரல் இடுக்குகளிலும்
குழல் முடிச்சிலும்
விரவிக் கிடக்கிறது
கருங்குயிலின் பாடல்

## உம்மாவின் கவலை

வாப்பாவுக்கு கறண்ட் தேவையில்லை
அவரின்னும் ஆமணக்கங் கொட்டையில்
விளக்கெரிக்கும் காலத்தில்தான் இருக்கிறார்
தம்பிக்கு பாடப் புத்தகங்களை மீட்டவும்
பரிசாய்க் கிடைத்த கொம்பியூட்டரில்
பயிற்சிகள் செய்யவும்
கறண்ட் தேவைப்படுகிறது.
தங்கை டீச்சரான பின்
அடுத்த வீட்டில் ஸ்திரி செய்வதை
நிறுத்திக் கொண்டாள்
இளையவளுக்கு பீடி சுற்ற
பாட்டுத் தேவைப்படுகிறது
வீட்டிலுள்ள வளர்ப்புக் கோழிகளுக்கும்
கறண்ட் அத்தியவசியமாகிவிட்டது
இது தவிர
வயசான உம்மம்மாவின்
வெற்றிலை மெல்லும் பொக்கைவாய்
சத்தத்தை நிறுத்த
வீட்டில் ஒரு ரேடியோ கட்டாயம் தேவை
இதையெல்லாம் சகிக்க முடியாமல்
சின்ன வயதில் இறந்து போன உம்மா.
நானின்னும் நிலவோடுதான்
உறவாடிக் கொண்டிருக்கிறேன்.



## பருவகாலச் சீட்டு

போத்தலில் அடைத்து வைக்கப்பட்ட கரப்பான்
வெளியேற வழியின்றித் தவிக்கிறது.
கரு விழிகள்.
சுவரில் ஓவியம் வரைந்தது யாரென்று தெரியாமல்
ரசிப்பதில்லையா?
அது மாதிரி பெயர் தெரியா அவளை
வகுப்பிலும் வெளியிலும் ரசிக்கிறேன்.
பஸ் ஸ்டாண்டின் சனநெரிசலிடையே
அடையாளமற்றுத் திரும்பும் அவளழகை
படிப்புகளின் படிப்பாய் குறிப்பெடுத்துக் கொள்கிறேன்.
பெரும்பாலும்
கையிலுள்ள பருவகாலச் சீட்டு முடியும்வரை
மதிப்பிழந்த நாணயமாய்
காயமுற்றுத்திரும்பும் மனசு




## 1.0 அறிமுகம்

பின்வரும் இக்கட்டுரை சர்வதேச ரீதியில் சமாதான இயக்கங்கள் எவ்வாறு தோற்றம் பெற்று செயற்படுகின்றன என்பதை தெளிவு படுத்து கின்றது. இதன்படி ஒரு அறிமுகத்தினைத் தருவதோடு, சமாதான இயக்கங்களின் முக்கியத்துவம் விளக்கப்படுகின்றது. சமாதான இயக்கங்களின் வரலாற்றுச் சுருக்கம், தற்கால செயற்பாடுகள் என்பன ஆய்வுக்குட்படுத் தப்பட்டுள்ளன. மேலும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 'சமூக நல்லிணக்கம்' என்னும் பாடத்தைப் பயிலும் முதலாம் வருட மாணவர்களின் நலன் கருதியும், இலங்கையில் இவ்வாறான இயக்கங்களின் தோற்றத்தை அதிகரிப்பதற்கான ஒரு ஊக்குவிப்பை வழங்குவதையும் இக்கட்டுரை நோக்கமாகக் கொள்கிறது.

யுத்தங்களும், அது நிறுத்தப்பட வேண்டு மென்கின்ற கருத்துக்களும் காலாகாலமாக இடம் பெற்று வந்துள்ளன. குறிப்பாக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் உலகெங்கும் தொடரப்படுகின்றன. யுத்த காலத்தில் இடம்பெறும் மரணங்களுக்கும், சமாதான காலத்தில் இடம்பெறும் மரணங்களுக்குமிடையிலான வித்தியாசத்தை உற்று நோக்கும் போது சமாதான இயக்கங்கள் (சமாதானத்தை உருவாக்குபவர்கள்) மிக நெடுந்தூரத்திலேயே இருந்து வருகின்றன. யுத்தகால நிகழ்வுகளைக் கொண்டு சமாதான காலத்திலும் உயிரிழப்புகளும் அழிவுகளும் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றன. ஆதலால் சமாதான இயக்கங்களின் செயற்பாடுகள் (சமாதானத்திற்காக உழைப்பவர்கள) பின்ன டைவாக இருப்பதை அவதானிக்கலாம். இத்தகைய சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் முடிவுறாமல் தொடர்ந்து செல்கின்ற போதும் அவை திருப்தியளிக்கக் கூடிய வகையில் செயற்படவில்லை என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாகும். இதனால் யுத்தங்களும், முரண்பாடுகளினால் உருவாகிவரும் சமூக நல்லிணக்கமின்மையும் உலக மக்கள் மத்தியில் பல தீவிர இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

சமாதான முயற்சிகளின் காரணமாக யுத்தங்களும், முரண்பாடுகளும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்கள் குறுங்காலத்திலும், நீண்ட காலத்திலும் இடம் பெறுகின்றன. ஆனால் சமாதான இயக்கங்களினால் எந்தளவு அழிவுகள் தடுக்கப்பட்டுள்ளன. அல்லது எத்தனை யுத்தங்கள் தடுக்கப்பட்டுள்ளன? என்பதை மதிப்பிடுவது கடினமான காரியமாகும். இருப்பினும் சமாதானத்தை உருவாக்குவோரின் தேவை உணரப்பட்டுள்ளது. இதன் போது பல கஷ்டங்கள் எதிர் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக கணிசமான மக்கள் சமாதானத்திற்கு ஆதரவாக குரலெழுப்புகின்ற நேரத்தில் பெரும் பான்மையோர் யுத்தத்தில் ஆர்வம் காட்டுவது போல் தெரிகின்றது. இதனை இன்னும் தெளிவாக விளக்கும் போது முரண் பாடுகளையும், யுத்தங்களையும் அடிப்படையாகக் கொண்டே தற்போது தயாரிக்கப்படும் திரைப்படங்கள், நாடகங்கள், தொலைக்காட்சி செய்திகள், வலைத்தளங்கள் போன்றன பெருவாரியாக இயங்கீகின்றன. எனவே மேற்போந்த தொடர்பு ஊடகங்களில் மக்களின் கவனம் அதிகரித்திருப்பதுடன் யுத்தத்தை நோக்கிய சிந்தனைகள் அவர்கள் மத்தியில் அதிகரித்து வருவதையும் காணக் கூடிய தாயிருக்கிறது.

## 2.0 சமாதான இயக்கங்களின் வரலாற்றுச் சுருக்கம்

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வெகுசன இயக்கம் கொண்ட சமதான இயக்கங்கள் அபிவிருத்தியடைந்துள்ளன. Amphictyonic leaque எனும் பெயரில் புராதன கிரேக்கத்தில், நகர அரசுகளுக்கிடையே முதலாவது சமாதான இயக்கம் தோன்றியது. இதன் அங்கத்தவர்கள் ஒருவரையொரு தாக்கக்கூடாது என்றும், மற்றவர்களின் நீர் வினியோகத்தை தடைசெய்யக்கூடாது என்றும் உடன்பட்டு வாழ்ந்தனர். இப்புராதன காலத்தில் ஒலிம்பிக் விளையாட்டுகள் கூட சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவே இடம்பெற்றன. இப் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை - ஒரு மாதத்திற்கு நிகழ்ந்தன. இந்த ஒரு மாத காலத்தின் போது நான்கு வருட யுத்த விரோத உணர்வுகள் போக்கப்பட்டன. மேலும் இக்குறித்த விளையாட்டுப் போட்டி இடம்பெறும் காலத்தில் ஆயுதங்கள் கீழே வைக்கப்பட்டன.

தொடர்ந்து மத ரீதியான மற்றும் மதச் சார்பற்ற சமாதான இயக்கங்களின் வரலாற்றுச் சுருக்கம் நோக்கப்படுகிறது.

## 2.1 மத ரீதியான சமாதான இயக்கங்கள்

பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே பிணக்குகள் தீர்க்கப்பட வேண்டுமென்ற நம்பிக்கையில் ஆரம்பகால கிறிஸ்தவ தேவாலயங்கள் செயற்பட்டு வந்தன. கி.பி சில நூற்றாண்டுகள் கழிந்த பின்னர் உரோம இராஜ்ஜிய படைப்பிரிவில் தொண்டர் படையினராகச் சேர்ந்து இயங்க மறுத்த கிறிஸ்தவாகள் விலக்கி வைக்கப்பட்டனர். இயேசுநாதரின் போதனைகளில் ஆயுதம் களையப்பட வேண்டும் என்பது முக்கியத் துவப்படுத்தப்பட்டமையால், கிறிஸ்தவர்கள் படைகளில் சேர மறுத்தனர். அதேவேளை கிறிஸ்தவ எழுத்தாளர்களும் உரோம படையில்

சேர்ந்து பணியாற்றுவதற்கு எதிரான கருத்துக்களை எழுதியிருந்தமையும் மற்றுமொரு காரணமாகும். கிறிஸ்தவர்கள் முற்காலத்தில் உலக அதிகாரம், உலக அரசியல் என்பன உரோமா புரியின் சக்கரவர்த்தியின் கைகளில்தான் இருக்குமென நம்பினர். ஆனாலும் 'நேர்மையான யுத்தக் கொள்கையின் ஸ்தாபகரான' Augustine அவர்கள், மாறிவரும் உலகத்தின் இராணுவ சக்திக்கே குறித்தளவான அனுமதியினை வழங்கினார்.

மத்திய காலத்தில் உரோம, கத்தோலிக்க தேவாலயங்கள் கிறிஸ்தவர்களிடையே யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க அல்லது கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தன. மேலும் விடுமுறை நாட்களான தூய்மையான தினங்கள்: கடவுளின் சமாதான நாள் என்றடிப்படையில் அந்நாட்களில் யுத்தம் புரிவதைத் தடுத்து வந்துள்ளன.

## 2.2 மதச்சார்பற்ற சமாதான இயக்கங்கள்

மதச்சார்பற்ற சமாதான இயக்கங்கள் இரண்டு நூற்றாண்டு கால வரலாற்றுக்கு உட்பட்டவையாகும். 19ம் நூற்றாண்டில் குறித்த சில இயக்கங்கள் தோன்றின 1815ம் ஆண்டில் The Newyork, Massachosette என்ற இரு சமாதான சட்டங்களும் தோற்றம் பெற்றன. 1816ல் 'நிரந்தர மற்றும் உலக சமாதானத்தைத் தூண்டுவதற்கான சங்கம்' உருவாக்கப்பட்டது. இதன் பின்னர். அத்திலாந்திக்கின் இரு மருங்கிலும் பல்வேறு சமாதான இயக்கங்கள் தோன்றின. குறிப்பாக 1866ல் அமெரிக்க சமாதானச் சங்கம், உலக சமாதானக் கூட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் 1841ல் Paris யிலும், 1843ல்London யிலும், 1848ல் Brussels, யிலும், 1850ல் Frank Furt யிலும் சர்வதேச சமாதான மாநாடுகள் இடம் பெற்றன.

ஆனால் சமாதானத்தினையும் நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளினால் அரசியல் ரீதியான வெற்றிகள் கிடைக்கப்பெறவில்லை. இதன் பிறகு Hugue Peasce Confrannce ஆனது பல அரசாங்கத் தலைவர்களின் பங்களிப்புடன் இடம் பெற்றது. இப்படியான நிகழ்வுகள் எதிர்பார்த்தளவு வெற்றியளிக்காத போதிலும் சர்வதேச சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான முக்கியமான சர்வதேச தாபனங்களை உருவாக்குவதற்கு பல வழிகளிலும் பங்களிப்புச் செய்தன. இதன்படி முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் சர்வதேச சங்கமும் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையும் தோற்றம் பெற்றன.

அமெரிக்காவின் கடந்த 100 வருட சமாதான இயக்கங்களினது செயற்பாடுகளும், அந்த செயற்பாடுகளின் அடிப்படை எண்ணங்களும் பின்வருமாறு அடையாளப்படுத்தப்படுகின்றது.

1890 - 1914 : இலக்குவைத்துத் தாக்குதல், பீரங்கி, மெஸின்கண் (இயந்திரத் துப்பாக்கி), பாரிய ஆயுதக்கடற்படை என்பற்றிற்கு எதிராக அபாய உணர்ச்சிகள் எழுப்பப்பட்டன.

1916 - 1921 : முதலாம் உலக யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமையும் மற்றும் சோவியத் உள்நாட்டு யுத்தத்தில் மேற்கு நாட்டவரின் தலையீட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டமையும்.

1920 : முதலாம் உலக யுத்தத்திற்கு பிரதிக்

கிரியைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வகையான இயக்கச் செயற்பாடுகள் இடம் பெற்றன.

1930 – 1939 : இரண்டாம் உலக யுத்தம் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டதுடன் ஆகாயத்தில் இருந்து சரமாரியாக வெடிக்கச் செய்யும் குண்டுகள் சம்பந்தமான மனவருத்தங்கள் எழுப்பப்பட்டன.

1957 – 1963 : அணுவாயுதங்களுக்கும், அணுவாயுதப் பரிசோதனைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

1930 – 1985 : அணுவாயுதங்களுக்கு எதிர்ப்பும், வளர்ந்து வரும் அணுவாயுத யுத்த பயமுறுத்தலுக்கான எதிர்ப்பும், அத்துடன் அணுவாயுத சூனியப் பிரதேசங்களுக்கான ஆதரவும் தெரிவிக்கப்பட்டன.

1986 – 1990 : மத்திய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தலையீட்டுக்கும், பூமிக்கு அடியில் நிகழ்த்தப்படும் ஆயுதப் பரிசோதனைக்கும், புதிய ஆயுத வரிசைப்படுத்தலுக்கும், ஆகாயத்தை இராணுவ மயப்படுத்தலுக்குமான எதிர்ப்பலைகள் எழுப்பப்பட்டன.

1991 – 1999 : யூரேனியம், சிறுவர்களை யுத்தத்திற்கு பயன்படுத்துதல், சிறிய ஆயுதங்களின் பரவல் போன்றவற்றில் அதீத கவனம் செலுத்தப்பட்டு உள்நாட்டு யுத்தங்களில் மனிதாபிமான தலையீட்டினைப் பற்றியும் சர்வதேச தாபனங்களின் செயற்பாடுகள் பற்றியுமான அதிக அக்கறை காட்டப்பட்டது.

2000 – தற்காலம் : சமாதான கலாசாரம், யுத்த தடுப்பிற்கான வலைப்பின்னல், அணுவாயுதம் மற்றும் கண்ணி வெடிகளினால் ஏற்படும் அழிவுகள் போன்றவை பற்றிய பிரச்சாரங்களும் அணுவாயுதப் பரவல், இரசாயன ஆயுதங்களின் பரவல், அணுவாயுதமற்ற இரசாயனப் பயமுறுத்தல், இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு போன்றவைகளுக்கான பாரிய எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. மேலும் வன்முறையற்ற முரண்பாட்டுத் தீர்வுக்கும், சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்குமான மனித உரிமைகளுக்கு ஆதரவு பெருகியுள்ளன.

## 3.0 சமாதான இயக்கங்களின் வகைகள்

- பொதுவான யுத்தத்தை நீக்கிவிடுவதற்கான சமாதான இயக்கங்கள்
- யுத்தத்தின் குறித்த தோற்றத்தினை நிறுத்துவதற்கான சமாதான இயக்கங்கள்
- குறித்த யுத்தத்தை நிறுத்துவதற்கான சமாதான இயக்கங்கள்

இவை அமெரிககாவிலும் ஏனைய பிரதேசங்களிலும் வித்தியாசமான அனுபவங்களையும், தந்திரோபாயங்களையும் கொண்டு இயங்கி வருகின்றன. குறிப்பாக அமெரிக்காவின் நிலக்கீழ் ஏவுகணைகளுக்கெதிரான சமாதான இயக்கங்களின் செயற்பாடுகளைக் குறிப்பிட முடியும். இந்நடவடிக்கைகள் பெண்ணிலைவாத அமைப்புக்களுடன் சேர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன. இதே போன்று பிரித்தானியாவில் Greenham Woment's Camps என்பதுடன் இணைந்து சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏனைய சமாதான இயக்கங்கள் சூழலியல் வாதிகளுடன் இணைந்துள்ளன. அவை Green peace, friends of Earth என்பனவைகளாகும். அதே போன்று பல உரிமை

பேணும் அமைப்புக்களும் தற்கால சமாதான இயக்கங்களாகச் செயற்படுகின்றன.

## 4.0 சமாதான இயக்கங்கள் - மதிப்பீடு

எல்லா வேளைகளிலும் இவ்வியக்கங்களால் சமாதானம் ஏற்படுத்தப்படுவதில்லை. சில சமயங்கள் இவை பொதுசன அபிப்பிராயத்தை முன்னெடுத்துச் செல்கின்றன. இன்னும் சில சமயங்களில் இவ்வாறான நடவடிக்கை களிலிருந்து அந்நியமாகின்றன. சில வேளை யுத்தங்கள் நீடித்துச் செல்லவும் இவை காரணமாகின்றன. ஆதலால் இவற்றின் சாதனைகளை அடையாளம் காண்பது கடினமான விடயமாகும். இதனால் இவ்வியக் கங்கள் சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக் கைகளில் வெற்றி பெற்றுள்ளனவா? இல்லையா? என்பதை மதிப்பிடுவது சிக்கல் நிறைந்ததொன்றாகும்.

மேலும் சமாதான இயக்கங்களில் முயற்சி களினால் யுத்தத்தின் / முரண்பாட்டில் சம்பந்தப் பட்ட அனைத்துத் தரப்பினரும் திருப்தியடை வதாகத் தெரிவதில்லை. அதாவது சில வேளை களில் சமாதானத்தின் நலன்கள் ஒரு தரப்பினரால் மாத்திரமே அனுபவிக்கப் படுகின்றன. அதிகமான சமாதான இயக்கங்கள் தமது நாட்டின் அரசாங்கங் களுக்குக் கட்டுப்பட்டு அவற்றுக்கு ஆதரவாக நடக்க முற்படுகின்றன. இரு நாடுகளுக்கிடையே யுத்தம் ஏற்படுகின்ற போது ஒரு நாட்டில் இயங்கும் சமாதான இயக்கம் தமது அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக மற்றய நாட்டின் நலனில் அக்கறை காட்டுவதைக் காண முடிவதில்லை. குறிப்பாக இதனை அமெரிக்காவில் காணலாம்

## 5.0 முடிவுரை

இக்கட்டுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் சமாதான இயக்கங்களின் தோற்றமும், செயற்பாடுகளும் விபரிக்கப்பட்டுள்ளன. சமாதான இயக்கங்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும் அது 19ம் நூற்றாண்டி லிருந்தே மக்கள் மயப்படுத்தப்பட்ட இயக்கமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. உலகின் பல பிரதேசங்களிலும் தோன்றிய சமாதான இயக்கங்கள் யுத்தங்களையும் / முரண்பாடுகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகின்றன. ஆனால் இந்த முயற்சிகள் யாவும் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை என்பது கவலைக்குரியதாகும்.


எனினும் இந்த 21ம் நூற்றாண்டு காலப்பகுதியில் சமாதான இயக்கங்களின் தேவை தவிர்க்க முடியாத தொன்றாகும். இன்றைய உலகம் யுத்தங்களால் சூழப்பட்டதொன்றாகக் காணப்படுவதால் இதன் தேவை உணரப்பட்டுள்ளது. எமது இலங்கையை எடுத்துக் கொண்டால் யுத்தங்களையும் அதன் கோர விளைவுகளையும் அனுபவித்துவரும் பல்லின சமூகமாகிய எமக்கு சமாதானத்துடனான சக வாழ்வு அத்தியவசியமாகின்றது. இதற்காக பல்வேறு இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றின் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட வேண்டும். ●

Notes :

David P Barash, 2002, Peace Movements Sage Publication, California, pp 28 - 54

Philip p. Everts, 1989, Where the peace Movement Goes When it Disappears Bullentin of the atomic Scientists 45 pp :26 - 30

# எண்ணெய்ச் சட்டி



ஏ.எல். நிப்றாஸ்

ஊளையிட்டு
பேய்களோடு ஏறி இறங்கி
வெறிநாய்கள்
சொறிநாய்களோடு மறிபட்டுத்
தெருவில் மலங்கழிக்கும் இரவு.

அவனும் - அவளும்
ஒரே கட்டிலில்தான்
ஒட்டி உறங்கிக் கிடக்கிறார்கள்
அவர்களின் உணர்வுகளோ
வெவ்வேறு உறவுகளுடன்
உறவாடித் திரும்ப.

தங்களின் மயிலிறகுகளும்
குட்டி போடுமென்றிருந்த நப்பாசை
நாசமாய்ப் போன மனவருத்தத்தோடும்
வருவாய்களைத் துண்டு விழ வைத்து
கணக்குகளை நிரப்பும்
கடன்களில்லாத காலையொன்று
விடியுமென்கின்ற கனவிலும்
அவனும் அவளும்.

அவர்கள் மட்டுமல்ல
சாவியைத் தொலைத்த விலங்குகளோடு
இங்கு அநேகர் அது போலத்தான்

தோற்கடிப்பட்ட காதலை
இரைமீட்டிக் கொண்டும்
வலிந்து
வாய்த்த வாழ்வை
வாந்தி எடுத்துக் கொண்டும்

அதையே அவர்கள்
வாழ்க்கை எனவும் சொல்கிறார்கள்

'பிளக் அன்ட் வைற்' நிஜத்தில்
கலர்க்கனவுகளினை பிரசவிக்கும்
குழந்தைத் தொழிற்சாலையாயிற்று
அவர்களின் - அது

நாய்களின் அதைக்காட்டிலும்
நாறிக்கிடக்கும்
அவர்களின் அதுவோ

பலகாரங்களுக்காக அல்ல
சிலு சிலுப்புகளுக்காகத்தான்
கொதிக்கிறது.

## சேரனின் 'ஆட்டோ கிராஃப்'



# வாழ்வு பற்றிய அனுபவம் அல்லது அனுபவம் பற்றிய அழகியல்

**ஏ.எம். குர்ஷித்**

கிளர்ந்து. பொழிந்து பின் விசாலிப் புற்று நின்று நிதானிக்கும் அழகியல் கூறுகளை கொண்ட படங்கள் தமிழில் எப்போ தாவது ஒரு தடவை எட்டிப்பார்க்காமல் இருப்பதில்லை. ஒரு பனிக்கீறின் சிலிர்ப்பு போலவும் ஒரு மென் பூவின் ஒத்தடம் போலவும்.

ஆனால் துரதிஷ்டவசமாக காலம் காலமாய் நம்மை ஏமாற்ற விளைகிற இலத்திரனியல் சிக்கல்களின் சூட்சுமங் களிலிருந்து தப்பித்து நம் சிந்தனையின் மரபுகளை வேறொரு தளத்திற்கு மாற்றும் பணியினை ஏற்க, வீம்புபிடித்தபடியே இருக்கிறது நம் தமிழ் சினிமா ரசிகமனம்.

நமது படைப்பாளிகள் தம் படைப்பின் கார்மானம் வேண்டி வர்ணங்களில் குழைத்து, பிரமாண்டத்துள் மூங்கி. உதறி,விரித்து திகட்டத்திகட்ட தருகிற போதும் அது நமக்கு செரிமானம் கொள்வே செய்கிறது.

நாயகர்கள் பற்றிய படிமங்கள் எமக்குள்ளேகி நம்மனத்தின் வெற்றி டமாக இருக்க வேண்டிய பகுதியையும் சேர்த்து அடைத்தபடியாகவே இருக் கிறது. தேகத்தை சிலுப்பி, மீசையை முறுக்கிக் கொண்டு நாயகர்கள் கோதாவில் இறங்கும்போது நம் என்பின் லட்சைகளில் முயங்கிப்போயிருக்கிற

அத்தனை ஹோர்மோன்களும் வீரியத்தோடு துள்ளிக்குதிக்கிறது. அம்மாத்திரத்தில் நாம் ஆழச் சகதியுள் அமுங்கிப் போகிறோம் மீள முடியாத படிக்கு.

காலவெளியின் ஜீவநதியில் அள்ளுண்டு போகும் நமது தமிழ் சினிமா, பௌதீக நெறியிலும், இயங்கியலின் தரத்திலும் வளர முடியாத படிக்கு அதன் மாயையின் பேய்நகத்துள் சிக்குண்டு கிடக்கிறது.

தமது படைப்பினை வணிக ரேசில் முந்த வைக்கும் எண்ணம் நடு மண்டையில் கணப்பதால் நமது படைப்பாளிகள் அக, புற எண்ண எழுச்சியின் விஸ்தாரத்தை – நடைமுறைச் சிக்கல் பற்றிய மாற்று வடிவத்தை – உளவியல் தர்க்கங்களின் நியாயங்களை – செவ்வியல் ரசனையை தவறியும் தொட்டுப் பார்க்க முனைவதில்லை.

காசையிட்டு அதனை மடங்காக்க வேண்டும் என்கின்ற ஒரு வழிப்பட்ட நப்பாசையின் பின்னணிதான் பிரபல்ய நாயகர்கள், துகிலுரியும் நாயகிகள், கனவுகளினை கடக்கும் மேல்நாட்டு லொகேஷன்கள், காதுகளின் உள்ளறைகளின் மோதித் தெறிக்கும் வாத்திய முழக்கங்கள் என்கிறஎளிய சமன்பாட்டிலிருந்து விடுபட முடியாததாக்கிறது.

நல்ல திரைப்படங்களை தேட முனையும் ரசிக மனங்களில் அரூபங்களின் சாயல் படியும் போது அவற்றோடு சமரசம் செய்ய முடியாது, அவற்றை புறந்தள்ளும் சிரமத்தை ஏற்க வேண்டியிருக்கிறது. நமது படைப்பாளிகளின் பிரக்ஞையின் உலகம் தலைமுறைகளின் இடைவெளிகள் கடந்தும் தெளிவற்றே காணப்படுகிறது. நுட்பம் சார்ந்த நுட்சுமங்களை நன்றாய் கற்றுணர்ந்திருந்த போதும் அழகியல் சார்ந்த மென்னுணர்வுகளை தொட்டுப் பார்க்க தயங்கிய படியே இருக்கிறது அவர்களது சிருஷ்டி மனம்.

காலத்தின் ரௌத்திரத்தில் அள்ளுண்டு விதிர் விதிர்த்துப் போகும் தமிழ் சினிமாக்களில் சில பொழுதில் மின்னல் கீறாய் சில கலைப்படைப்புக்கான பிரயத்தனங்கள் அல்லது மைய நிலை திரை வடிவங்கள் செய்யப்படுவது முண்டு. இந்த முயற்சிகளின் முகிழ்வாய் அண்மைக்காலத்தில் பார்க்கக் கிடைத்த 'ஆட்டோ கிரா∴ப்' திரைப் படத்தை சொல்லி வைக்கலாம்

சேரனின் 'ஆட்டோ கிரா∴ப்', மூன்று விதங்களில் முக்கியமானதாக எனக்குப் படுகிறது.

01. ஒரு மனிதனின் வாழ்வில் நான்கு வேறுபட்ட கூறுகளின் இலட்சணத்தை பெருமளவு சினிமாச் சாயம் தொற்றிவிடாது அதன் பாட்டிலேயே பிரஸ்தாபிக்க முனைந்திருப்பது.

02. பாத்திரங்களை கையாளுகின்ற யுக்தியின் வெளிப்பாட்டில் தெளிவான பார்வையை முன் வைத்திருப்பது.

03. பாத்திரங்களை பயன்படுத்துகிற வகைமையில் அவற்றின் கூறுகளை தெளிவாக வெளிப்படுத்தியிருப்பது.

அது மட்டுமல்லாது,

'ஆட்டோ கிராஃப்', சாதாரண சினிமாக்களின் ஒத்த பண்புகளிலிருந்து வேறுபட்டு சில குணங்குறிகளை காட்டுகிறது. அவை –

அ. அழகியல் சார்ந்த கவனயீர்ப்பு

ஆ. எல்லோரினையும் அனுபவ ரீதியில் சுரண்டிப் பார்க்கும் கதைக்களம்.

இ. ஒத்த முனையிலிருந்து பயணப்பட்டு எந்தக் கிளைத்தல்களையும் உள்வாங்காது அடுத்த அந்தத்தை நேர்கோட்டுப் பாதையில் சென்றடைகின்ற அதன் தன்மை

ஈ. சராசரி வாழ்வை படம் பிடித்திருக்கும் லாவகம் போன்றவைகளை அடையாளமாக்கலாம்.

செந்தில் (சேரன்) என்கின்ற பாத்திரம் தன்னுள் அடைந்து போயுள்ள இறந்த காலங்களின் சிதைவுகளை, எம்பிக் குதித்து சட்டகங்களை மீறநினைக்கும் அதன் லாகிரியை,மெல்லனத் தொடங்கி, பின் வலுத்தொலிக்கும் அதன் நோவினையை அவர் பார்வை வழி விரித்துச் செல்வதாக அமைகிறது படம்.

படம்,சேரனின் கடந்து போன வாழ்வியல் கோலங்களை விபரிக்கிறது. சேரன் வாழ்வை நமது வசதி கருதி நான்காகப் பிரித்துப் போடலாம்.

01. அவருடைய விடலைப்பருவத்து வாழ்வு

02. காதல் தொற்றும் வாழ்வு

03. நட்பின் பாற்படுவதான வாழ்வு

04. திருமணம் சார்ந்த வாழ்வு

விடலைப்பருவத்து வாழ்வு. அது படத்தின் ஜீவனுள்ள பகுதியாகிறது. ஒரு வெற்றுப்புள்ளியில் தொடங்கி, அக வெளி பரவி சப்தநாடியைச் சிலிர்க்கச் செய்யும் தம்பூராவின் இசைவடிவமாகிறது அது.

சேரன் தான் உயர்பள்ளி காலத்தில் சந்தித்த பெண்ணுடன் கொண்ட ஈடுபாட்டை கலாசார பின்புலம் சற்றும் கெட்டுவிடாத படிக்கு பவ்வியமாக விபரிக்கப்படுகிறது. தன் உலகத்தின் அளவு பிடிபடாது தன் நேசத்துக் குரியவளுக்காக பாலத்துக் கட்டைச் சுவரில் அகலித்த விழியோடு காத்திருப்பது, பள்ளிவிழாவில் நாடகத்துக்கான பெண் வேசம் கட்ட பாவாடை,தாவணி கேட்டு அவள் முன் எச்சில் விழுங்கி அவஸ்தைப்படுவது, பாடசாலை கடைசி நாட்களில் தோழியின் முடிக்கற்றையை நேர்த்தியாய்க் கத்தரித்து பத்திரப்படுத்துவது, பிரிவின் கடைசி கணங்களில் இருவரும் முகம் பார்க்கும் போது தங்கள் உறவின் பெறுமானம் பிடிபடாது உள்ளுள் சிறு பொறியாய் வெதும்புவது என அத்தனையும் அதன் இயல்பு பிசிறு தட்டாதபடிக்கு காட்சிகளின் பின்னலினால் நெய்யப்பட்டிருக்கிறது. சின்ன வயது சேரனாக நடித்திருக்கும் சிவப்பிரகாசமும்,மல்லிகாவும் பாத்திரத்தின் வழிவாழ்ந்திருக்கிறார்கள். வெட்கம், குறுகுறுப்பு, வெருட்சி, எள்ளல், குறும்பு என அத்தனையிலும் கவனயீர்ப்புப் பெறுகிறார்கள்.

'அழகி'யின் தொடர்ச்சி போன்ற சாயை நிரடினாலும் கதைக்காகத் தெரிவு செய்த களம், வேறுபட்ட நிலையின் அனுபவவயப்பட்ட மனச்சூழல் என்பது கொண்டு தனித்துப் பார்க்க முடிகிறது.

'ஆழப்புழா' ஆற்றின் அழகை, அதீ தன்னுள் புதைத்து வைத்திருக்கும் இரகசியத்தை,சுற்றிவர திட்டுத் திட்டாய்

நுரைத்தபடி இருக்கும் பசுமையை படம்பிடித்தபடியே நகர்கிறகமரா அந்த ஆற்றில் படகுச் சவாரியின் போது சந்திக்கின்ற புதுமுக நாயகி கோபிகா வோடு சேரன் கொள்கிற காதலை ஒரு குயிலின் மொழியில் பேச விளைகிறது. கோபிகாவை கண்ட மாத்திரத்தில் சேரன் நரம்பறுந்த வீணைபோலாவதும், மலையாலக் கரையின் கல்லூரியில் இருவரும் போராடி காதலைப் பத்திரப்படுத்துவதும்,மரபியல்சார்ந்த செயற்பாட்டின் அறுந்துபோகாத சங்கிலியால் கட்டுண்ட சமுதாயம் காதலை துவம்சிப்பதும், நாயகியின் வாழ்வு வேறொருவரோடு சங்கமிப்பதும் மிக நுண்ணியதாய், ஈறில்கூட பிசகு வராது பதிவாகியிருக்கிறது. தொடர்ந்த மானமாய் நாயகன் தன்னை, தனக்கான படிம நிலையை மறந்து குடித்தல், தெருவோரம் குப்புற விழல், சிகரட்டால் தன்னையே சுட்டுக் கொள்ளல் என்று தேவதாசி கால படத்தின் தன்மையை கொளுவி இழுத்து வந்திருக்கிறார் இயக்குனர் சேரன். இந்த ஏற்பு படத்தின் வார்ப்பினுள் பொருந்தாது போகிறது.

வாழ்வின் நோவினையால் பற்றி எரியும் சேரனை தட்டி நிமிர்த்தி உறுதிப்படுத்துகிற அன்புத்தோழியாய் அறிமுகமாகிறார் சிநேகா. நட்பின் அனுபவப் புரிதலை அதன் பெறுமானங்களை, நாகரீகம் மீறாத அதன் எல்லையை சொல்ல விளைகிறது. இந்தப் பகுதி. ஏதாவது செய்தி சொல்ல வேண்டும் என்கிற படைப்பு மனம் கொண்ட சேரன் இதில் அவருடைய 'பொற்காலம்',போல ஊனம் பற்றிய வாழ்வை படம் பிடிக்கிறார். இது படத்தில் வெட்டியெடுத்து ஒட்டியது போல்தனித்து துருத்தி நிற்கிறது. எடுத்த மாத்திரத்தில் சிநேகா உபதேசம் புரிவதானது பிரசாரத்தின் வாடையடிக்கிறது. காட்சிகளை நேர்த்தியான முறையில் அடுக்கிச் செல்வது இந்தப் பகுதியின் உற்சாகம் நீர்த்துப் போகாதபடி பார்த்துக்கொள்கிறது.

கனிகாவோடு திருமணத்தில் இணையும் பகுதி, புனைவு பற்றிய விதியை கேள்விக்குள்ளாக்கிறது. காட்சிபற்றிய பார்வைக் கோணங்களின் வரைமுறைநிலையினை ஓரம்தள்ளிவிட்டு உள்ளே நுழைவோமானால் ஒரு கல்யாண வீடியோ நாடா பார்ப்பதையொத்த பிரமிப்பைத் தருகிறது இந்தப் பகுதி. திருமணம் பற்றிய காட்சிப்படுத்தல் தேர்நிலை அனுபவத தோடு சிறு நெருடல் கூட இல்லாது. ஒரு ஒற்றை இழையில் பயணப்பட்டு கீறல்கூட விழாதவாறு முடிந்து போகிறது.

படத்தின் ஆதார சுருதியை நிர்ணயிப்பதாய் அதன் ஒளி வடிவம் அமைகிறது. அது படத்தின் அழகு கூடிவர பெரிதும் ஒத்துழைக்கிறது. நான்கு கால வரம்புகளையும் நான்கு ஒளிப்பதிவாளர்கள் கையாண்டிருக்கிறார்கள். இது தமிழ் சினிமாவைப் பொறுத்தவரையில் ஒரு புது முயற்சி. இதனால் கவனயீர்பு கூடிவர ஒவ்வொரு காட்சியையும் பார்க்க முடிகிறது.

வெளியுலகங்களின் நாகரீகங்களை சண்டித்தனம் புரியாது அதன் இயல்பு நிலை பிசிறுதட்டிவிடாது தன்னுள் ஒரு கவிஞனின் லாவகத்தோடு விழுங்கியிருக்கிறது கமரா. இயற்கையின் லயத்தை தீவிரம் சார்ந்து பார்க்காது கதையோட்டத்திற்கேற்ப மெத்தனமாய் நகர்கிறது கமராவின் கோணம். கிராமத்தின் உள்ளெங்கும் தலைநீட்டிச் சிரிக்கும் வயல் – அதன் பரந்து பட்ட வானம் –

புழுதியிறைக்கும் அதன் தெரு என அனைத்தும் கச்சிதமாய் விரிகிறது காட்சியின் தளத்தில். எந்தவொரு இடத்திலும் அதீத ஒளியின்மை படத்தின் உண்மைத் தன்மையை இன்னும் அதிகரிக்கிறது. தேவையான இடங்களில் போதுமான ஒளி கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர எங்கும் ஒளியின் அதீத இடைச் செருகல் இல்லை. நகரத்தைக் காட்ட விளைகிற பகுதிகளில் சூழலுக கேற்ப கமரா சற்றுப் பரபரக்கிறது. ஒரு துண்டுக் கேரளாவை, அதன் படித்துறையை, அதன் படகுச் சவாரியை இயற்கை தரும் ஒளியை மட்டும் துணையாகக் கொண்டு யாருக்கும் வசப்படாது அள்ளி இறைத்தபடியே தாவுகிறது கமரா.

படத்தின் இன்னும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பகுதி ,நெறியாளுனரின் கவனயீர்ப்பு. கால வெளியின் மாற்றங்களைக் காட்டுவதில் மிகவும் பிரயத்தனம் எடுத்திருக்கிறார். ஆடையலங்காரங்கள். அரிதாரங்கள் ,புறவெளிச் சூழல்கள், நாட்டிய அசைவுகள் என அத்தனையிலும் அவ்வவ்காலங்களின் படிவுகள் தெள்ளெனப் பதிவாகியிருக்கிறது. களரிச் சண்டை, யானை விளையாட்டு என கேரளாவின் மரபார்ந்த சாத்தியப் பாடுகளும் படமாகியிருக்கிறது. இன்னொரு நாளில் நாயகன் கேரளாவுக்கு மீண்டும் செல்லும் போது புறவெளிச் சூழலில் புதிய மாற்றம் தெரிவதாகக் காட்டப்படுகிறது. படகுகளின் நவீனத்துவம்,படகுத்துறையின் புதிய அமைப்பு, மனிதர்களின் நாகரீக வளர்ச்சியால் தோற்றம் பெற்ற கட்டடக் கலை என கால வளர்ச்சியின் போக்கை ஜே. கே. – மணிராஜ் என இரு ஆர்ட் டைரக்ரரின் வழி காட்டியிருக்கிறார் இயக்குனர் சேரன்.

படத்தில் இன்னொரு சுட்டியாக இசை இருக்கிறது. (பரத்வாஜ்) துல்லிய நீரோடையாய் சலசலக்கும் இசையில் பாடல்கள் அத்தனையிலும் சுவையின் கதகதப்பும். மயிலிறகின் ஒத்தடமும் இருக்கிறது. ஆனால் படத்தின் பின்னணி இசை கவனப்படத் தவறியிருக்கிறது. தென்றலாய் உரசவேண்டிய இடத்தில் புயலாயும்,புயலாய்சீறவேண்டிய இடத்தில் தென்றலாயும் இருக்கிறது. கால கட்டங்களின் பரிணாம வளர்ச்சியின் ஒவ்வொரு அங்குலத்திலும் கவனம் கொண்ட சேரன் இசையில் தன் பார்வையை முழு மனத்தோடு ஈடுபடுத்தாதது போலவே தெரிகிறது. மாறுதல்களின் கால இடைவெளிகளில் இசை கலவாது நவீனத்துவத்தின் சாயல்படர்ந்த படியான ஒத்திசைவோடே கடந்து செல்கிறது.

படத்தின் உண்மைத்தன்மை குலைந்து போகாமல் இருக்கவும் படத்தினை கோர விகசிப்புகளிலிருந்து பாதுகாக்கவும் தேர்ந்தெடுத்த திரைக்கதை ஒரே தளத்தில் நகரும் காட்சியோடும் அதன் அழகியலோடும் ஒட்டிப் போனாலும் அது படத்தினை நீளமாக உணரவைப்பதை தவிர்க்க முடியாமல் இருக்கிறது.

எல்லோருக்கும் பரிட்சயப்பட்ட வாழ்நிலை அனுபவத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி சொல்லியிருக்கும் பாங்கு ஒரு முதிர்ச்சியான கலைஞனாக சேரனைப் பார்க்கத் தூண்டுகிறது. படம் பார்த்துத் திரும்புகையில் முதுகு வடத்தை 'தண்', என ஏதோ ஒன்று குளிர்ப்பிக்கின்றது. நேர்மாறாக உள்ளத்தை இன்னுமொன்று பிசைகிறது. இதுதான் சேரனுக்குக் கிடைத்த வெற்றி போலும். ●

# கொல்லப்படுதல்



தொலைபேசி அழைப்பின் முனையில்
எச்சில் விழுங்கியபடி
காத்துக்கொண்டிருக்கையில்
தூக்குத்தண்டனையை எதிர்கொள்ளும் வெறிப்புடன்
மறு முனையை
நீதான் அலட்சியம் செய்தாயா?
தொண்டை வறண்டு
கண்ணீர் ததும்பும்
தூக்கம் வராத இரவுகளின்
வேதனை பற்றித் தெரியுமா?
அதுவும்
காற்றாடியை நிறுத்திவிட்டு
வியர்வை வடிகின்ற மென்குளிரின் -
மூன்றாண்டு கால
தனிமை வாழ்க்கை பற்றித் தெரியுமா?
கொல்லப்பட்டபடியே -
நாட்களை கடத்திச் செல்லும் அவஸ்தையை
நீ அனுபவித்திருக்கின்றாயா?
அணு அணுவாய் நான் கொல்லப்படுவதற்கும்
கொஞ்சம் கொஞ்சமாய் நீ வாழ்வதற்கும்
நீ முடிவெடுத்த பிறகு
அந்த மிகப்பெரிய தண்டனையை -
அறிந்திருக்க மாட்டாய்தானே!

**றபியுஸ்**

அம்ரிதா பிரீதம் எழுதிய 'சாரா என்றொரு பெண்' என்கின்ற ஒரு வாழ்க்கைக் குறிப்பின் சிறு பகுதியை வாசித்துக் கொண்டிருக்கிறேன். அல்லது வாசித்து முடித்துவிட்டேன். அல்லது வாசிப்பதற்காக கையில் எடுத்துள்ளேன். இதில் எதைச் சொல்ல முடியும் என்பது பற்றி என்னால் எதுவுமே சொல்லமுடியாதா?

கடைசிப்பக்கத்தின் கடைசி வரியையும் வாசித்து விட்டேனா? அப்படியென்றால் அது எனக்குள் எதையாவது நிகழ்த்தியிருக்க வேண்டும். அது எனக்குள் எதையாவது நிகழ்த்தும் என்பது எனக்கு முன்னமே தெரியுமா? அந்தப் புத்தகம் எனது அறையில் இருக்கிறது என்பதால் அப்புத்தகத்திற்கும் எனக்குமான உறவு பற்றி பொய்சொல்லிக் கொண்டிருக்கின்றேனா?

இப்படித்தான் ஒவ்வொரு விடயங்களையும் என்னால் எதிர்கொள்ள முடிகிறது. நேற்றிரவு தலைவலியால் மிகக் கடுமையாகச் சிரமப்பட்டேன் என்தை இன்று பகல்தான் என்னால் உணர முடிகிறது. என்னை அறியாமல் என் இயல்பு நிலையிலிருந்து நான் என்னை இழக்க நேர்வதை என்னால் தவிர்க்க முடியாமல் இருப்பதாக யாரும் சொல்லி விடக்கூடாது என்று நான் பயப்படும் அபாயம் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

தூக்கம், பசி, இரத்த ஓட்டம், உலகம், ........ இவைகள் என்றால் என்ன என்று எந்த சந்தர்ப்பத்திலும் நான் யாரிடமாவது கேட்டுவிடுவேனா என்கின்ற பயம் என்னைத் துரத்திக் கொண்டே இருக்கின்றது. நண்பர்களுக்குப் புலப்படாத, உறவுகளுக்குப் பரீட்சையமில்லாத, விஞ்ஞானங்களுக்கு சாத்தியமற்ற ஒரு உயிரரிப்பு நோய் என்னை என்னிடமிருந்து ................ நான் என்ன எழுதிக் கொண்டிருக்கிறேன்?

# இலங்கையின் வறுமையும், அதனை ஒழிப்பதற்கான செயற்றிட்டங்களும்

சுலைஹா எஸ். முஹம்மட்

வறுமை, அபிவிருத்தி மற்றும் சமாதானம்என் பனவற்றுக்கான மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது. 21ம் நூற்றாண்டின் உதயத்திலும் கூட வறுமை மனித குலம் எதிர் நோக்குகின்ற மிகப்பாரிய பிரச்சினையாக இருந்து வருவது மட்டுமன்றி வறுமையின் பரிமாணங்கள் குறை வருமானங்கள் மற்றும் நுகர்வு என்பவற்றிலிருந்து மனித அபிவிருத்தியின் ஏனைய துறைகளில்காணப்படும குறை பாடுகள் என்ற நிலைக்கு மாற்றமடைந் துள்ளன. சமூகத்தைக் குலைத் துவிடும் அச்சுறுத் தலைக் கொண்டிருக்கும் பெருந்தொகையான மோதல் நிலமைகளின் ஆணி வேராகவும் வறுமை இருந்து வருகின்றது.வருமானமின்மை அல்லது ஜீவனோபாய வழிமுறைகள் இல்லாத நிலை என்பவற்றின் விளைவாகவே வறுமை தோன்றுகின்றது.



இலங்கை அபிவிருத்தியடைந்துவரும் நாடாகும். பௌதீக வாழ்க்கைப் உயர்வாக இருந்தாலும் மக்களினதும் வாழ்க்கைத் தரம் இங்கு உயர்வடைய வில்லை. அதிகரித்த சனத் தொகையும் வறுமைக்கு ஒரு காரணமாக காணப்படுகின்றது. வறிய மக்களது இன்னல்கள் இன்னும் பூரணமாகத் தீர்க்கப் பட வில்லை. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வறியமக்களது வறுமையை ஓரளவு நீக்கு வதற்காக பல மானியத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டும் வறுமை ஒழிந்ததாக இல்லை. இலங்கையைப் பொறுத்தவகையில் வறுமை மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. நாட்டின் குடித்தொகையில் 24.4 சதவீத மக்கள் 1990,91 காலப்பிரிவின் போது தேசிய வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வந்ததாக உலக வங்கி (1995) சுட்டிக் காட்டியுள்ளது.

தொகை மதிப்பு புள்ளிவிபரங்களின் பிரகாரம், 1995-96 இல் 26.7 சதவீத குடும்பங்கள் வறுமையில் இருந்து வந்தன. நாளொன்றுக்கு ஒரு டொலருக்

கும் குறைவான வருமானம் பெறுபவர்கள் 1996ல் 6.6 சதவீதத்தினராகவும், இரண்டு டொலருக்கும் குறை வான வருமானம் பெறுபவர்கள் 45.4 சதவீதத்தினராகவும் இருந்து வருகின்றனர். அதன்பின் 1998ல் சமுர்த்தி நிகழ்சித் திட்டம் வறிய குடும்பங்களை இலக்காகக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்சித் திட்டமாக இன்றுவரை இருந்து வருகின்றது.

இவ்வாறான வறுமையைக் கொண்டிருக்கும் வறியவர்கள் யார் என்பதனை பார்போமாயின், பொதுவாக வறுமையின் அளவு தலைக்குரிய வருமானம், நுகர்வுச் செலவு அல்லது கலோரி நுகர்வு என்பவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. பூகோள அமைவிடம், பொருளாதார அந்தஸ்து, பால் மற்றும் சாதிய வேறுபாடுகள், இனத்துவம் போன்றவை வறியவர்களிடையே வறுமை தொடர்பான வேறுபாடுகளை எடுத்துக் காட்டும் விடயம் என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் அதன் 1997ம் ஆண்டைய அறிக்கையில் வறுமை ஒழிப்புக்கு அவசியமான நடவடிக்கைகளுக்கென ஆறு முன்னுரிமைத் துறைகளை இனங் கண்டு கொண்டாலும் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வறிய மக்களது வறுமையை ஓரளவு நீக்குவதற்காக பல்வேறு மானியத் திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றன.

மானிய விலையில் உணவுப் பொருட்கள், பசளை, கிருமிநாசினிகள் வினியோகம், இலவசமருந்து, சுகாதார வசதிகள், இலவசக்கல்வி, இலவசப்பாடசாலைப் பொருட்கள் வினியோகம், புலமைப் பரிசில்கள், மகாபொல பரிசில் திட்டம் முதலான வகையில் இலங்கை மக்களது வறுமையைக் குறைப்பதற்கான சமூக நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப் படுத்திய சமுக நல செயற்திட்டமாக 'உணவு முத்திரை திட்டம்' காணப்படுகிறது. இலங்கையின் 17 மாவட்டங்களில் முழுமையாகவும் வடக்கு – கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களில் குறைந்தளவிலும் இத்திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. 1990 முதல் வடக்கு – கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் உணவு முத்திரைத் திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. 1991இன் கணிப்பீட்டின் படி 18,88,194 குடும்பங்களைச் சேர்ந்த 67,95,849 மக்கள் உணவு முத்திரைகளை பெற்றுள்ளனர்.

உணவு முத்திரைத் திட்டமானது இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே வெவ்வேறு வடிவங்களில் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் கூப்பன் புள்ளிக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்பட்டது. பின்னர் உணவு முத்திரைகள் பணப் பெறுமானத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் வறிய மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தீர்ந்தன எனலாம்.

அடுத்து அறிமுகப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுள் ஒரு சிறப்பான திட்டமென ஜனசவிய **(janasaviya)** திட்டத்தைக் குறிப்பிடலாம். வறிய மக்களைப் பெறுத்தவரையில் ஜனசக்தி திட்டம் ஒரு வரப்பிரசாதமாக காணப்பட்டது.

இந்நிகழ்ச்சிதிட்டத்தில் மொத்தம் பயன்

பெறுவோர் 2,97,000 குடும்பங்களாகும். இவர்களுக்கு வழங்கப்பட்ட நன் கொடையானது அடிப்படைத் தேவை களை ஏற்படுத்திக் கொள்வதில் ஆரம்பி ப்பதாகும்.

இங்கு இரு வருட காலத்தின் பின்னர் பெறப்படும் சேமிப்புத் தொகையான **25,000/=**வை குறித்த குடும்பம் நிரந்தரமான ஒரு தொழில் வாய்ப்பை அமைத்துக் கொள்ள,ஒரு மூலதனமாக பெற்றனர். இருந்தும் இத்திட்டம் வெற்றியளித்ததாக இல்லை. வறிய மக்களை இரண்டு வருட காலம் எது வித தொழிலும் செய்யாமல் சோம்பி இருக்க இத்திட்டம் வைத்தது.

கடைசியாகவும், இதுவரையிலும் அமுலில் இருக்கும் ஒரு மிகமுக்கியமான நிகழ்ச்சித் திட்டமாக 'சமூர்த்தி' காணப் படுகிறது. 1995 தொடக்கம் செயற்படுத் தப்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அமுலாக்கலில் சமூர்த்தி அதிகார சபை தவிர சமூர்த்தி ஆணையா ளர் நாயகம் திணைக்களமும்,வறியோர் நிவாரண திணைக்களமும் ஈடுபட்டு வருகின்றது. இத்திட்டத்தின் ஆரம்பம் தொடக்கம் அமுலாக்கப்பட்டு வந்து ள்ள பல்வேறு செயற்றிட்டங்களினூடாக ஊடாக வறுமையொழிப்பில் ஓரளவு வெற்றியைக் கண்டுள்ளதைக் காண லாம்.

இச்சமூர்த்தித் திட்டமானது பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த வகையில் கட்டாய சேமிப்புக்கள், சுயவிருப்பிலான சேமிப்புக்கள்,சனசமூக செயற்றிட்டங்கள்,சமூர்த்திகொடு கடன் திட்டம், துரிதப்படுத்தப்பட்ட கடன் திட்டம், சமூர்த்தி அபிவிருத்திக்கடன் திட்டம்,சமூர்த்திதொழில்முனை கடன் திட்டம். சமூர்த்தி குத்தகைத் திட்டம், சமூர்த்தி வங்கிச் சங்க நிகழ்ச்சித் திட்டம்,சுயவேலைவாய்ப்புத் திட்ட மென பல வடிவங்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. பல சலுகைககளை அவர்களின் வருமானத்திற்கு ஏற்ற வகையில் வழங்கி உதவி செய்து வருகின்றது. சகல வழிகளிலும் கடன் திட்டங்களை வழங்கி படிக்காத பாமரமக்களுக்கும் தொழில் வாய்ப்புக் களை ஏற்படுத்துகின்றது.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவி னால் கொண்டு வரப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டம் கிராமிய நகர அபிவிருத்தி திட்டமாக காணப்படுவதோடு சேமிப்பு, முதலீடு போன்றவைகளையும் ஊக்கு வித்து வருகின்றது மேலும் இது பல்வேறு ரீதியில் தொழில் வாய்ப்புக்களை வழங்கியது. 2000ம் ஆண்டில் வங்கித் தொழில் அதாவது முகாமைத்துவப் பொறுப்பு பட்டதாரிகளுக்கு வழங்கப் பட்டது. இச் சமூர்த்தித் திடடத்தினால் 2000ம் ஆண்டில் **2 Million** மக்க ளுக்கு மேற்பட்டோர். பயனடைந்தனர். சுகாதார, சமூக நலத்திட்டங்களும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. இருந்தும் இத்திட்டம் தோல்வியைத் தழுவியுள்ளது. இதற்கு மேல்மட்டத் திலுள்ளவர்கள் பணங்களை சுரண்டுதல், திட்டமிடப்படாத முகாமைத்துவம், பிரயோசனமின்றிய இடங்களுக்கு அபிவிருத்தியைக் கொண்டு செல்லுதல் போன்றகாரணங்களைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான வறுமை இலங்கையை மட்டுமன்றி உலகின் பல பகுதிகளை கொடூரமாகப்பீடித்துள்ளது. தென்னாசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள், அயன மண்டல நாடுகள் போன்றஉலகின் பல

பகுதிகளையும் ஆக்கிரமித்துள்ள தென்பது நாமறிந்த உண்மை.

இந்த வறுமையை ஏன் ஒழிக்க வேண்டும்? எவ்வாறு ஒழிக்க வேண்டும்? என்பன போன்ற சில வினாக்கள் நம் மனக் கண்முன் நடமாடுகின்றன. இந்த வகையில் வறுமை ஒழிப்பதற்கான உத்தியொன்றுக்கு மூன்று அடிப்படை அம்சங்கள் அவசியமாகும்.

01. வறியவர்களுக்கு சக்தியை ஊட்ட வேண்டும். அந்த நிலையில் அவர்கள் தமது வாழ்க்கையின் மீது தாக்கத்தை எடுத்துவரும் விடயங்கள் மீது நிர்ணயகரமான ஒரு பங்கினை வகிக்க முடியும்

02. வறுமையொழிப்பு முயற்சியின் முக்கிய பங்காளர்கள் ஒருமித்த அணுகுமுறையொன்றைப் பின்பற்றும் விதத்தில் ஒன்றாக இணைதல் வேண்டும்.


03. வறுமை தொடர்பான சவாலை சமாளிக்கும் பொருட்டு இந்த தரப்பினர்கள் அனைவரும் ஒரு கூட்டு உத்தியை வகுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு பரஸ்பர புரிந்துணர்வும் ஒருவருடன் ஒருவர் சமரசம் செய்யக்கூடிய ஆற்றலும் அவசியமாகும்.

வறுமையை ஒழிக்கும் விஷயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் ஒரு முக்கியமான பங்கினை வகித்து வருவது அவசியமாகும். அரசாங்கம் மாற்றியமைக்கப்பட்டாலும் வரும் அரசாங்கம் இதனை தனது முக்கிய குறிக்கோளாக எடுத்துச் செயற்பட வேண்டும். இதில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். அரசியலில் ஊழலை ஒழித்து அரசியல் பங்கேற்பினை மேம்படுத்தி நாட்டின் அபிவிருத்தியிலும் பொருளாதார விருத்தியிலும் அக்கறை செலுத்த வேண்டும். வறியவர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பான சுதந்திரமான நிதித்துறையில் மக்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் ஒரு சமூக சூழல், குடியியல் உரிமைகள் தொடர்பான கல்வி என்பன வறுமை யொழிப்புக்கு அவசியமான பங்களிப்புக்களை செய்யும் என்றும் நம்பலாம். ●

துணை நின்றவை


1. Sectoral and provincial poverty lines for SL.
2. Samurdhi National Programme for Poverty Alleviation - Samurdhi Au thority of SL.
3. பொருளியல் நோக்கு – 2000.


ஒரு பெண்ணை இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டுந்தான் புரிந்து கொள்ள முடியாது. ஒன்று திருமணத்திற்கு முன்னர். மற்றையது திருமணத்திற்குப் பின்னர்



1.

புகைக்கும் பழக்கமுடைய மலைகளின் ஊரில்
ஏவாளின் பசி
கள்வனைப்போல பதுங்கி அலைகிறது.

அகழ்வுகளால் அளவிடல் முடியா
ஆண்டுகள் ஆதிய உயிர்ச் சுவட்டை, நம்மைத்
தேர்ந்து அனுப்பினார் ஆண்டவர்.

காலம் நியமித்த கண்கள் ஒரு கோடி நம்மை
வேவுகின்றன.
ஒரு கள்வனைப் போல பதுங்கியலைகிறது பசி.

ஆள்கூட்டம் அயரும் போதுகளில்
துணிக்கை வளியை அசைக்க இயலா ஸ்தாயியில்
கண்கள் மட்டும் கேட்கும் மொழியில் காதல் பேசுகிறது

அ[illegible]ந்த கணங்களில் அவசரமாய்க் கொஞ்சிப் பிரிகிறோம் -
இதழ்கள் ஏங்குகின்றன

செவிட்டுக் கண்களாலும்
செவிக் குருடுகளாலும்
ஒற்றுப்பார்த்தபடி இங்கிருக்க இவர்கள்
தூர எங்கோ மலைகளில் விழுந்து
நொறுங்கி ஓடைகள் மோதும் கரைகளின்
செம் மொக்குகளில் விரிகிறது நமதுலகு.
மலர்கள் ..... மலர்கள் ..... மலர்கள்
மலர்களால் மட்டுமே நமதுலகு

# றஷ்மி

20030920 மாலை 3.59

# ஈதேனின் தோட்டத்தில் கனிகளாகத் தொங்கிற்று காதல்



1.2

ஈதேனின் தோட்டத்தில் கனிகளாகத் தொங்கிற்று காதல் -
ஏவாளின் பசி கள்வன் போல் பதுங்கி
அலைகின்றது இன்னும்

2.

நிறைந்து இரவு ததும்பும் நீள் பொழுதில்
முகத்தில் உன் கேசம் பரவ, என் மார்பில்
அசதியில் சரிந்தபடி
இப்படியே யிறந்து போவோமாவென்கிறாய்

எந்தத் தீவோ -
எந்தத் திக்கோ -
ஏதோவொரு மலையில் பாத ஒற்றை பதிய
மற்றது வேறெங்கோ வீழத் தூக்கி வீசிக்
காலம் நம்மை அடிக்கும் எனத் தெரிகிறோம்

வண்ணத்தி என நான் முதன்முதலாகப் பெயரிட்ட
உனது விழிகளில் ஈரம் திரள்கிறது.
உதடுகளால் ஒற்றித் தேற்றுகிறேன் நான்

பார்....
நமது நெட்டுயிர்ப்பில்
ஒழுங்கை ஒருநாள் தவறவிடும் இவர்தம் உலகு -

காதலால் எல்லாமே இயலும்.

# உலக வலையும் தமிழ் இணையத் தளங்கள்

ஏ. ஆயிஸா

இணையம் இந்த உலகத்தை ஒரு கிராமமாக மாற்றியுள்ளது. இந்த உலகக் கிராமத்தில் ஆங்கிலம் பிரதான பயன்பாட்டு மொழியாக இருந்து வந்துள்ளதெனினும், இந்நிலமை தற்போது மின்னல் வேகத்தில் மாறிக் கொண்டிருக்கிறது. இணையத்தில் 51% மட்டுமே ஆங்கில மயமாக உள்ளது. இன்னும் 3 ஆண்டுகளில் 30% மாகச் சுருங்கி விடும் என்று கணனி நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். எஞ்சிய70% த்தை ஏனைய மொழிகள் ஆக்கிரமித்து விடும். இதில் குறிப்பாக தமிழ், சீனம், மலாய், இந்தி போன்ற ஆசிய மொழிகள் முன்னணி வகிக்கும்.

தமிழ் கூறும் நல்லுலகைப் பொறுத்தவரை நாம் ஏற்கனவே இந்தப் பயணத்தில் நம்மை இணைத்துக் கொண்டு விட்டோம் என்பதால், நாம் அதிஷ்டசாலிகளே. இன்று இணைய வலையமைப்பில் தமிழ் பெரும் வளர்ச்சி கண்டு வருகின்றது சுமார் 300,000க்கு மேற்பட்ட தமிழ் இணையத் தளங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் வேகமாக வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கையை அதன் துரித வேகம் காட்டுகின்றது.

ஊரகத்தே உலாவி வந்த தமிழ், இன்று தகவல் நெடுஞ்சாலையில் பயணித்து உலகமெல்லாம் பரவி வருகின்றது. புத்தகங்கள், இலக்கியம், ஓடியோ, வீடியோ, அரசியல், இணைய இதழ்கள், பத்திரிகைகள், சங்கங்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாட்டியம், ஆன்மீகம், இசை, மென்பொருட்கள் என அதன் வளர்ச்சியை அடுக்கிக் கொண்டே செல்லலாம். அந்த அளவிற்கு இணையத்தில் தமிழ் வலிமை பெற்று வருகின்றது. இன்ரநெட் மூலம் முகவரி தேடுதல் வழிகள் **(search Engine)** ஆகியனவும் தமிழ் மூலம் சாத்தியமாகின்றன.


தமிழ் இணையங்களைப் பொருத்தவரை அவற்றின் ஒரே குறை, ஒவ்வொரு இணையத் தளத்திற்கும் ஒவ்வொரு தமிழ் எழுத்துருவை பொருத்த வேண்டும் என்ற வேலைச்சுமைதான். இதற்கு அனைத்துத்தமிழ் தளங்களும் ஒரே தமிழ் எழுத்துருவைப் பயன்படுத்த தூண்டும் வகையில் பல மகாநாடுகள் நடாத்தப்பட்டு வந்துள்ளன.

தமிழ் எழத்துருக்கள் **(Fonts)** வேண்டுமெனில் இலவசமாக இணையத்தில் பெற்றுக் கொள்ளும் வசதி உண்டு. தமிழ்

தட்டச்சு முறையிலான "அமுதம்" எழுத்துருவை www.tamilamutham .com என்ற தளத்திலும் பெனடிக் முறையிலான மைலை எழுத்துருவை www.maylai.com என்ற தளத்திலும், முரசு அஞ்சல் என்ற எழுத்துருவை www.murasu.com என்ற தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இணைமதி, இணைக்கதிர், துணைவன் நளினம் போன்ற எழுத்துருக்களும் குறிப்பிடத் தக்கவை. இவைகளை www.tamilsoftware.com,www.thunaivan.com, www. tamilosai.com எனும் இணையத் தளங்களில் இருந்தும் பதவிறக்கம் செய்து கொள்ளலாம்.

சாதாரணமாக நாம் பயன்படுத்தும் Ms-office யைப் போன்று தமிழ் மொழி பயன்பாட்டிற்காக சுமார் 350 தமிழ் மென் பொருட்கள் தோன்றி உள்ளன. Word processing வேலைகளுக்காக கலைஞர் 99, பதமி, முரசு இளங்கோ 2000, சுரபி 2000, அமுதம், இன்ஸ்கிரிப்ட் 2000 போன்றவை கணணியில் தமிழ் உள்ளீடு செய்வதற்காகப் பயன்படுத் தப்படும் தமிழ் மென் பொருட்கள் ஆகும். இவற்றையும் www. tamilsoft ware.org என்ற இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

உலகின் எந்த மூலையில் வாழும் எவரும் தமிழ் நூலை வாங்க முடியவில்லையே என்ற நிலையையும் இணையம் நிவர்த்தி செய்து விட்டது. www.tamilnoolgl.comஎன்னும்புகழ்பெற்ற தளத்தின் மூலம் தேவையான தமிழ் நூல்களை கொள்வனவு செய்து கொள்ளமுடியும். மேலும்திருக்குறள், ஔவையார் படைப்புகள், திருவாசகம், திரு மந்திரம் ஆகியனவும், ஆத்திசூடி ,திருப்பாவை புறநானுறும் மின்னாக்கம் செய்யப்பட்டு www.tamil.net project madurai என்ற இணையத் தளத்தில் உள்ளது. 17ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களின் பட்டியல் 'கந்தாளம்' என்று www. tamilnool.comஎன்ற இணையத்தளத்தில் உள்ளது.



இணையத்தில் சிதறிக் கிடக்கும் தமிழ் சார்ந்த செய்திகளைத் தேடித் தருவதற்கு, பல தேடு பொறிகள் உள்ளன. சிங்கப்பூரைச் சேர்ந்த www. iagent.ig.gov.sg. தமிழில் முதல் தேடு பொறியாக உள்ளது www. sji. sch. edu.sg./ bnsoul. tamil .links. htmஎனும் தேடு பொறி தமிழ் தளங்களின் தொகுப்பாக உள்ளது.www.kanini.com, என்பன தமிழ் களஞ்சியங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.

இணையம் மூலமாக ஆங்கில மொழியில் மட்டுமேதான் அரட்டையடிக்கலாம் (chating) என்று இருந்த காலம் மாறி தமிழிலும் தமிழ் பேசும் மக்கள் அரட்டையடிக்கும் வசதி கிடைத்துள்ளது இவ்வாறு தமிழில் அரட்டையடிக்கும் வசதிகளை www.tamilweb.com,

www.tamilworld.com, www. tamil chat.com, www.tamilcinima.com ஆகிய தளங்கள் வழங்குகின்றன.

தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளும் இணையத்தின் மூலம் உலகில் பரந்துபட்டு வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு தமது தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கும் வாய்ப்பினை வழங்குகிறது. சன்.டிவி www.sunnt.com என்ற தளத்தின் மூலமும் விஜய் டிவி www.vijatv.com, தமிழ் டிவி www.tvtamil.com மற்றும் நம் டிவி www.numtv.com என்ற தளங்களின் ஊடாகவும் தமது நிகழ்ச்சிகளை உலகத் தமிழர்களுக்கு வழங்குகின்றன. அதனோடு சில ஒலி பரப்பு நிலையங்களும் கூட இணையத்தின் மூலம் தமது ஒலிபரப்பை உலகத் தமிழ் பேசும் மக்கள் கேட்டு மகிழும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. அதில் இலங்கையின் சக்தி FM. www. shakthi fm.com என்றதளத்தின் ஊடாக தனது நிகழ்ச்சிகளை உலகம் பூராகவும் கேட்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மற்றும் www.webulagam.com ஊடாகவும் வானொலி ஒலிபரப்பு மேற் கொள்ளப்படுகின்றது.

தமிழில் வெளியாகும் பல நாளிதழ்களும் வார, மாத இதழ்களும் மின் இதழ்களாக இணையத்தில் வெளி வருகின்றன. இணையத்தில் முதல் மின் இதழ் எனும் பெயர்பெற்றது "தேனி" ஆகும். www.tamil.net/theni. ஆறாம் திணை www.aaramthinai.com என்ற தளத்தில் வெளியாகிறது. மேலும் மின்னம்பலம் www.minambalam.com இன்தாம் www.intham.com, சத்தியம் ஒன்லைன் www.sathyamonline.com, விண்ணோசை www.vinnosai.com பனித்துளி www.panithuli.com,சுவடி Rtb www.suvadi.com என்பனவும் மின் இதழ்களாக வெளிவருகின்றன.

மேலும் இலங்கையின் தினசரிகளில் தினகரனும், வீரகேசரியும், வார வெளியீடுகளில் உதயன் போன்றனவும் இணையப் பத்திரிகைளாக வெளிவருகின்றன. அத்தோடு இந்தியாவில் இருந்து வெளிவரும் விகடன், கல்கி, குமுதம் போன்ற இதழ்களும் இணையத்தில் உலா வந்து தமிழ் இணையப் பயன்பாட்டாளர்களை மகிழ்ச்சியடைய வைக்கின்றது.

பல்வேறு நாடுகளில் சிதறிக் கிடக்கும் தமிழ்ச் சமூகத்தை இணைக்கவும், அவர்கள் தங்களது எண்ணங் களையும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளவும் இணையம் துணைநிற்கிறது. அந்த வகையில் தமிழர் நலன், தமிழ் வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் செயற்படும் தளங்களாக www.kanith amize.com, www.tamilo ssai.com, www.tamilboard.com, www.tamil.net, www.tamilforum.com, www. tamile uropean.com, www.sigtisc.com, www.kanian.com, www.pathcom.com ஆகிய தளங்கள் காணப்படுகின்றன. இத்தளங்கள் தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளை உலகறியச் செய்வதோடு,

பரந்து வாழும் தமிழ் மக்களுக் கிடையிலான செய்திப் பரிமாற்றங் களையும் மேற்கொள்கின்றன. இதன் மூலம் பரந்து வாழும தமிழ்ச் சமூகத்தினரை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றன.

கடல் கடந்து வாழும் தமிழ் மொழி பேசும் சமூகத்தினர், தமது சந்ததியினர் மொழியால், இனத்தால், பண்பாட்டால் தனிமைப்படுவதைத் தவிர்க்க, தமிழ நிலை தங்கள் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய சூழலில் பல தமிழ்க் கல்வி தளங்களை உருவாக்கி உள்ளனர். அதில் தமிழில் தனிப் பயிற்சி வழங்க **www.geocities.com/athens/acnopolis/4715,www.geocities.com athens. acropolis/8780** என்றதளமும், தமிழா சிரியர் மென்பொருள் **www.kalvi.com** என்றதளமும் தமிழ் பேச்சுப் பயிற்சியினை வழங்க **www.supon.edu** என்னும் தளமும் உள்ளன. இணைய வழிக் கல்வி எனும் தொழில்நுட்பவியலை தமிழில் கற்கவும் கற்பிக்கவும் என **www. ccat. sas. uponn.edu/plc/tamilweb** என்ற தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இலக்கிய ஆர்வலர்களின் தாகத்தைத் தீர்த்து வைக்கவும் இணையம் தவற வில்லை. இணைய சஞ்சிகைகள் தனியாக வெளிவந்த போதிலும், புகழ் பெற்ற கவிஞர்களின் கவிதைகள் தனித் தனியான தளங்களில் கிடைக்கிறது. கவியரசு வைரமுத்துவின் கவிதைகளும் அவரின் சினிமாப்பாடல்களும் **www. vairamuthu.com** என்ற தளத்திலும் ஏனைய பல கவிஞர்களின் கவிதை களை ஒன்றிணைத்த இலக்கிய தளமாக **www.pathcom.com** என்னும் தளமும் காணப்படுகின்றது.

இளைஞர்களின் பொழுது போக்கிற்காக இயங்கும் தளங்களில் இளைஞர் அம்பலம், **(http://ilaiyar.ambalam.com)** என்றதளம் பெயர் பெற்றது. இத்தளத்தில் இளைஞர்களுக்கு ஆர்வமுள்ள பல பகுதிகள் உள்ளன.

தமிழின் வளங்கள் பற்றி இன்னோர் பகுதியில் இலக்கியம், சொல்வளம், மென்பொருள், எழுத்துரு போன்றவை களை காணமுடிகின்றது. இலக்கியப் பகுதியில் திருவள்ளுவரின் திருக்குறள் முழுமையாக சேர்கப்பட்டுள்ளது. கலா சாரம் பற்றிய மற்றப்பகுதியில் இலங்கையில் உள்ள ஆலயங்கள் அவற்றில் நடைபெறும் திருவிழாக்கள் போன்ற விபரங்களும் பஞ்சாங்கம், கந்தசஷ்டி, சகலகலா வல்லி போன்ற பக்திப் பாடல்களும் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு பதிவுகளில் தேவையான அம்சங்களை உள்ளடக்கிய சிறந்த தளமாக விளங்குகின்றது.

ஓலைச் சுவடி, கல்வெட்டு, செப்பேடு, பீங்கான் பதிவு, அச்சுக்கோப்பு, மின்ன ணுப்பதிவு, கணணிப் பொறிப்பதிவு, இணையம், ஆகிய அனைத்திலும் உட னடியாகப் பயன்படுத்திய மொழிகளே இன்று உலக அளவில் செழுமையாக உள்ளன. தேன் மதுரைத் தமிழை உலக மெல்லாம் பரவச் செய்திடல் வேண்டும் எனக் கனவு கண்ட பாரதியின் நனவுகள் மெய்ப்படும் காலமும் ஆரம் பித்து விட்டது எனத் துணிந்து கூறலாம்.

# என் தெருவோரக் குறிப்புகள்



மெலிதாய்
மிக மெலிதாய் எழுந்தடங்கும்
எழுதப்படாத கவிதைபோல்
என் பாடல்
உன் தெருக்களில்
ஒலிக்காது போகலாம்
எனக்குக் கவலையில்லை

எந்தச் சேதியும்
இங்கு சுவாசிக்கப் படக்கூடியதாயில்லை

விடிய விடிய
நெருப்புத் தின்று
மனசு வீங்கிக் கிடக்கும்
ஒரு பேனாவின் அசைவு கூட
என் நதியின் திசைமாற்றிப் போகும்.
இருந்தும் துயரமில்லை

முடிந்தால்
எரியாமலும்
விடியாமலும்
மனசு முழுக்க புகைந்து கிடக்கும்
இந்த நம்பிக்கைகளுக்கு
சிறகனுப்பனே்

ஒரு பூ உதிர்வதைப் போல்
மழை வந்தடங்கும்.

என் தெருப்புழுதியைப் போல
ஒரு கனவுதிர்ந்து போதலென்ன
அத்தனை சுலபமா?

## அக்மல் ஜஹான் கவிதைகள்

# மலட்டு மேகங்கள்



மனதின் மொட்டை மாடியில்
நிலாச்சோறில்லாத
பௌர்ணமிகள்

ஒன்றுமேயின்றி
சிதைந்து போகும்
பிரமாண்ட சூன்யப்புள்ளியில்
இன்றுகளெல்லாம்
இறந்துபோன துயரவெளிகள்

ரயில் பயணங்களைப் போல்
ஏறுவதும் இறங்குவதுமாய்
தலை நனைக்காத
மேகங்கள்...!

இடித்து
மின்னலாகி
“பெய்” என்கின்ற போது
பொய்யாகி
பழசும் புதுசுமாய்
வாழ்க்கை பிரசவிக்கும்
உறவுச்சிசுக்கள்

விரும்பாதவிடத்தில்
விதை முளைப்பதும்
விரும்பாத வேளை
விலக்க முடியாமல் போவதும்
விதியாயிற்று

ஒரு கோடை இரவில்
என் கொக்குகள் தொலைவதும்
நான் கொப்பிழந்து
போவதுமாய்
எதுவும் நேரலாம்
ஏதோ ஒரு புற்றில்
துரோகச் சட்டை கழற்றப்பட்டு

கிணற்றுப் படுக்கையில்
இளகும் உரிமட்டையாய்
எல்லாமுதிர்ந்த பின்னும்
ஈரம் காயாத இதயத்துடன்
காலத்தின் கைபிடித்து
வாழ்க்கை நகரலாம்

காலம் கயிறாகும் போது
இதயம் இரும்பாய் கனத்திருக்கும்
முட்டைக் கோதின்
மெல்லிய நொறுங்கல்கள்
இடியாய் இறங்கும்

கடைசியில்
உயிர் கொடுக்க முடியாத
ஒரு கவிதை மட்டும்
இங்கு உட்கார்ந்து கொள்ளும்
உன்னால்
உணர்ந்து கொள்ளப்படாமல்.

# சிந்தனைப் போராட்டம் :

## இஸ்லாமிய அடையாளத்தை அரிப்பதற்கு மேற்கு கண்டுபிடித்த அற்புதக் கறையான்

### எஸ்.எம்.அய்யூப்



ஒரு கொள்கையை அழிப்பதற்கு அல்லது சிதைப்பதற்கு முற்படும் ஒரு சக்தி அக்கொள்கை தொடர்பான சிந்தனைச் சிக்கலை, நம்பிக்கையற்ற தன்மையை அக்கொள்கையை பின்பற்றுவோர்களிடையே தோற்றுவிப்பதனையே சிந்தனை ரீதியான படையெடுப்பு எனக்கூறலாம்.

மேற்குலகு தனக்கு சவாலாக அமைகின்ற சக்திகளை இவ்வாறான சிந்தனைப் படையெடுப்பின் மூலமே களைந்து தனக்கான ஆதரவுகளை சேர்க்க முயல்கிறது. பின்னர்தான் ஆயுதப்படையெடுப்பில் ஈடுபடுகின்றது. அது தனது எதிரியை கட்டமைக்கும் விதமும் இதுவே. ஆப்கானிஸ்தான், ஈராக் தொடர்பான போருக்கு முன் அந்நாடுகள் தொடர்பான சிந்தனைப் படையெடுப்பையே மேற்குலகு கட்டவிழ்த்து விட்டிருந்தது. பயங்கரவாதம், பயங்கரவாதத்திற் கெதிரான போர், தீமையின் அச்சு, அடிப்படை வாதம், உசாமா என்ற சிந்தனைகளை அது முடுக்கி விட்டிருந்தது. இந்த சிந்தனைப் படையெடுப்பு கீழை நாடுகளை நசுக்குவதற்கு மேற்குலகு கண்டு பிடித்த அற்புத வழியாகும்.

சிந்தனைப் போராட்டம், சிந்தனைப் படையெடுப்பு என்ற உத்தியைக்

கண்டு பிடிப்பதற்கு முன் ஆயுதப் போராட்டத்தையே மேற்குலகு இஸ்லாமிய உலகத்தின் பால் தொடுத்தது. ஆனால் ஆயுதப் போராட்டத்தால் அவர்கள் நோக்கம் நிறைவேற்றப் படவில்லை. நிலங்களை, சொத்துக் களை போராட்டத்தில் முஸ்லிம்கள் இழந்தார்களே தவிர ஆன்மாவை அவர்கள் இழக்கவில்லை; சட ரீதியான இழப்புகள் இடம்பெற்றனவே தவிர உள்ளங்கள் ஆட்டங்காணவில்லை. மொத்தத்தில் இவ்வாயுதப் போராட்டம் முஸ்லிம்களை ஒன்றுபடுத்தியது; அவர்களின் உறுதியை வளர்த்தது. ஓரணியில் நின்று போராடி இஸ்லாத்தைக் காக்க வழி செய்தது. இந்த உண்மையை உணர்ந்த ஏக காலத்தில் சிலுவை யுத்தத்தில் மேற்குலகு தோல்வியுற்றது.

பிரான்ஸிய அரசனான '9ம் லூவிஸ்' அப்போரில் சிறைப்பிடிக்கப்பட்டு விடு தலை யான பின் தம் சமூகத்தினரை நோக்கி –

" நீங்கள் முஸ்லிம்களை தோல்வியுறச் செய்ய நாடினால் அவர்களுடன் வெறுமனே ஆயுதத்தின் மூலம் போராடாதீர்கள். அவர்களது நம்பிக்கைக் கோட்பாட்டுடன் (அகீதா – சிந்தனை ரீதியான படையெடுப்பு) போரிடுங்கள். அவர்களது பலத்தின் மையம் அதுவாகும்" என்று கூறினான்.

முஸ்லிம்களை கொள்கை ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் பலமிழக்கச் செய்வதுதான் அவர்களை ஆக்கிரமிப்பதற்கான பொருத்தமான வழியென சிலுவைப் போர்கள் மூலமாக மேற்குலகம் உணர்ந்து கொண்டது. எனவே அன்று தொடக்கம் இன்று வரை இத்தகைய துறைகள் ஊடாக முஸ்லிம்களை எதிர்த்து வருகிறது.

அல் குர்ஆனும், அல் ஹதீதுமே முஸ்லிம்கள் இந்த உலகை ஆளுவதற்கு கைகொடுத்தது. இவ்விரண்டையும் முஸ்லிம்களிடமிருந்து தூரமாக்குவதன் மூலமே அவர்களை பலமிழக்கச் செய்ய முடியும் என்பதை மேற்கு உணர்ந்தது. எனவேதான் விக்டோரியா கால பிரிட்டிஷ் பிரதமர் திரு. கிளாஸ்டன் பிரித்தானிய மக்கள் சபையில் எழுந்து, தனது கரத்தில் குர்ஆனை ஏந்திய வண்ணம் ''இந்தப் புத்தகம் எகிப்தியரிடம் இருக்கும் வரை அந்நாட்டில் நாம் ஆட்சி செய்ய முடியாது" என்றார்.

அதே போல் பிரித்தானிய காலனித்துவம் இந்தியாவை இழுக்க முற்பட்ட போது அங்கு அதிக எதிர்ப்புக் காட்டியவர்கள் முஸ்லிம்களே. எனவே இவர்களின் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலான ஒற்றுமையைக் குலைப்பதன் மூலமே காலணித்துவம் சாத்தியமாகும் என உணர்ந்த மேற்குலகு 'காதியானியா' இயக்கத்தை தோற்றுவித்தது. இந்திய நீதி மன்றம் ஒன்றில் சாதாரண எழுதுவினைஞராக பணியாற்றிய மிர்ஷா குலம் கர்தியானியை விலைக்கு வாங்கி பெருமானாருக்குப் பின் இவர்தான் நபியெனக் கூறி முஸ்லிம்களை பிளவு படுத்தியது. இறுதியில் இந்தியாவில் எதிர்ப்புக்காட்டிய முஸ்லிம்களின் குரல் தளர்ந்தது. இந்தியா மேற்கத்திய மயமானது.

இது போலவே அக்பர் பாதுஷா முன் வைத்த 'எம்மதமும் சம்மதமே' என்ற மதக் கொள்கையும் மேற்கின் தயாரிப்பே. இதன் நோக்கம் ஆறு நூற்றாண்டுகளாக இந்தியாவை ஆண்ட இஸ்லாமிய மொகலாய ஆட்சியை உடைப்பதாகும்.

1906ல் கைரோவில் இடம்பெற்ற கிறிஸ்தவப் பிரச்சாரர்கள் கூட்டத்தில் வினவப்பட்ட

ஒரு கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலை குறிப்பிட முடியும். பேச்சாளர் –

"நாம் தோல்வியுற்றுவிட்டோம். நாம் பாடசாலைகளையும், அகதி முகாம்களையும், வைத்திய சாலைகளையும், வெற்றி கொண்டோம். அவற்றுக்கான செலவீடுகளையும், பணிகளையும் கூடச் செய்தோம். எனினும் ஒரு சிறுவனை அல்லது பணத்திற்காக எம்முடன் இணையும் ஒருவரையே கிறிஸ்தவமயப்படுத்த முடிகிறது" என்றார்.

அப்போது மாநாட்டின் தலைவரான பொப்து வைமிர் –

" முஸ்லிம்களை கிறிஸ்தவமயப்படுத்துவது மட்டும்தான் எமது பணியல்ல. அவர்களை இஸ்லாத்திலிருந்து திருப்பிவிடுவது மாத்திரமே எமது பணியாகும். இம்முயற்சியில் நாம் பாரியளவு வெற்றியீட்டிள்ளோம். நாம் நிறுவிய அரச, கிறிஸ்தவப் பாடசாலைகள் எமது நடவடிக்கைக்குப் பாரிய பங்களிப்புச் செய்கின்றன" எனக் கூறினார்.

இப்படி வரலாற்றைஎடுத்துப் பார்க்கும் போது ஆயுதப் படையெடுப்பால் அடைய முடியாத வெற்றியை சிந்தனைப் படையெடுப்பால் அடைந்து கொள்கிறார்கள்.

இஸ்லாத்தை மையமாகக் கொண்ட சிந்தனைப் போராட்டம் சிலுவை யுத்தத்தின் பின் கோட்பாட்டு வடிவம் எடுத்தாலும் இஸ்லாம் தோன்றியதிலிருந்து அதன் எதிரிகளால் சிந்தனைப் போராட்டம் முடுக்கிவவிடப்பட்டிருக்கிறது. இதனை 03 கட்டங்களாக வகுக்க முடியும்.

## 01. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்து அப்பாஸிய ஆட்சிக்காலம் வரையான காலப்பிரிவு

இக்காலப்பகுதியில் இஸ்லாமிய சிந்தனை புராணங்கள், இதிகாசங்களுடன் மோத வேண்டிய நிலைக்கு உட்படுகிறது. இஸ்ராயிலிய்யத் எனும் யூத வழி வந்த கட்டுக்கதைகளின் பிரதிபலிப்பு பரவலாக செல்வாக்குச் செலுத்தியுள்ளதை இங்கு அவதானிக்க முடியும். இக்காலப்பிரிவில் தோன்றிய அல்குர்ஆன் விரிவுரைகளில் யூதவழிக்கதைகளின் சேர்வுகள் இடம் பெற்றுள்ளன. அத்தோடு சூபித்துவத்தின் செல்வாக்கையும் ஆங்காங்கே காணலாம். ஆனால் மிகப் பிற்காலத்தில் தோன்றிய குர்ஆனிய விரிவுரைகளில் இவற்றின் தாக்கத்தினை அவதானிக்க முடியாது.

## 02. அப்பாசிய காலப் பகுதியிலிருந்து ஐரோப்பிய மறுமலர்ச்சி வரையான காலப்பிரிவு

அப்பாசிய ஆட்சிக்காலம் சுமார் 5 நூற்றாண்டுகளைக் கொண்டதாகும். இஸ்லாமிய இராஜ்ஜியத்தில் பாரிய விஸ்தரிப்பும், பல்கலைக்கழகங்களில் பாரிய அபிவிருத்தியும் இக்காலப் பகுதியிலேயே இடம்பெற்றது.

மேற்குலகம் அறியாமையில் மூழ்கி, கிறிஸ்தவ பாதிரிமார்களின் இரும்புப் பிடிக்குட்பட்டிருந்த காலப்பகுதியிலே

முஸ்லிம்கள் பல்வேறு துறைகளிலும் பாரிய முன்னேற்றத்தைக் கண்டிருந்தனர். அரசியல்,வானவியல்,இரசாயனவியல், மருத்துவவியல், உயிரியல் போன்ற பல்வேறு துறைகளிலும் மிக உன்னத முன்னேற்றத்தைக் கண்டிருந்தனர். இதனைத்தான் 'மருத்துவத்தின் கதை' என்ற நூலின் ஆசிரியர் விக்டர் ரொபின்சன் –

"ஐரோப்பா சூரிய அஸ்தமனத்துடன் இருளில் மூழ்கியிருந்த வேளையில் முஸ்லிம் குர்துபாவிலே தெருவிளக்குகள் பிரகாசமாக ஔிவீசிக் கொண்டிருந்தன. ஐரோப்பா அழுக்கடைந்திருந்த வேளையில் குர்துபாவிலே ஆயிரம் ஆயிரம் குளிப்பறைகள், மாளிகைகள், அறபுக் கலையம்சங்களால் மிளிர்ந்து கொண்டிருந்தன" என்று வர்ணிக்கின்றார்

இந்த ஆட்சி ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் பரந்திருந்தது. இதனால் இஸ்லாத்தின் எதிரிகளால் எத்தகையை நடவடிக்கைகளையும் எடுக்க முடியாதிருந்தது.

முஸ்லிம்களை ஓரம்கட்டும் நோக்கிலும், ஜெருசலத்தை தமது பிரதேசமாக்கும் நோக்கிலும் முழு ஐரோப்பாவும் இணைந்து சிலுவை யுத்தத்தை தொடுத்தது. இதனை சுல்தான் சலாகுதீன் ஐயூபி முறியடித்தார்.

இக்காலப்பகுதிகளில் ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள் போல் மாறுவேடம் அணிந்து முஸ்லிம் இராஜ்யத்தில் கல்வி கற்றனர். அதேபோல் அப்பாசிய ஆட்சியாளர்களில் சிலர் தகுதியற்ற ஆட்சியாளர்களாக இருந்தனர். இத்தகைய நிர்வாகிகளது காலப்பிரிவை மேற்கத்திய உலகமும் இஸ்லாத்தின் எதிரிகளும் சிறந்த முறையில் பயன்படுத்தத் தொடங்கினர். அதே போல் சாம்ராஜ்யத்தின் விரிவு காரணமாக அதிக செல்வங்கள் குவிந்த போது மக்கள் இஸ்லாமிய சிந்தனையை விட்டு தூரமாகத் தொடங்கி அச் செல்வங்களை அனுபவிக்கும் எண்ணங்களை வளர்க்கலாயினர். சுருக்கமாக இக்காலப்பகுதியில் இருந்த சில பலவீனங்களின் வழியாக மேற்குலகம் நுழைந்து தனது சிந்தனைப் போராட்டத்தைத் தொடங்கின எனலாம்.

இங்கு ஹதீதுக்கு வெளியே பல்வேறு பிரச்சினைகள் தோன்றியதனால் புதிது புதிதான சட்ட மூலாதாரங்கள் உருவாக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் மத்ஹபுடைய இமாம்களின் பணி முக்கியமானது. இத்தகைய சட்டங்கள், தீர்வுகளுக்கப்பாலும் இஸ்லாமிய சமூகம் அன்று, கிரேக்க சிந்தனைகளையும், தத்துவங்களையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இல்முல்கலாம் **(Scholastic Teology)** எனப்படும் அகீதாவை சார்ந்த கலைகளும் அறிஞர்களால் உருவாக்கப்பட்டன. அல்லாஹ் உலகை எவ்வாறு படைத்தான்? அவன் பண்புகள் கொண்டவனா? அவனது தாத் எவ்வாறானது? அவனது தோற்றம் எத்தகையது போன்ற கேள்விகளும் எழுப்பப்பட்டிருந்தன. இக்கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. இவற்றுக்கான பதிலை பலரும் பல்வேறு கோணங்களில் விளங்கினர். சிலர் இஸ்லாமிய வட்டத்திலிருந்து வெளியே சென்றும் தீர்வுகள் கூறி இஸ்லாமிய சமூகத்தை சிந்தனைச் சிக்கலுக்குள் மாட்டிவிட்டனர். இத்தகைய துறைகளினூடாக இஸ்லாத்தின் எதிரிகள் நுழைந்தனர். மா.. மூன் போன்றசில கலிபாக்கள் இல்முல்

கலாமில் அதிக ஈடுபாடு கொண்ட ஆட்சித் துறையில் அதிக அக்கறை செலுத்த தவறிவிட்டனர். இத்தகைய காரணங்களால் உண்மைப் போதனை செய்த அஹமத் இப்னு ஹம்பல் போன்ற இமாம்கள் தண்டிக்கப்பட்டனர். எனினும் இமாம் கஸ்ஸாலி(ரஹ்),இமாம் இப்னு கையும் (ரஹ்) போன்றோர் இஸ்லாமிய வரையறைக்குள் நின்று இஸ்லாமிய சிந்தனைகளைப் பாதுகாத்தனர்.

## 03. ஐரோப்பிய மறுமலர்ச்சியிலிருந்து இன்றுவரையான காலப் பிரிவு

இக்காலப்பிரிவானது முன்னைய காலப்பிரிவுகளிலிருந்து வேறுபட்டதாகும். இக்காலப்பகுதிகளில்தான் இஸ்லாத்தை அழிக்க வேண்டும் என்ற சிந்தனை முன்னரிலும் வேகமான கோட்பாட்டு ரீதியான வடிவம் பெற்று சிந்தனை ரீதியான படையெடுப்பு முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. பல்வேறு காரணங்களால் சிந்திப்பதற்கான வாயில்கள் மூடப்பட்டுவிட்டன என்ற கருத்து இஸ்லாமிய உலகில் நிலவுகிறன்றன. இதே நேரம் ஐரோப்பாவில் மறுமலர்ச்சிதோன்றுகிறது. இஸ்லாமிய உலகில் சமூக மாற்றத்திற்கான வழிவகைகள் முடக்கப்படுகின்ற வேளை மேற்குலகில் பாரிய சமூக,பொருளாதார கைதொழில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த ஐரோப்பிய மறுமலர்ச்சியின் பின்னரான மேற்கின் சிந்தனைகள் இஸ்லாமிய உலகில் பாதிப்பை ஏற்படுத்தத் தொடங்குகின்றன.

மேற்குலகின் காலனித்துவத்திற்கு இஸ்லாமிய உலகு உட்படுகிறது. மதச்சார்பற்ற சிந்தனையை அவர்கள் இந்நாடுகளில் பரப்ப முனைகிறார்கள். புலமைப் பரிசில் என்றபெயரில் முஸ்லிம் இளைஞர்கள் மேற்குலகுக்கு அழைத்துச் செல்லப்பட்டு இஸ்லாத்திற்கு மாறான கருத்துகள் போதிக்கப்படுகின்றன. மூளைச்சலவைக்கு உட்படுத்தப் படுகின்ற இவர்கள் முஸ்லிம் பெயர் கொண்ட மேற்கத்தைய வாதிகளாக திகழ்கின்றனர். முஸ்தபா கமால் அத்தா துர்க்,தாஹா ஹுஸைன், அஹமத் அமீன், சல்மான் ருஸ்தி, தஸ்லிமா நஸ்ரின் போன்றோர் இவ்வகையில் அடங்குகின்றவர்களே.

எந்தந்த வழிமுறைகள் மூலமாகவெல்லாம் இஸ்லாமிய சிந்தனைகளை குழப்பிவிட முடியுமோ அவ்வழிகள் எல்லாம்கையாளப்பட்டன. குர்ஆனுக்கு எதிரான பிரச்சாரங்களை தூண்டிவிட்டது போலவே தோல்சியர், பிலிப், ஹெட்டி, ஆர்ஏ நிகல்சன் போன்றோர் தங்களையே அர்ப்பணித்து ஹதீதுக்கெதிரான பிரச்சாரங்களைச் செய்தனர். இஸ்லாமிய வரலாற்றை இருட்டடிப்புச் செய்ததோடு அது,வாள்களின் இராஜ்ஜியமாகவும், இனங்களின் மோதல்களாகவுமே காட்டப்படுகிறது. இஸ்லாமிய ஷரீஆவை சுமக்க முடியாத சுமைகளாகக் காட்டினர். அதன் தண்டனைக் கோட்பாடுகளை காட்டுமிராண்டித்தனம் என விமர்சித்தனர். இஸ்லாமியக் கல்விக் கொள்கைகளை மாற்ற எகிப்து போன்ற நாடுகளில் தாஹாஹுசைனைமேற்குலகு பாவித்தது. இன்று உலகின் சக்தி வாய்ந்த தொடர்பூடங்கள் எல்லாம் மேற்கத்தேயரின் கையில் இருப்பதால் முஸ்லிம்களுக்கெதிரான சிந்தனைப்போராட்டம் இலகுவானதாக இருக்கிறது. ஐரீசில் நடக்கும் போராட்டம் சுதந்திரப் போராட்டமாக மாறுகிறது. ஆனால்

பலஸ்தீனில் நடக்கும் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வர்ணிக்கப் படுகிறது. செப்டம்பர் தாக்குதலை யார் செய்தார்கள் என்பதற்கான ஆதார மில்லை எனினும் உசாமாவும் முஸ்லிம்களும் செய்ததாக மேற்கு ஊடகங்கள் பிரச்சாரம் செய்கின்றன. ஆப்கானிலும், ஈராக்கிலும், அமெரிக்கா குடிகொண்டிருப்பதன் இன்னொரு முகம் இஸ்லாத்தை அழித்தொழிக்கும் நோக்கமே. ஹொலிவூட் படங்களும் இஸ்லாமிய சிந்தனையை கொச்சைப் படுத்துகின்றன. **Precident First Flight, Rambo** போன்ற படங்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

இப்போராட்டங்களில் முஸ்லிம்கள் தமது ஆன்மாவை மட்டுமன்றி அறிவையும் பேணிப்பாதுகாத்து வந்த கலாசார பாரம் பரியங்களையும் இழக்க முற்படுகின்றனர். அவர்கள் இஸ்லாம் தொடர்பாக வைத்திருந்த நல்லபிப்பிராயங்களிலும், அவர்கள் அகீதாவிலும் இச்சிந்தனைப் போராட்டம் கேள்விகளையும், சந்தேகங்களையும் கிளப்பி விட்டிருக் கிறது. இதனால் முஸ்லிம்களே முஸ்லிம் களுக்கு எதிராக மாறுகின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றது. பாரிய இஸ்லாமிய சாம்ராஜ்யம் சிறு சிறு பகுதிகளாக மாறுகின்றது.குறுந்தேசியவாதம் தலை தூக்குகின்றது.

மதச்சார்பற்றசிந்தனையின் காரணமாக சகல துறைகளையும் இஸ்லாத் தினின்றும் கழற்ற மேற்குலகு பாடுபடுகின்றது. 'புதியசவால்களுக்கு மாறிவருகின்ற உலக மதிப்பீடுகளுக்கு இஸ்லாத்தால் ஈடு கொடுக்க முடியாது. அது பாலை வனத்தில் வாழ்ந்த மக்களுக்கே சாத்தியம்' என்றகருத்தை உருவாக்குகிறது. இனப்பிரச்சினைக்கு இஸ்லா த்தில் தீர்வுண்டு சூழலியல், சமூகவியல், பொருளியல் பற்றி இஸ்லாம் பேசுகின்றது என்றால் அது மேற்கிற்கு ஆச்சரியமாக இருக்கிறது. இஸ்லாமிய வங்கி ஒன்றை அமைப்போம்; முஸ்லிம்களுக்கான நாணயமொன்றை அறிமுகம் செய்வோம் என்றால் அது புதுமையானதாக இருக்கிறது. இப்பின்னணியில் பலர் இஸ்லாமியர் முன்னேற வேண்டுமானால் மேற்குலகை அச்சொட்டாக பின்பற்றவேண்டும் எனும் முடிவுக்கு வருகின்றார்கள்.

எது எவ்வாறாக இருப்பினும் இஸ்லாமிய சிந்தனை அல்லாஹ்விடமிருந்து வந்ததன் காரணமாக அது வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. காலத்திற்கு காலம் தோன்றும் இஸ்லாமிய புத்திஜீவிகள் இத்தகைய சிந்தனைப் போராட்டங் களை முறியடித்து வருகிறார்கள். ஹதீது பற்றிய தப்பபிப்பிராயங்கள் கீழைத்தேய வாதிகளால் முன்வைக்கப்பட்ட போது முஸ்தபா சிபாயி போன்ற அறிஞர்கள் அதற்குரிய விளக்கம் கொடுத்தார்கள். அதேபோல் மேற்கத்திய கொள்கை களிலுள்ள சிந்தனைப் பலவீனங்களை, போதாமைகளை, முரண்பாடுகளை கலாநிதி. ஹாமித் ரபீஃ போன்றோர் அணுவணுவாக ஆய்ந்து இஸ்லாத்தின் சிந்தனைத் தெளிவை ஒப்பிட்டு விளக்கியு ள்ளார்கள். சமூகவியல், பொருளியல், அரசியல்,மானுடவியல்,போன்ற அறிவியல் துறைகளை இஸ்லாமிய மயப்படுத்தும் பணிகளிலும் தாஹா நாபிர் போன்றோர் ஈடுபட்டு வருகின்றனர். அதே போல் பிழையாக விளங்கப்பட்ட இஸ்லாத்தை தெளிவுபடுத்தும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளனர். இதற்காக மேற்குலகோடு பல்வேறு உரையாடல்கள் இடம் பெறுகின்றன. இஸ்லாமிய எழுச்சி இன்று எல்லா மட்டங்களிலும் பரவ ஆரம்பித் திருக்கிறது. ●

ரத்ன ஸ்றி விஜேசிங்க காலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்பத்தில் விஞ்ஞான ஆசிரியராயிருந்து பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராகப் பனியாற்றியவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சிங்கள விசேட துறையில் வெளி வாரியாகக் கற்று பட்டம் பெற்றவர். தற்போது நிருவாக சேவையில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணியாற்றுகிறார். இவரது பல கவிதைகள் இசைப்பாடல்களாக வெளிவந்துள்ளன. இவர் பல அரச விருதுகளையும் பெற்றுள்ளார்.

# ரத்தினம் நீங்கள்

முற்றத்துக் 'குள்ள' மாமரத்தின் கீழ்.
'தனமல்வில' மலர்கொத்தை முகரும்
ஆர்வமிகு குளிர் காற்று.
செடிகொடிகளின் கைகளிலும் கழுத்துகளிலும்
பாசி மணி முத்து மாலை.
ஆனாலும் இவையெவையும்
என் மனதை உசுப்பா.

ரத்தினம்
இதுவரை நீங்கள்
வன்னிக் கானகத்துக்கப்பால்
தூரத்து பாலைவனத்தில்
ஏதோ ஒரு தொழிலில்.

எனக்கு ஞாபகம்
தேர்தலில் தோற்றநாளில்
இருளில் நீங்கள்
சட்டை கூடக் கழற்றாமல்
மூச்சைக்கூட விடாமல்
கட்டைக் கதிரையில் நிண்டிருந்தீர்; சத்தமில்லாமல்.

மறுநாள்
பயணப்பொதியை கையிலெடுத்து
அதிகாலைப் பொழுதில் நீர் சொன்னீர்
"நான் வருகிறேன் நீ கவனமாய் இரு"

ரத்தினம்
கட்டிலின் தலைப்பாடு கதிரையின் கைபிடி என
எங்கும் இங்கு துர்நாற்றம்
சொல்ல என் நா எழுவதில்லை
உங்கள் உடலின் வியர்வை.

ரத்ன ஸ்றி விஜேசிங்க
தமிழில் : ஏ.எப். முஹம்மட் அஷ்ர.ஃப்

ரத்தினம்
கடந்த இச்சில நாட்களில்
எனக்குச் சரியான வேலை.
மீண்டும் நெஞ்சு வலிக்கிறது.
உள்ளங்கைகளில் நிறைந்த வடுக்கள்.
நீங்கள்
சேதிகள் இன்மையால்
வீதியைப் பார்திருப்பீர்கள்.

களைப்படைந்து
மகளோடு வாழ்கின்றவேளை
கண்கள் சற்று முடும் போது
கவிதைபோல வந்து என் காதிற் சொல்லுங்கள்
'கோபமில்லை நீ கடிதம் அனுப்பாததற்கு'

ரத்தினம்
ஏழேழு ஜென்மத்திலும் - நாம்
சம்பளத்தை பகிர்ந்து கொள்வோம்
அதில்
துக்கத்தின் அதிகபங்கு எனக்கே
மெலிந்த கையின் ஒரு பிடி
எச்சுமையையும் தாங்கும்
சின்ன மகளின் இரு கவளங்களிலேயே
எனது மகிழ்ச்சி

ரத்தினம்
இவ்வானத்தை விடச்
சிறிய ஒரு கூரையோ
இவ்வுலகத்தை விடச்
சிறிய நடு வீடோ
ஒரு நாளும்
நமக்கில்லை. ஏன்?
இப்பிரச்சினைக்கு
உங்கள் வாயே திறக்காது.

எனினும்
ரத்தினம் நீங்கள்.....
ரத்தினம் நீங்கள்.....



மழைக்காலத்தில் (வஸ்ஸானே) என்ற கவிதைத் தொகுப்பில் இருந்து பெறப்பட்ட ரத்தினம் நீங்கள் (ரத்னே ஒபே) என்ற கவிதையின் மொழி பெயர்பு இது.

# யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் இருந்து




மல்லிகைப் பூச்சொரிந்த புனித மண்ணை
மண்டிச் சூழ்ந்த நெருப்பாக
படமெடுத்த நாகமும் புடையனும்
நாக்கை இன்னும் நீட்டியபடி.....
பார்.....
குளிர்ச்சி தருவதா
இந்தச் சோகம்?

தீப்பட்ட கூடு.
மரத்தின் அடியில்
அழும் பிஞ்சுகள்.
கடவுள் எங்கே ?
நூலகத்துள் உறங்குகிறாரா?
அல்லது
அவரும் சாம்பலாகி விட்டாரா?
துலாக்கிணற்றில் ஊற்றெடுக்கும்
இரத்தத்தால் பொட்டுவைத்து
கற்பூரமாய் எரியும்
இதயத்து வேதனை.....
எப்படித் தாங்குவது?

உயிருக்கு அஞ்சி நடுங்கும்
கை கால் இழந்த கவிஞன்
சூடு பட்டுச் சிதறும்
சந்திர நட்சத்திரத் துகள்களைச்
சேகரிக்கிறான்.
தெற்கிக்கு வரும் போது
ஒடியலுக்குப் பதிலாக
நெடும்பசியும் துக்கமும் பொதி செய்து
திருக்குறளின் சாம்பலுமா
கொண்டு வர?

'கங்கைக்கீதம்' (கங்கா கீதய) என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து 'யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் இருந்து (யாப்பா பட்டுன தொரசிட்ட) என்ற கவிதையின் மொழி பெயர்பு இது.)



# தனித்துவத்திலும், இனத்திலும் பண்பாட்டினது தாக்கம்

**தனிப்பட்டவர்களினதும், குழுவினதும் பாரபட்சத்தின் மீதான பாரபட்சமும் நம்பிக்கையும்**


மூலம் : *Francisco Morales*

தமிழில் : ஏ. றமீஸ்


## தனிநபர் வாதத்தின் எண்ணக்கரு *(The Concept of Individualism)*

> *"தனிநபர் வாதம் என்பது, அனுபவத்தின் அடிப்படையில் அல்லது மனித இனம் எனும் தனி நபர் என்பதைக் குறிக்காது ஒழுக்க, சுதந்திரமான, சுயாதீனமான ஒருவனை, உயர்ந்த விழுமியங்களையும் பேணி நடப்பவர்களை குறிக்கும்"*

*இதனடிப்படையில் தனித்துவ வாதம் என்பது சாதாரண ஒருவனதும் சமூகத்தினதும் தற்காலத்தில் நிலவுகின்ற ஒரு சித்தாந்தமாகக் கூறப்படுகிறது.* (Dumont 1987, pp37)

சமுகத்தில் மிகப் பிரதான விடயமான தனிநபரை அடிப்படையாகக் கொண்ட தனிநபர் வாதத்திற்கு முற்றிலும் எதிராக பன்மைவாதம் **(Holism)** என்பது உயர்ந்த விழுமியங்கள் முழுமையாக சமூகத்தில் அமைந்திருப்பதைக் குறிக்கிறது. வரலாற்று ரீதியாக தனிநபர் வாதம் பன்மைச் சமூகத்தில் அவர்களுக்கு எதிரான ஒன்றாகவும் மிகைப்படுத்தப்பட்ட ஒரு விடயமாகவும் காட்சியளித்தது. இங்கு இந்தியாவில் தோன்றிய துறவி **(renouncer)** ஒரு முக்கிய மைல் கல்லாக கூறப்படுகிறது. உயர்ந்த உண்மையை அடைந்து கொள்வதற்காக துறவி சமூக வாழ்க்கையையும், கட்டுப்பாடுகளையும் விட்டு விட்டு, அவரது தலைவிதிக்கு அவரையே அர்ப்பணித்தார் / ஒதுக்கினார். நல்லவனாக வேண்டுமாயின் உலக வாழ்க்கையை விடவேண்டிய அவசியம் பிளேட்டோ, அரிஸ்டோட்டில் காலத்தில் கூட நடைமுறையில் இருந்தது எனக் கூறப்படுகிறது. அந்த நேரத்தில் படிக்காத பாமரர்களே உலக வாழ்க்கைக்கு அடிமையானார்கள் எனக் கருதப்பட்டது.

நவீன யுகத்தின் ஆரம்பத்திலிருந்து சமூகம் ஒரு அமைப்பு எனவும், அதில் அங்கம் வகிக்கும் தனிநபர்கள் ஒருவருக்கொருவர் தாமாகவே தொடர்பை / உறவை ஏற்படுத்த வேண்டுமெனவும் அங்கு குழுவுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது எனவும் கருதப்பட்டது. இந்த எண்ணக்கரு இரண்டு பண்புகளைக் கொண்டமைந்தது.

1. சமத்துவம்
2. சுதந்திரம்

ஒருவனது சுய விருப்பம்தான் சமூக ஒழுங்கினது சிறந்த உத்தரவாதமானதாகவும், சமூகத்தின் எல்லா அங்கத்தினர்களுக்கும் பொதுவான திருப்தியானதொரு விடயமாகவும் இருந்தது என்ற நம்பிக்கை இருந்தது. இருந்தாலும் அதிகமான மக்கள் அனுபவித்த சுதந்திரத்தினால் மற்றவர்கள் தங்களது நோக்கத்தை நிறைவு செய்ய முடியாமல் போனது.

இங்கு கேம்பின் **(Camp)** கருத்துப்படி தனிநபர் வாதம் என்பது ஒரு முரண்பட்ட கருத்தாகவே காணப்படுகிறது. ஒழுக்கமென்பது தனிநபர் வாதமாகும். ஏனெனில் அது தனி நபரைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் அது சிலரை மட்டும் விட்டு விட்டு மற்றவர்களை பாதுகாக்கின்றஒன்றாக இல்லாமல் எல்லோரையும் கட்டாயம் பாதுகாக் வேண்டும் இது அடையப்படாத விடத்து தனிநபர் வாதம் சித்தாந்தத்திற்கு எதிரானதும்,ஒற்றுமை ஈனத்திற்கும்,பொது நலன்களில் விருப்பம் இல்லாத நிலைக்குச் சமனான விடயமாகவும் காணப்படும். இதுதான் தனது சமூகத்தின் புகழ் என்றுமே நிலைத்து நிற்க வேண்டும் என எதிர்பார்க்கின்ற வளர்ச்சியடைந்த சமூகங்களில் நடைபெறுகிறது. **(Camps, 1993, pp 14)**

## தனிநபர் வாதத்தின் பண்பாட்டு ரீதியான நோக்கு

உலகத்திலுள்ள 40 நாடுகளில் ஒரே பல்தேசிய கம்பனிகளில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களிடமிருந்து செய்யப்பட்ட ஹேமாஸ் (Hermes) என்றதிட்டத்தின் முடிவுகளின் படி, இந்த நூலின் எழுத்தாளன் தனிநபர் வாதம் – முழுமை வாதம் (Collectivism) ஆகிய பரிணாமங்களின் முக்கிய காரணிகளை கண்டு பிடித்தார்.

தனிநபர் வாதம் – முழுமை வாதம் போன்றவை பின்வரும் நோக்கங்களைக் கொண்டமைந்து காணப்படுகிறது என்றார்.

a. ஒருவனுக்கு அல்லது ஒருவனது குடும்பத்திற்கு கிடைக்கும் போதுமான இலவச நேரம் (Enough free time)

b. வேலை தளத்தில் ஒருவனது வேலையை செய்வதிலுள்ள சுதந்திரம்

c. தனிப்பட்ட ரீதியில் சிறப்புக்களை ஏற்படுத்துகின்ற தொழில்

d. ஒருவனுக்கு அல்லது ஒருவனது குடும்பத்திற்கு விருப்பமான இடத்தில் வாழுதல்

குறைந்து கொண்டு போகின்றஎதிரான நோக்கங்கள். இலக்குகள்

a. புதிய திறன்களை கற்கின்ற சந்தர்ப்பங்கள்

b. வேலை செய்வதற்கு ஏற்ற பௌதீகக் காரணிகள்

c. வேலைத்தளத்தில் திறனையும் விருத்தியையும் ஆற்றலையும் பயன்படுத்துதல்

d. நல்ல இலாபம்

## தனிநபர் வாதத்தின் உளவியல் நோக்கு

ஹுய் (Hui) 1988ல் தனிநபர் வாதம் என்பது கூட ஒரு தனிப்பட்ட இயல்பூக்கம்தான் என்றார். ஏனெனில் இந்தப் பரிணாமத்தைப் பற்றி தனிநபர்களிடையே காணப்படும் உப பண்பாட்டு மாறுபாடுகள்தான், ஏதாவது பண்பாட்டிற்குள்ளும் காணப்படுகிறது. என்றார்.

இந்த எழுத்தாளனுக்கு இரண்டு பிரதான காரணிகள் முக்கியமாக அமைந்தது

1. எட்டு உப அளவை உள்ளடக்கிய Indcol எனக் கூறப்பட்ட தனிநபர் வாதம் – முழுமை வாத கட்டமைப்பை / உருவாக்கத்தை அளவிடுவதற்கு அதன் அளவில் முன்னேற்றம் காணப்பட உருவாக்கம் பலமுக அமைப்பைக் கொண்டதாகவும், எட்டு முக்கியமான விடயங்களை உள்ளடக்கியும் அளவிடப்படும்.

i. மனைவி அல்லது கணவன் அல்லது பங்காளி
ii. உறவினர்கள்
iii. பெற்றோர்கள்
iv. அயலவர்கள்
v. நெருக்கமான நண்பர்கள்
vi. தன்னோடு வேலை செய்பவர்கள்
vii. கூடிக் குலாவுபவர்கள்
viii. சகோதரர்கள்

2. Indcol நம்பிக்கை, உளப்பாங்கு, நடத்தை ரீதியான நோக்கங்களையும் நடத்தைகளையும் அளவிடும். ஹூயின் கருத்துப்படி இதற்கு கொள்கை ரீதியானதும், முறைமை ரீதியானதுமான விளைவுகள் உள்ளன என்றார். முழுமை வாதத்தின் பொதுவான சுட்டியைப்பற்றி ஹூயி குறிப்பிடும் போது தனி மனிதனைப் பற்றிகுறிப்பிடாமல் 'ஒரு மனிதன் குழுவை நம்புகின்றசெயற்பாட்டை' குறிப்பிட்டார்.

Indcol யை அடிப்படையாகக் கொண்டு Triandis, Bontempo, Vill areal, Asai, Lucca (1998) போன்றோர் 3 விதமான கேள்விக் கொத்தை அமைத்தனர். இந்த வினாக் கொத்தை அமெரிக்காவில் பிரயோகித்து தனிநபர் வாதம் ஒரு பல்வகைத் தன்மையான உருவாகத்தை கொண்டமைந்தது என்பதை பின்வரும் காரணிகளைக் கொண்டு விளக்கினர்.

a. ஒரு உள்ளார்ந்த குழுவில் உள்ளவர்களில் தனிப்பட்டவர்களின் நோக்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல்

b. உள்ளார்ந்த குழுவில் உள்ளவர்களின் கருத்துக்களுக்கு அவதானம் குறைவாக செலுத்தப்படுதல்

c. போட்டியுடன் கூடிய சுயநம்பிக்கை

d. உள்ளார்ந்த குழுவிலிருந்து தூரமாகுதல்

e. மற்றவர்களின் கருத்துக்களை கேட்பதற்கு முன் தீர்மானம் எடுத்தல்

f. உள்ளார்ந்த குழுவில் குறைவாகக் கவனம் செலுத்துதல்

ஆனால் குழுவுக்கும், தனிநபர்களுக்குமிடையே முரண்பாடுகள் தோன்றுமிடத்து தனிநபர் வாதம், தான் எதைச் சரியாக செய்ய வேண்டும் என்பதைக் கூறும்.

## தனிநபர் வாதத்துடனான தொடர்பு :

***சுயம், உள்ளார்ந்த வெளிசார்ந்த குழுவின் உறவு, மனவெழுச்சி ரீதியான அனுபவம்.***

Triandis et al (1988) இன்னும் பலர் தனிநபர்கட்கும், குழுவுக்குமிடையேயான சமூக நடத்தையின் வித்தியாசங்களைக் கற்றனர். இதை ஒழுங்கான முறையில் பின்வரும் அட்டவணை படம் பிடித்துக் காட்டுகிறது.

## தனிநபர்களுக்கும் குழுவுக்கமிடையிலான சில வித்தியாசங்களின் சுருக்கம்

| வித்தியாசமான இலக்கு | தனிநபர்கள் | குழுக்கள் |
|---|---|---|
| 1. சுயத்தின் உள்ளடக்கம் | தனிநபர் வித்தியாசங்கள் | சமூக வகைப்படுத்தல்கள் |
| 2. சுய-அடைதலை-அடையும் வழி | எனக்குத் தேவையானவற்றை நான் செய்ய முடியும் | என்னுடைய குழுவுக்கு நான் பாரமல்ல |
| 3. தங்கிவாழும் குழு | தனி நபர் | குழு |
| 4. நடத்தையின் ஒழுங்கு | தனிப்பட்ட உளப்பாங்கும் இலாப நட்டப் பகுப்பும் | உள்ளார்ந்த குழுவின் நியமங்கள் |
| 5. தனிப்பட்ட நோக்கங்கள் (vs) எதிர் உள்ளார்ந்த குழுவின் நோக்கங்கள் | தனிப்பட்டது > உள்ளார்ந்த குழு | உள்ளார்ந்த குழு > தனிப்பட்டது |
| 6. உள்ளார்ந்த குழுவுக்கும், வெளியார்ந்த குழுவுக்கும் இடையிலான வேறுபாடுகள் | பலவீனம் | பலம் |
| 7. உள்ளார்ந்த குழுவுக்கும், வெளியார்ந்த குழுவுக்கும் இடையிலான ஒத்த தன்மை | வெளியார்ந்த குழு கூடுதலை விட ஒத்த தன்மையானது | உள்ளார்ந்த குழு ஒத்த தன்மை கூடியது |
| 8. உறவின் வகைகள் | கிடையானது | நிலைக்குத்தானது |

மார்க்கஸ் (Makus), கிதயாமா (Kithayama) போன்றோர் தனிநபர்களின் பண்பாட்டை 'சுயாதீனமானது' (Independent Self) எனவும், குழுவில் அங்கம் வகிப்பவர்களை 'ஒன்றுக் கொன்று தங்கியிருப்பது' (Interdependent Self) பண்பாடாக அமையும் எனவும் கூறுகின்றனர்.

## தனிநபர் வாதமும் சமூக தனித்துவமும்:

***Hinkle and Brown* ஆகியோர்களது முன் வைப்பு**

சமூக தனித்துவக் கோட்பாடு என்பது ஒரு குழு ஒப்பீடு, அறிமுக செயற்பாடுகளோடும், குழுக்களுக்கிடையான உறவுகளுடனும், உளவியல் ரீதியான குழுக்களின் அமைப்புகளோடும், தனித்துவ / சமூக தனித்து அளவுகளோடும் வேறு ரீதியான செயற்பாடுகளுடனும் ஒரு தொடர்பைக் கொண்டதாகக் காணப்படுவதாகும்.

Hinkle, Brown போன்றோர்தான் முதன்முதலில் இதைப்பற்றி ஆராய்ந்தவர்கள். கொள்கை ரீதியான அடிப்படையில் சமூக தனித்துவ கோட்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கற்கை நெறியின் படி, சமூக தனித்துவம் 'முழுமை வாய்ந்த குழு வகை' சார்ந்ததாக இருக்குமெனக் காணப்பட்டது. ஏனெனில் முழுமையான குழுவோ அல்லது தனிநபர்தான் உள்ளார்ந்த குழுவினுடையதும் வெளியார்ந்த குழுவினதும் ஒப்பீடுகளின் வெளியீடுகளைப்பற்றி கவலைப்படுபவர்களாகக் காணப்படுவர். இதிலிருந்து விளங்கும் பொதுவான கருத்து யாதெனில் 'முழுமையான மாறுபாடான கருத்துக்கள்' (Collectivist Orientation) சமூக தனித்துவ செயற்பாட்டிற்கு மிக முக்கியமானதாகக் காணப்படுகிறது. (Hinkle and Brown pp - 67)

அனுபவ ரீதியின் அடிப்படையில் Hinkle, Brown, Ely போன்றோர் குழுவுக்கும், உள்ரீதியான குழுவுக்குமிடையில் காணப்படுகின்ற வித்தியாசங்கள் முழுமை வாதிகளிடத்தில் அதிகமாகவும், தனிநபர்களிடத்தில் குறைவாக இருந்தன என்பதை கண்டனர்.

## தனிநபர் வாதமும் தனித்துவக் கோட்பாடும்:

***ஏனைய நோக்குகள்***

சமூக தனித்துவக் கோட்பாடு என்பது உளவியல் ரீதியான குழுவின் ஒரு அமைப்பாகும். Insko, Schopler ஆகியோர் Taifel இன் ஆய்வை குறிப்பிடும் போது குறைந்த வகைப்படுத்தலின் தாக்கம் பங்கிடப்பட்ட குழு அங்கத்தினர்களின் உணர்வைக் குறிக்கிறது என்றனர். உள்ளார்ந்த குழுவின் வித்தியாசம் என்பது குழு அமைப்பைக் குறிக்கிறது.

Triandis நடத்திய ஆய்வின்படி தனிநபர்கட்கும், குழுவுக்குமிடையிலான பிரதான வித்தியாசம் அவர்கள் தங்களது குழுவுடன் கொண்டிருக்கும் / மேற்கொள்ளும் உறவு நிலையைப் பொறுத்தது என்றார். இதை நடைமுறையில் பார்க்கும்போது தனிநபர்கள் குழுவில் சேர்வதற்கு கஷ்டப்படுவதால் இதை மறுதலிக்க முடியும். தனிநபர்களின் வித்தியாசமான நடத்தைகளினால் அவர்கள் குழுவை உருவாக்குவதில் பல கஷ்டங்களை எதிர் நோக்குவர். அதே போன்று முழுமை வாதிகளும் எந்தவித உள்ளார்ந்த குழுவிலும் அங்கத்துவம் பெறாதவரை உள்வாங்குவது கஷ்டமாக இருக்கும்.

## முடிவு *Conclusions*

நடத்தப்பட்ட இரண்டு பரிசோதனைகளிலிருந்தும் தீர்வாக இரண்டு விடயங்களை முன்வைக்க முடியும்

1. சிறிய குழு நிலைமையில் அவரவர் குழுவிற்கே தனிநபர்களும், முழுமை வாதிகளும் பாகுபாடு காட்டுகின்றனர். பாகுபாடு குறைவாக தனிநபர்களிடத்தில் காணப்படுகின்ற நிலைமை இங்குள்ளது. இருந்தாலும் இரண்டு தரப்பாரும் குழு உருவாக்கத்தை ஏற்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர்

2. பாகுபாட்டின் மீதான நம்பிக்கைகளைப்பற்றி கூறும் போது, தனி நபர்களை முழுமை வாதிகளுடன் ஒப்பிடும் போது பாகுபாடு குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதை அவர்கள் உணர்கின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் யாதெனில், தனி நபர்கள் நீதியைத் தேடியும், மற்றக் குழுவுடன் பங்கு கொள்ள வேண்டும் என்ற விருப்பத்துடனேயே தன்னுடைய நடத்தைகளை அமைத்துக் கொள்கிறார்கள் எனக் கூறுகின்றனர். எதிரான குழுக்களை அடக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடத்தில் இருந்தது குறைவு.

தனிநபர்கள்,குழுக்களைப்பற்றிதெளிவாகக் கூறும்போது தனிநபர்கள் அவர்களுக்கும் உள்ளார்ந்த, வெளியார்ந்த மக்களுக்குள்ளான தொடர்பை ஏற்படுத்திக் காணப்படுகின்றனர். முழுமை வாதிகள் உள்ளார்ந்த, வெளியார்ந்த குழுக்களுடன் ஒப்பிட்டு தங்களைப்பற்றி கொஞ்சம் கூடுதலாக கரிசனை செலுத்துகின்றனர். தனிநபர்கள் தங்களை நியாயமானவர்களாகவும் அதே நேரத்தில் குறைவான பாகுபாடுடையவர்களாகவும் அவர்களை அவர்கள் காண்கின்றனர். குழுவின் அங்கத்தவர்களாக தனிநபர்கள் காணப்பட்ட போதிலும் சில விடயங்களில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கும், அதே போன்று சில விடயங்களை எதிர்ப்பதற்கும் உரிமை அவர்கட்கு உண்டு.

மேலுள்ள எல்லா விடயங்களிலிருந்தும், தனி நபர்கள் குழுவை உருவாக்குவதில் / அமைப்பதில் சொல்லொண்ணாத் துயரங்களை எதிர்நோக்குகிறார்கள் என்பது ஒரு முக்கியமான விடயமல்ல. ஆனால் தனிநபர்கள் அவர்களின் தனிப்பட்ட நம்பிக்கைகளைப் பாதுகாத்துக் கொண்டு இந்த செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கின்றார்கள். சமூகத்திலும், குழுக்களிலுள்ள மக்களின் நடத்தைகளை ஆராய்வதற்கான இவ்வாறான கற்கை நெறிகள் / ஆய்வுகள் நடத்தப்படுவது அவசியமாகவுள்ளது.

## அத்தியாயம் — ஒன்றிலிருந்து
## 90களின் குறிப்பு ஒன்று

நதிக்குள் விழுந்த மௌனம்
மௌனம் ஒரு புதையல்
தோண்டத் தோண்ட
வார்த்தைகள் சுரந்து கொண்டே இருக்கும்

மௌனம் ஒரு மந்திரம்
ஆறுதலாக வந்து
சொர்க்கத்திற்கும் கடத்திச் செல்லும்
மனசுக்குள்
துடித்து வெடித்து
நரகத்திலும் குளிப்பாட்டும்
மௌனம் ஒரு விசித்திரமானது
ஒவ்வொன்றிலும் குந்தியிருக்கும்

ஆணின் மௌனம் பலவீனம்
நிலவின் மௌனம் நிம்மதி
அறிவின் மௌனம் ஞானம்
அன்பின் மௌனம் அழகு
தூக்கத்தின் மௌனம் நாகரீகம்

ஒரு பெண்ணின் மௌனம்?

விஞ்ஞானத்தில் இறக்கை கட்டி
நிலவுக்குப் பறந்தாலும்
மௌனத்திற்கு அர்த்தம் சொல்ல
வலிமையில்லை மனிதனுக்கு






என்னை நேசித்தாளோ இல்லையோ
கவிதை பாடி
நெளிந்து நெளிந்து நடனமாடிவரும்
அந்தக் கிராமத்து மெல்லிய ஓடையில்
முகம் கழுவும்
ஒவ்வொரு காலையிலும்
என்னைப் பார்த்து சிரிப்பாள்
அந்த வினாடிகளில் மட்டும்
உதடுகளுக்கு நடுவிலிருந்து
நழுவி விழும்
அவள் மௌனச் சொட்டு
இச்சிறிய நதியில் விழுந்து
கடலிலும் கலந்து
சமுத்திரம் வரை ஓடி விட்டது

இனி
சமுத்திரத்து மீன்கள் பேசிக் கொள்ளாது
நீர் ஆவியாகி மழை கொட்டினாலும்
மௌனமாகவே பொழியும்

அது
வேர்களுக்குள் இறங்கி
கலங்களிலே கருக்கட்டி
மரங்களில் மௌனம்
குலை குலையாக தொங்கும்
எத்தனை
ஆயுதங்கள் அடுக்கடுக்காக வந்து
அச்சுறுத்தினாலும் மௌனத்திற்கே அஞ்சுவேன்
மரணத்தை விடவும்
பெண்ணின்
மௌனத்திற்கே அஞ்சுவேன்



## 90களின் குறிப்பு இரண்டு :

ஊருக்கு வரமாட்டேன்
என் சிறைவாழ்க்கையின் முடிவுத் தேதி
நாளைய பொழுதுகளின் அறிவிக்கப்படலாம்
நான் அனுபவித்த வாழ்வைப் போல
நீயும்
என் பிரிவுத் துயரில் கரைந்து கிடக்கலாம்

பட்ட மரத்தடியில் நிழல் தேடிய என்னைப் போல்
நீ
என் ஞாபகங்களில் சுடப்பட்டுக் கிடக்கலாம்


உன் கடைசிக் கடிதத்தின் கடைசி வரிகளால்
என் உயிர்த் துடிப்பு நிறுத்தப்பட்டு விட்டது
நீ எழுதியிருந்தாய்
வீட்டில் கல்யாண வேலைகள் கடுமை
நீங்கள் ஊருக்கு வராவிட்டால்
என் உயிர் பிரிந்து விடும்கூடி என்று

என் உடலில் இருந்து
ஒழுகிக் கொண்டிருக்கும் உயிர்த் துளிகளோடு
வழக்காடி
தோற்றுப் போய் மரணத்தை நேசிக்கிறேன்
இந்நீண்ட பிரபஞ்சத்தில்
எனக்காக நீ உன்
வாழ்க்கையை குறுக்கிக் கொள்ள
நான் பிரியப்படவில்லை

'செம்பொடையனும் கள்ளிக்காடும்'
எனும் வெளிவரவுள்ள நூலிலிருந்து

மஜீத்

# கனவுகளின் காலம்



**எம். அப்துல்றஸாக்**

தாய்க்கும் தந்தைக்குமான மனக்கசப்பு மகனான என்னை நீதிபதிக் கூண்டில் நிறுத்தி வைத்திருக்கும் அளவிற்கு வளர்ந்து விட்டதுதான் இதுவரை காலமும் அவர்கள் வாழ்ந்ததன் தோல்வியை ஒப்புக் கொள்ளச் செய்வது போல் இருந்தது.

மேற்கொண்டு ஒரு எழுத்தைக் கூட வாசித்து கிரகித்துக் கொள்ள முடியாத படிக்குமண்டையும், அதற்குள்ளிருக்கும் இதர பாகங்களும் விறைக்க ஆரம்பித்திருந்தன. புத்தகத்தை தலைகீழாய் கவிழ்த்து விட்டு கண்களை மூடுகிறேன். இப்படி மூடும் போதுதான் ஏனைய உறுப்புகள் விரியத் திறந்து கொள்கின்றனவோ! சில்வர் பாத்திரங்கள் ஒன்றையொன்று உரசுவது அபரிமிதமான ஒலியுடன் இடைவெளி விட்டு கேட்டுக் கொண்டேயிருக்கிறது. திறந்திருக்கும் குசினிக் கதவினூடாக அருகிலிருக்கும் வேப்ப மரக்காற்று உள் நுழைந்திருக்க வேண்டும். இறைச்சிக் கறியின் தீய்ந்த மனம் கறிவேப்பிலை வாசத்துடன் தூக்கலாகக் கடந்து செல்கிறது. இரவின் நெடுநேர அமைதி. இதைச் சீர் குலைக்கும் படியாய் உம்மாவோ, வாப்பாவோ ஒரிரு வார்த்தைகளாவது பேசமாட்டார்களா என்றிருந்தது.

சூழலின் இறுக்கம் தழுவிய இக்கொடூர அமைதியை என் உரத்த குரலின் கத்தி கொண்டு பிளந்து விட வேண்டும் போலிருக்கிறது.

இந்த 24 வயதிற்குள் நான் எவ்வளவோ சண்டைகளை பார்த்தாகி விட்டது. பெரும்பாலானவற்றிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் துணைபோயிருக் கிறேன். ஆனால் மூன்று நாட்களாக பச்சைத் தண்ணீர் கூட குடிக்காமல் வாப்பா நடத்திவரும் அகிம்சைப்

போர்தான் புதுநாணயமாக இருக்கிறது. உடம்பின் பிடி தளர்ந்து கொண்டுவரும் உம்மா கூட ஒழுங்காகச் சாப்பிட்டாரா தெரியவில்லை. தொண்டை கட்டிப் போயிருக்கிறது. அவரின் கண்களுக்குக் கீழே நிரந்தரமான சோகத்தின் வடு குடியிருக்க ஆரம்பித்து விட்டது.

நான்தான் பாவம். இவர்களுக்கிடையில் ஒரு கடைசி இருக்கை பார்வையாளன் போன்று அமர்ந்திருக்கிறேன். சமாதானம் சொல்வதற்குரிய முகாந்திரங்கள் ஏதும் கைவசம் இல்லை என்பதோடு பிரச்சினையின் அடி, நுனி என்று நான் அறிந்தவையெல்லாம், உம்மா பாத்திரங்களை ஒன்றுடனொன்று மோதி எழுப்புகின்றஒலியின் சிறு பொறிமட்டுந்தான்.

இவ்வளவிற்கும் கந்தளாயிலிருந்து இன்று மாலைதான் வீடு திரும்பியிருந்தேன் எதிர்பார்த்தபடி நிறைவேறாமல் போன பயணத்தில் காசைக் கரியாக்கிய கவலை நெஞ்சிநோரம் துருத்திக் கொண்டு நிற்கிறது.

'சீசன்' என்பதால் நண்பர்கள் நான்கு பேரும் முதலில் சிவனொளிபாதமலை ஏறுவதாகத்தான் திட்டமிருந்தது. பஸ்ஸில் ஏறும் கடைசிக் கணத்தில் எப்போதும்போல ஹலிம்டீன் கம்பி நீட்டி விட, காய்ச்சலில் துவண்ட தன் தங்கையை ஏற்றிக் கொண்டு நிஜாப் கல்முனை வைத்தியசாலையில் தங்கி விட்டிருந்தான்.

தந்திக் கம்பிகளில் இப்படி சுவாரசியமற்ற செய்திகள் வந்து சேர்வது, கூடவே இருந்த தாலிபுக்கு கோபத்தைக் கிளப்பி விட்டது.

"தொடங்கிய பயணத்தை இடையில் நிறுத்திக் கொள்வது நமக்கு நாமே செய்யும் நம்பிக்கைத் துரோகம் போலில்லையா" என்றான். அதனால்பஸ் எங்கே நகர்கின்றது என்றகவலை மட்டும் எங்களுக்கிருக்க வில்லை.

கந்தளாய்க்குள் நுழைந்த போது சூரியன் குளத்திற்குள் விழுந்திருந்தது. டவுணை வந்தடையும் நோக்கில் பிரிந்து செல்லும் இரண்டு பாதைகளில் அஸாமுடைய வீடு எங்கே இருக்கிறது என்பதைத் தவிர்க்க குளக்கரையோரமே இறங்க வேண்டியதாயிற்று. மாணிக்கக்கல் தோண்டும் போது அஸாமை யானை துரத்திய இடம் அதுவாகத்தான் இருக்க வேண்டுமென தாலிப் குறிப்பறிந்து கூறிக் கொண்டிருந்தான். குளத்திற்கு அப்பாலுள்ள புதர்களுக்குப் பின்னே பாலைவனம் போன்றிருந்த அந்நிலம், நீண்டு விசாலித்திருந்தது ஒரு ரகசியம் போலிருந்தது. மெல்ல மெல்ல நடக்கையில் விரிந்து இடம் தரும் குளக்கரை பாரிய நீர் ராஜ்ஜியத்தை அடக்கி வைத்திருப்பது பிரமிப்பூட்டியது

" இலங்கையின் இரண்டாவது நீர்த்தேக்கம்...." என தாலிப் பெருமூச்செறிந்தான்.

குளம் முடிந்த முதலாவது வளைவில்தான் அஸாமின் சகோதரி வீடிருந்தது. அங்கு அவன் அநாயாசமான வம்புப் பேச்சுகளுடன் ஏதாவது கதையளந்து கொண்டிருப்பான் போல் தோன்றியது. கெம்பஸில் எங்களுடன் இருந்த மூன்று வருடங்களும் கதைத்துக்கதைத்தே காலத்தை கடத்தியவன் அவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும். இதற்கிடையில் ஆசிரியர் பயிற்சிக்

கலாசாலையிலும் சேர்ந்து கொண்டான். 'ரெய்னிங்' முடித்த கையோடு ஒரு அடிப்படை ஆசிரியனுக்குரிய தகுதியை அவன் பெற்றுவிட்டதாகத்தான் எல்லோரும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் அவன் செய்த குழறுபடிகள் யாவும் எங்கள் நண்பர் வட்டாரத்திற்கு மட்டுமே தெரிந்த கதை. தூரத்தில் எங்களைக் கண்டவுடன் நம்பமுடியாதவனாய் ஓடோடி வந்து கட்டிக்கொண்டான். வந்த நோக்கத்தை சொன்னதும்தான் அவன் முகம் மெல்லக் களையிழந்து போனது.

''இன்றைக்கு இன்ஸ்பெக்ஷனுக்கு ஆட்கள் வருவார்கள்" என்று சொல்லிக் கொண்டே விடியக்காலைகளில் பாடசாலைக்கு கிளம்பிவிடுவான். சாப்பாடு மட்டும் நேரம் தவறாமல் கிடைப்பதற்குரிய வழி வகைகளே தன் சகோதரியின் வீட்டிலும், சகோதரனின் வீட்டிலும் ஏற்படுத்திபிருந்தான்.

காற்றோட்டம் இல்லாத அவனது அறை வெயில் ஏற ஏற புழுக்கம் கொள்ளத் தொடங்கிய போதெல்லாம் குளத்திற்கு ஓடோடிச் சென்று இளகிக் கரை சேர்வதுதான் அங்கு சென்றதன் ஒரேயொரு நன்மை போல் தோன்றியது. மூன்று நாட்களாகியும் அஸாம் மசிவதாகத் தெரியவில்லை. மறுநாளே வீட்டு ஞாபகம் ஒரு நோயாய் தொற்றிக் கொள்ள பயணத்தை பாதியில் முறித்து நாங்கள் வீடு திரும்ப வேண்டியதாயிற்று.

இங்குதான் எல்லாமே தலைகீழாய் மாறிவிட்டிருக்கிறது. வாங்கி வந்த பழங்கள் தீண்டுவாரற்று கட்டிலில் மூளைக்கொன்றாய் சிதறிக் கிடக்கின்றன. வழமையாய் துள்ளிக் குதித்து குஸ்தி காட்டும் தம்பி ஒரு ஓரமாய் சுருண்டு படுத்திருக்கிறான். மூத்தவளுக்கு ரேடியோவில் பாட்டுக் கேட்க முடியாத அவஸ்தையாய் இருக்க வேண்டும். அவள் முகத்தில் இன்னும் சந்திரன் கிளம்பவில்லை. மற்றவள் தான் இவற்றையெல்லாம் எப்படி புரிந்து கொள்கிறாளோ! வயதும் கூட சற்றுக் கம்பிதான் நிலைகட்டோரம் அமர்ந்து மோவாயை முழங்காலில் தாங்கிக் கொண்டிருக்கிறாள்.

வெறுமையை படரவிட்டுக் கொண்டே வீடு வெறிச்சோடிக் கிடப்பது அபூர்வமான தாகத் தோன்றுகிறது. வாழ்ந்து கெட்டவர்கள் கடன் தொல்லையால் வீட்டைக் காலி செய்யும் போது கடைசியாய் ஒரு தடவை திரும்பிப் பார்த்து ஞாபகங்களை கரைசேர்ப்பது போன்றதுதான் வாழும் போதும் வீடு அமைதியாய் தூக்கம்பேணுவது. வெறும் கல்லும், மண்ணும், ஜன்னலும், கதவும் வீடு என்பதை என்னால் ஏற்கமுடியவில்லை. ஆண்களின் ஆத்திரமும், பெண்களின் விசும்பலும், குழந்தைகளின் பிடிவாதமும்தானே வீடு. இவற்றிலொன்று தானே. ஒரு வீடு இரண்டு படுவதற்குரிய அடிப்படைக் காரணமாய் இருக்க முடியும்?

எங்கள் பால்ய வீடு குளிர்ந்த நீரின் அடியாழத்திலிருந்து மெல்ல மெல்ல மேற்கிளம்பிவருவதாகத் தோன்றுகிறது. உம்மாவைத் திருமணம் முடித்து, கூட்டி வந்த கையோடு வாப்பா சுமந்த மண் குவிலில்தான் முதல் குடிசையை எழுப்பியிருக்கிறார்கள். நீண்ட காலமாக நீர் தேங்கி நின்ற பள்ளப் பகுதி என்பதால் நிலத்தில் உப்போடி விறைத்துப் போயிருந்தது. கால்களை தூக்கிவைக்கவே கூசும்

கவிச்சிமண். பச்சை மணக்கும் ஒரு வித முடைநாற்றம் அம்மண்ணிலிருந்து பிரிக்க முடியாத கூறாய் எப்போதும் மேற்கிளம்பிக் கொண்டிருக்கும். நான் பிறந்த போது அதிஷ்டவசமாக செத்தைக் குடிலைப் பிரித்து நான்கு பக்கமும் செங்கல் சுவர் எழுப்பியிருக் கிறார்கள். கூரை மட்டும் வழமையான தென்னோலைக் கிடுகுதான். நிலவைப் பார்த்துக் கொண்டே என்னைப் பிரசவி த்ததாக உம்மா அடிக்கடி கூறுவார். வீட்டை விடவும் ஆறுதலான விடயம் முன் னால் பந்தலிடப்பட்டிருக் கும் நீண்ட விறாந்தைதான்

அட்டணக்கால் போட்டு அமர்ந்திருக்கும் கிழங்க ளுக்கு எங்கள் பகுதியில் பஞ்சமில்லை என்பதால் ஒவ்வொரு மாலை நேரமும் ஏழெட்டுக் கிழவி களையாவது இந்த விறாந் தையில் சந்திக்க முடிய மாக இருக்கும். எதிரே குளத்திலிருந்து வீசும் காற்று சுகமான நித்திரை யைக் கொண்டு வருகின்ற தென்பதால் தான் இக்கூட்டம். இதற்கிடையில் உம்மா பற்றிய அனுதாபங்கள் அவர்களின் வாயில் வெற்றிலைச் சாறுபோல் வடிவதுமுண்டு.

> **வெறும் கல்லும், மண்ணும், ஜன்னலும், கதவும் வீடு என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. ஆண்களின் ஆத்திரமும், பெண்களின் விசும்பலும், குழந்தைகளின் பிடிவாதமும்தானே வீடு. இவற்றிலொன்றுதானே ஒரு வீடு இரண்டுபடுவதற்குரிய அடிப்படைக் காரணமாய் இருக்க முடியும்.**

புரட்சிகரமானதாக இல்லையென்றாலும் தன்வீட்டாரின் சம்மதமின்றி உம்மாவை இங்கு அழைத்து வந்தது வாப்பாவின் குடும்பத்தினருக்கு நெஞ்சில் நெருப்பை கட்டிக் கொண்டிருப்பதைப் போலிருந் திருக்கிறது. நான் பிறந்து நான்கைந்து வருடம் கழியும் வரை எந்த ஒட்டுதலுமில்லாத தனித்தீவாகத்தான் உம்மா வாழ்ந்திருக்கிறார். மொனரா கலைக்கு மரக்கறி வியாபாரத்திற்குச் செல்லும் வாப்பா சில சமயம் வீட்டையே மறந்து விடுவாராம். தனியே வீட்டிலிருந் தால் பேய், பிசாசு உன் பிள்ளையை அடித்து விடும் என்று யாராவது ஒருவர் பயமுறுத்திக் கொண்டே செல்வார் களாம். தண்ணீர்க் கரையோரம் சனங்கள் மடைகழிப்பதால் கெட்ட சைத்தான்களின் பார்வை பிள்ளை மேல் விழுந்து விடும் என்பதற் காக தும்புக்கட்டையும், ஈர்க்குக் கட்டையும் நிலைக்கதவில் வைத்து விட்டு கொட்டக் கொட்ட விழித்த படியே நகரும் இரவுகளை பார்த்துக் கொண்டிருப்பாராம் அவர்.

பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கும் காலங்களில் கூட திடுமென விழித்துக் கொள்ளும் உம்மா கடிகாரத்தைப் பார்க்காமலே நேரத்தைச் சரியாகச் சொல்லிவிடுவார்.

" சாமம் பிறக்கும் நேரம் டா. பேசாமல் தூங்கு" என்பார்.

இரவுகளுக்கென்றிருக்கும் தனித துவமான ஓசை கூட அவர் சொல்லித் தெரிந்ததுதான். பூனை குளறுவதும், நாய் ஏறுவதும், கோட்டான் அலறுவதும் பிரத்தியேகமான அந்தந்த நேரங்களில் தான். நாய், பூனைக்கெல்லாம் கதவில் தட்டி சப்தம் எழுப்பினாலே போதும். மெல்ல அடங்கிவிடும். கோட்டானை

விரட்டுவதுதான் பகீரத முயற்சி. "பாக்கு வெட்டியையோ, நீண்டதொரு கதவுச் சாவியையோ எரியும் நெருப்பின் சுவாலையில் பிடித்து காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும். இங்கு இரும்பைக் காய்ச்சக் காய்ச்ச கோட்டானின் குரல் வளையில் முடிச்சு விழுந்து அப்பாலே பறந்து போய்விடும்" என்பார்.

"எங்காவது வீட்டில் அதற்கு மையத்து மணத்திருக்கும்" என்றபடி கொதுப்பிக் கொண்டிருந்த வெற்றிலையை துப்புவதற்கு கிண்ணமோ, சிரட்டையோ தேடிக் கொண்டிருப்பார். இப்போது சமயலறையே கதி என்று கிடக்கிறார்போல. நான் வந்திறங்கிய போது " உன் வாப்பா மூன்று நாட்களாக பச்சைத் தண்ணீர் கூட குடிக்கவில்லை" என்று சொல்லி விட்டுச் சென்றவர்தான். வெகு நேரமாகியும் வெளியே தலைகாட்ட வில்லை.

வாசலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து திரியும் வாப்பாவைத் தான் ஓரிடத்தில் பிடித்து அமர்த்த வேண்டும் போலிருந்தது. மனசு கட்டுக்கடங்காமல் சஞ்சலப்பட்டுக் கிடக்கும் நாட்களில் இப்படி மாடு உழத்துவதைப் போல வாசலை கிண்டிவிட்டுத் தான் தேடுமே என்று குந்துவார். தடதடவென ஒலித்தடங்கும் அவரின் காலடிச் சுவடுகள் கோபத்தின் நிரந்தர வடுவைப் போன்ற பயத்தை ஏற்படுத்தும்.

அப்போது எனக்கு ஏழெட்டு வயதுதான் இருக்கும் வீட்டின் நடு மூலையில் இருந்து தடுப்புச் சுவர் மண்டபத்தையும், குசினியையும் பிரிக்கும் முகாந்திரமாக எழுப்பப்பட்டு இரண்டு நாட்கள் தான் ஆகிவிட்டிருந்தன. தென்னோலைக் கீற்றில் ஈர்க்கு முறித்து நான் எழுதிய பெயர் கூட காய்ந்தும் காயாத பச்சை சீமெந்து வாசத்துடன் கமகமத்துக் கொண்டிருந்தது. வாசலில் செருப்பைக் கழற்றாமலே வேகமாக உள் நுழைந்த வாப்பா யாரும் எதிர்பாராததொரு கணத்தில் சுவருக்கு ஒரு உதை விட்டார். கீலமாய்ச் சிதறிய செங்கற்களில் ஒன்று சோற்றுப் பானையின் மேல் விழுந்து அப்பாலே எம்பிக் குதித்தது. நிலை குலைந்து போன உம்மா சுதாகரிப்பதற்குள் சரமாரியாக விழுந்த அடிகளைத் தாங்கவொண்ணாது கூட்டுப் புழுவைப் போல சுருங்கிவிட்டார். வீட்டுக் கு வந்த வாப்பாவின் தாயை உம்மா தன் தலையில் ஏற்றி வைத்து கொண்டாடவில்லை என்பதற்காகத்தான் இப்பூசை என்று அவர் உரக்கக் கத்தியது கிணற்றின் அடியாழத்திலிருந்து ஒலிப்பதைப் போலிருந்தது. அன்று உம்மாவும், நாங்களும் பட்டினி கிடந்த போது பானைச்சோற்றையும், ஒரு சட்டிக் கறியையும் வாப்பாதான் சாப்பிட்டு முடித்தார். கோபம் அதிகமாகின்ற நாட்களிலெல்லாம் இப்படித்தான் பானையும், சட்டியும் வெறுமையாகிக் கொண்டிருக்கும். பின்னரெல்லாம் வாப்பாவின் கோபத்துடன் உம்மா சமரசம் செய்து கொள்ளப்பழகியது எங்கள் வயிறுகளின் சுற்றளவை எண்ணித்தான்.

நாங்கள் வளர வளர கையோங்குவதை வாப்பா தவிர்த்துக் கொண்டார். கோபத்தில் ரத்தம் சூடேறிக் கொதிப்பதைத்தான் அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு நாள் ஒரு வாளித் தண்ணீரை தன் மேல் கவிழ்த்துக் கொண்டு படிக்கட்டோரம் அவர் குந்தியதைப் பார்த்த போது என் கண்கள் நீரினால் நிரம்பிவிட்டன. வாப்பா அப்படிக் குலுங்கக் குலுங்கி அழுததை

என் வாழ்நாளில் கண்டதேயில்லை. உம்மா கூட வாப்பாவின் இயலாமையை பார்த்துத்தான் அழுதிருக்க வேண்டும். எங்கிருந்தோ வந்த திடீர் ஞானம் வாப்பாவை ஒரு ஆன்மீக வாதியாக மாற்றிவிட்டது. அனல் தகிக்கும் கோபத்தைக் கூட ஒரு மெல்லிய அதிர்வின் மூலம் கடந்து கொண்டிருந்தார். எல்லையற்ற கோபத்தில் ஒரு நாள் திடீரென தனக்குத்தானே அறைந்து கொண்டார்.

ஆனால் இவற்றிக்கெல்லாம் நேரெதிரான பழைய வாப்பாவை கண்டதான பயம் சற்றைக்கெல்லாம் என்னைக் கவ்விக் கொள்கிறது. நான்கு நாட்களுக்கு முன் தம்பி ஆசையாய் கொண்டு வந்த பீர்க்கங் கொடியுட்பட முழு வாசலுமே துவம்சம் செய்யப்பட்டுக் கிடக்கிறது. கத்தா மரத்தின் நிழலைப் பிடுங்கி மண்டபத்திற்குள் சித்திரம் வரையும் நிலவை ரசிக்க முடியவில்லை. கதிரைக்குள் தன்னைத்தானே சுருக்கிக் கொண்ட வாப்பா தலையைக் கவிழ்த்தபடி தூங்க ஆரம்பித்திருந்தார். பூனைபோல் அடியெடுத்து வந்த இளையவள் இராச்சாப்பாட்டை கதிரைக்கருகில் வைத்து மெல்லப் பின்வாங்குவது கதவிடுக்கினூடே நிழலாய் மறைகிறது.

வீட்டிலிருக்கும் போதெல்லாம் நானும் வாப்பாவும் ஒன்றாய்ச் சாப்பிடும் வகையறாவில்தான் இரவுச்சாப்பாடு வைக்கப்பட்டிருக்கும். ஒருவர் முந்திக் கை கை நனைத்தாலும் மற்றவரை ஒரு பேச்சுக்கேனும் கூப்பிட வேண்டு மென்பதுதான் சம்பிரதாயம். இந்த சங்கோஜத்தில் பசியை ஒத்திப்போட்டு யாராவது வாய் திறக்கும் வரை மௌனம் காப்பதென அமைதியாகிறேன்.

ஆலவீட்டிற்குள் உம்மா இலை வெட்டும் சப்தம் சன்னமாய்க் கேட்கிறது. படிப்பை இடைநடுவில் நிறுத்திய மூத்தவள் பொழுது போக்கிற்காக பக்கத்து வீட்டுக்குச் சென்று வரும்போதெல்லாம் வேடிக்கையான ஊர்க்கதைகளையும், பீடி சுற்றும் புதுத் தொழிலையும் பழகிக் கொண்டு வந்திருந்தாள். ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும் 'பத்திரம்' என்ற அச்சை வைத்துக் கொண்டு உம்மாவும் வெகு திறமையாக இலை வெட்டப் பழகிக் கொண்டார். மூத்தவள், நனைத்த இலையில் புகையிலையை வைத்து உருட்டிக் கொடுக்க பீடியை இளையவள் நூலால் கட்டி செப்பனிட்டு விடுவாள்.

நான்கு நாட்களுக்கு முன்னரான ஒரு அந்தியில் சுற்றிய பீடிக் கட்டுகளை யெல்லாம் பிரமிட்போல அடுக்கிவைத்து வேடிக்கை காட்டிக் கொண்டிருந்த இளையவளுக்கு வாப்பா கூப்பிட்டது காதில் விழாமற் போனதுதான் பெரும புயலைக கிளப்பிவிட்டது. ஏலவே உள்ளுக்குள் குமைந்து கொண்டிருந் தார் போல "என் உழைப்பில் நீ திருப்தி காண்கிறாயில்லை" என உரக்க சப்தமிட்டுக் கொண்டே பீடிக் குவியலை ஓங்கி மிதிப்பதற்குத் தூக்கிய அவரது காலை உம்மாதான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அது மன்னிப்புக் கேட்கும் பாவனையிலன்றி பீடிக் கட்டுகளை காப்பாற்றிக் கரைசேர்க்கும் தைரியத்தில் நிகழ்ந்தது வாப்பாவை பெருத்த அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. உயர்ந்த கால்கள் அப்படி விறைத்துப் போய் நிற்பது போன்ற தோரணையில் ஆழ்ந்தன. ஒரு போதும் இல்லாதவாறு உம்மாவிடமிருந்து எழுந்த எதிர்ப்பு அவரை ஒரு சிலை போல ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. அன்றிரவு வழமைக்கு

மாறாய் முன் வாசலில் நீண்ட நேரமாய் மின் விளக்கு எரிந்தது.

இதற்கிடையில் மறுநாள் புறப்படும் எனது பயணம் ஒரு கேள்விக்குறி போல் தொங்கிக் கொண்டிருந்தது கண்ணெதிரே தூக்குக் கயிறு ஆடுவது போன்ற பிரமையைத் தந்தது. என்னை வேகமாகக் கடந்து செல்லும் பஸ்ஸைத் தொடர்ந்து நான் ஓடுவதாகவும், என் பின்னே வாப்பா ஓடி வருவதுமான சிறு சிறு கனவுகள் உறக்கத்திற்கும் விழிப்பிற்குமிடையில் அலைக்கழிந்து கொண்டிருந்தன. ஆனால் எல்லோரும் விரும்புகின்ற அதிகாலையாய் பொழுது புலர்ந்ததில் எனக்குத்தான் ஆச்சரியம் அடங்கவில்லை. சுபஹு க்காக பள்ளிக்குச் சென்ற வாப்பா பாலப்பச் சோடிகளுடன் தான் திரும்பியிருந்தார் சூடு ஆறுவதற்குள் அப்பத்தை தின்றுவிட வேண்டுமென்பார். ஒவ்வொருவராகத் தட்டியெழுப்பியவர் உம்மாவுக்கருகில் சம்மாரம் கோரி அமர்ந்து கொண்டார். வாப்பாவின் பாஷையில் இந்த இருப்பு மன்னிப்புக் கேட்பதற்காகவும், சமரசம் செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டது தான். நான் கிணற்றடிக்குள் நிற்கும் போது உம்மாவைக் கெஞ்சலுடன் தட்டியெழுப்பும் அவரின் குரல் அமுங்கிக கேட்டது. புறப்படும் போது எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் வழியனுப்பி வைத்தார்கள்.

நீண்ட பெருமூச்சுடன் சடுதியாக நீண்டுவருகின்ற நிழல் உம்மாவினுடையதானத்தான் இருக்க வேண்டும். காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறேன். திக் திக்கென அதிர்ந்து மறையும் சுவர்க்கடிகாரத்தின் ஓசையைத் தவிர வெளியே காற்றுக்கூட அசைவதாகயில்லை. வாப்பாவை சாப்பிட அழைக்கும் உம்மாவின் குரல் மெல்ல சுருதியற்றுக் கேட்கிறது. நூலிழையாய் இழுபடும் மயான அமைதி.

"சாப்பாடு வேண்டாம். அள்ளிக் கொண்டு போ ..... பிள்ளைகள் உழைக்குமளவிற்கு வளர்ந்து விட்டார்களென்ற திமிர் உனக்கு. இப்போதெல்லாம் நீ என்னைக் கண்டு கொள்வதேயில்லை" குளக்கரை உடைந்து பாய்வதைப் போல வாப்பா பேசுகிறார்.

உம்மா முணுமுணுப்பது என் காதுகளை வந்தடையாமல் இடையிலேயே முறிந்து போவது போல் இரைந்து மறைகிறது. நான் இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறேன் என அவர்கள் எச்சரிக்கையடைந்திருக்க வேண்டும். மெல்லிய ஆனால் அழுத்தமான குரலில் இருவரும் வாக்குவாதப் படுவது தெரிகிறது.

" போங்கோ ...... போய்த் தொலைங்கோ .... உங்களைக் கலியாணம் முடித்து நான் கைந்து பிள்ளை பெற்றதைத் தவிர நானெந்தச் சுகத்தைக் கண்டேன்...."

உம்மா உரத்துக்கூவுவது வீட்டின் உள்ளறைச் சுவர்களில் மோதித் திரும்புகிறது. அதன் பின்னே அவசரமாய் எழும்பும் வாப்பாவின் நிழல் வீட்டுத் திண்ணையை நனைத்துக் கொண்டு வெளியே இழுபட்டுச் செல்வது ஒரு கனவு போல் நடந்தேறுகிறது.

ஆணின் ஆத்திரமும், பெண்ணின் விசும்பலும், குழந்தைகளின் பிடிவாதம நிறைந்த எங்கள் வீடு மட்டும் மெல்ல இருளடைந்து வெறிச்சோடிப் போய்க் கொண்டிருக்கிறது.



நான் நெருங்கிப் பேச பயன்படுத்தும் குறியீடுகளை
நீ அலட்சியம் செய்கையில்
அதனுள் ஒரு ஓடையைப் போல நழுவும் அச்சத்தை
நீ பொருட்படுத்த மறுக்கையில்
இமைகளுக்கு மேல் உறங்கும் வண்ணத்துப் பூ ச்சிகளோடு
உனது குகைக்குள் நுழையத் தயங்குகிறேன்.
உன்னால் குதித்து தாண்டிவிட முடியாத
மலைகளுக்குப் பின்னிருந்து நான் பேச நினைக்கிறேன்.
எதைக் கைப்பற்றி உனதாக்க முடியாதோ
அதற்குள்
ஒழிந்திருந்து பேசும் குரலை நீ தான் பரிசளித்தாய்

இறக்கைகளை விரிக்க முடியாமல் கொடுகும் பனியுள்ளிருந்து
நெருக்கமாய் விரும்பிய எனது மரங்களை நினைக்கிறேன்
அதன் இலைகளிலிருந்து வடியும் ஓசைகளின் தொனியை
தற்செயலாய் ஒரு முறை பாடினேன்
காதலின் செய்தி போன்ற அந்த மிருதுவான பாடலை

உனது பாதச் சுவடுகளின் கீழ் நசுங்கும்
எனது நிலத்தின் பெருமூச்சு நீளமானது
மிக வலிமையானதும் கூட
மண்ணிலிருந்து கிளம்பி
நட்சத்திரங்களோடு பேசத் துணிவுள்ளது
உன்னால் கைப்பற்ற முடியாத பள்ளத்தாக்கிலிருந்து
நட்சத்திரங்கள் உதிரும் இரவுகளில்
மிருதுவான என் பாடலைப் பாடுவேன்
எனது காற்று வெளியை உன்னிடமிருந்து பறிக்கும் வரை

# றியாஸ் குரானா கவிதைகள்

பயணிக்கத் தொடங்கிவிட்டேன்
அது கிழக்கிலிருந்து புறப்பட்டுச் செல்லும்
ஒரு ரயில் வண்டி
வெவ்வேறு துயரங்களுடன் அமர்ந்திருக்கும்
எந்தப் பயணியையும் விசாரிக்க நினைக்கவில்லை.
சென்றடையும் இடங்களைப் பற்றியும். இன்னும் பிறவும்
தமக்குள் பேசிக் கொள்கின்றனர்
ஜன்னலுக்கு வெளியே மகிழ்ச்சியாய் இருந்தது
சோதனைச் சாவடிகளில் எழுதப்பட்டிருக்கும் வாசகத்தைத் தவிர
"ஒத்துழைப்புக்கு நன்றி"

**— போர் நிலத்தில் பயணம்,**
**ஒரு பொது மகனின் பார்வையில்**



கொழுத்துக் குலுங்கும் சதைகள் என்னிடமில்லை
எலும்பையும். தோலையும் உனக்குத் தர
நான் விரும்பவில்லை
என் உள்ளங்கையைத் தோண்டி உனக்குத் தரலாம்
அது உனக்குப் போதுமானதோ என்னவோ
இப்படி நான் பேசியதை
நீ எப்படிப் புரிந்து கொண்டாய் என்று தெரியவில்லை
என்னைக் கண்டால்
இப்போதெல்லாம் நீ வாலையாட்டுவதில்லை

**— நன்றி உள்ளதுக்கு மட்டுமல்ல.**
**என் நண்பன் ஒருவனுக்கும் பொருந்தும்**



# கிழக்கிலங்கை முஸ்லிம்களும் மருகிவரும் குடி வழக்கும்

யூ.எல்.முஹமட் அஜ்வத்

ழக்கிலங்கை மக்களிடம் குடியமைப்பு முறை காணப்படுவது ஒரு சிறப்பம்சமாக உள்ளது. கிழக்கிலங்கை எனும் போது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களை உள்ளடக்கிய நீர் நிலப் பிரதேசத்தையே குறிக்கின்றது. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் எனப் பல்வேறு சமூகத்தினரும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இம்மக்களிடையே நெருங்கியதொரு வரலாற்று உறவு நீண்ட காலமாக இருந்து வருகிறது. குறிப்பாக தமிழ் மக்களின் உறவு புவியியல் ரீதியானதாக அமைந்த அதேவேளை ஒரு ஊரில் தமிழர்களும் மறு ஊரில் முஸ்லிம்களுமாக வாழ்ந்து வருகின்றனர். இதனூடாக இவர்களின் கல்வி, தொழில், கலாசார குடிமுறைத் தொடர்புகளிலும் ஒரு நெருக்கம் வளர்ந்து வருகின்றது.

இலங்கையில் காலத்திற்குக் காலம் மேற்கத்தயர் தங்களின் ஆட்சி அதிகாரங்களை உட்புகுத்தியுள்ளனர். ஒல்லாந்தர் கொழும்பைக் கைப்பற்றியதும் அங்கிருந்த முஸ்லிம்களை வெளியேற்றினர். இவர்களை கண்டியை ஆட்சி செய்த செனரத் மன்னன் கிழக்குக் கரையில் குடியேற்றினான். மட்டக்களப்பு வாவியின் தென்கரை யோரங்களில் இம்மன்னன் குடியேற்றங்களை ஏற்பாடு செய்வதற்கு ஏற்கனவே அங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் பற்றிய நல்லபிப்பிராயமும் காரணமாக அமைந்திருக்க முடியும். ஏற்கனவே இங்கு குடிபதியாக இருந்த

01. மலையாழத்து லெப்பைக் குடி / அலகு வெத்திலைக் குடி
02. கையூம் மலையார் குடி
03. கணக்கனார் கத்தறைக் குடி
04. கொஸ்கொட குடி (கொசுக் கொட்டையான் குடி)
05. வெள்ளரசன் குடி

முதலிய குடிகளோடு மேல்மாகாண முஸ்லிம்களும் சேர்ந்து வாழ்ந்தனர். இதே காலப்பகுதியில் மலை நாட்டில் அகதிகளாக

இருந்து வந்தவர்களும் இம்மக்களோடு சேர்ந்து வாழத் தொடங்கினர். அவர்களில் பட்டாணிய முஸ்லிம்கள்; இந்திய வர்த்தகர்கள், கூபா நாட்டைச் சேர்ந்த சில அரேபியர்கள் ஆகியோர் இருந்தனர். தென்னிந்தியா, கேரளா, அரேபியா முதலிய இடங்களிலிருந்து தஃவாப் பணியின் பொருட்டு வந்த சமயப் பெரியோர்களின் கட்டுமரங்கள் அரபிக் கடலைத் தாண்டி வங்காள விரிகுடாவிற்குள் புகுந்த போது அவை கிழக்கின் கரையோரங்களில் தட்டின இவர்கள் அங்கு குடியிருப்புகளை அமைத்து அங்கு வாழ்ந்த மக்களுடன் திருமணத் தொடர்புகளைச் செய்தனர். பின்னர் இவர்களிலிருந்து தாய்வழிச் சமூக அமைப்பான குடிமரபு தொடங்கியது.

தென்கிழக்காசியாவில் தாய் வழி உரிமை கோரும் முறையிருப்பதாக ஆய் வாளர்கள் கூறுகின்றனர். (தாய் வழிமுறை - இது கணவன், மனைவியின் வீட்டில், மனைவியின் குடும்பத்தினருடன் வாழ்க்கை நடத்துவதைக் குறிக்கும்) இதைக் குடி என்ற பதம் குறித்து நிற்கிறது. இக்குடி மரபு இன்று தென்கிழக்குப் பிராந்திய முஸ்லிம்களின் பண்பாட்டு உருவாக்கத்திற்கு மூலவேராகக் காணப்படுகின்றது.

மலைநாட்டிலிருந்து வந்த முஸ்லிம் பட்டாணியர்களிடம் போராயுதங்களான வாள், கேடயம், கவசம், கத்தி, விசேட றாக்கிளிகள் காணப்பட்டதுடன் அழகுத் தோற்றம், எடுப்பான மிடுக்கு நடை, பரிவு காட்டும் பண்பு போன்றவற்றையும் இவர்கள் கொண்டிருந்தனர். முஸ்லிம் பெண்களின் அடக்கம், ஒழுக்கம், நேர்மை, சமயப்பற்று என்பனவும் தமிழ் மக்களைக் கவர்ந்தன.

இவ்வாறு தமிழ் - முஸ்லிம் மக்களின் நெருக்கமான உறவு காணப்பட்ட வேளையில் மட்டக்களப்பிற்கும் குருக்கள் மடத்திற்குமிடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த முக்குவர் கூட்டத்தை கும். 'திமிலர்கள்' எனும் மீனவ சமூகம் அறுவடைக்காலங்களிலும், திருவிழாக் காலங்களிலும் ஊருக்குள் புகுந்து அடாவடித்தனமாக கொள்ளையடித்தும் அட்டூழியம் செய்தும் வந்தனர். இவர்களை எதிர்த்துப் போராட முக்குவருக்கு வல்லமை இருக்கவில்லை. இவ்விடயம் சம்பந்தமாக முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்து தங்களின் சொத்துக்களையும், மக்களையும் பாதுகாத்துத் தரும்படி பட்டாணிய முஸ்லிம் மக்களைக் கோரினர். முஸ்லிம்கள் இவற்றை வென்று தருவதாக வாக்குறுதியளித்ததற்காக முஸ்லிம்களை தம்பட்டையில் குடியமர்த்தினர்.

முக்குவர்கள் விவசாயத்தின் மூலம் விளைவு கண்டு, திருவிழா எடுக்கும் காலத்திலேதான் திமிலர் வருவர். இக்காலத்தில், கொள்ளையிட வந்த திமிலரை பட்டாணியர் விரட்டிச் சென்றனர். எதிர்ப்பைத் தாங்க முடியாத சில திமிலர் களப்பில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்ள, வேறு பலரோ ஓடி மறைந்தனர். ஓடிச் சென்ற வழியில் பட்டாணியர் அவர்களை பின் தொடர்ந்து சென்றனர். குறித்த இவ்வழி, சம்மாந்துறையிலிருந்து பட்டாணியர் வரும் வழியாகும். (அவர்கள் தற்போதுள்ள பனங்காட்டுக் கிராமத்தின் தென்பகுதியின் ஊடாக வந்து - இக்காலம், 03ம் கட்டை (இசங்கேணிச் சீமை) வழியாக ஊடறுத்து - வெள்ளப் பாதுகாப்பு வீதி (அக்கரைப்பற்று ஹிஜ்ரா வித்தியாலயப் பகுதி) கடந்து; முல்லைத்தீவு வழியாக முள்ளிக்குளத்து) மலையடிக்கு வந்தனர்) திமிலர் முள்ளிக் குளத்து மலையில் ஒளிந்திருந்தனர். பட்டாணியர் அங்கு அவர்களோடு எதிர்த்து நின்று, அத்தனைபேரையும் கொன்றனர். அந்தச் சம்பவம் நடந்த இடம் 'படை வெட்டின குடா" என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

இப்பிரதேசம் பின்னர், மையத்து அடக்கம் செய்கின்ற மைய வாடியாகவும் இருந்துள்ளது. தற்போது இப்பகுதி மக்கள் அடர்த்தியாக வாழுகின்ற இடமாக மாறியுள்ளது. திமிலரைக் கொண்றொழித்த பட்டாணியரும் அவர்களோடு சென்ற முக்குவ இளைஞர்களும் திருக்கோவில்; தம்பிலுவிலுக்கு மீண்டனர். முக்குவ இளைஞர் மூலம் செய்தியறிந்த ஊரவர்கள் மகிழ்ச்சி பொங்க ஆடிப்பாடி பட்டாணியரை வரவேற்றனர். நீங்காத் துயர் துடைத்த அவர்களை தங்களுடன் என்றும் இருக்குமாறும் நிலம், பொன், பெண் தருவதாகவும் வேண்டிக் கொண்டனர். தங்களோடு பெண்களைக்

கொண்டுவராத பட்டாணியர், நிரந்தரமாகவே அவர்களுக்கு காவலாகத் தங்குவதற்கு சித்தம் கொண்டதோடு, அவர்களோடு ஒன்றித்து விடுவதற்கும் பெண்களை வேண்டி நின்றனர். அதன்படி தங்களுடைய உயர்குடிப் பெண்களை அவர்களுக்குக் கொடுத்தனர். சிலர் 04 குடிப்பெண்கள் என்றும், இன்னும் சிலர் ஏழு குடிப் பெண்கள் என்றும், மேலும் சிலர் பதினெட்டுக்குடிப் பெண்கள் என்றும் குறிப்பிடுவர். இக்கருத்தின் படி பெரும்பான்மையானவர்கள் குறிப்பிடுபவற்றில்-

01. இராசாம்பிள்ளை குடி
02. பணியத்துக்குடி
03. வட்டுக்கத்தற குடி
04. மழுவரசன் குடி (மகிழரசன் குடி)
05. வெள்ளரசன் குடி
06. தச்சனார் குடி (ஓடாவி குடி)
07. மாமனா பிள்ளை குடி
08. சுல்தான் பிள்ளை குடி
09. காலிங்கா குடி
10. சுங்கரப்பத்தான் குடி
11. பொன் நாச்சி குடி
12. அம்மா நாச்சி குடி

போன்ற குடிகள் வழக்கிலிருக்கின்றன.

இவ்வாறே திமிலர்களின் பிரச்சினை மட்டக்களப்பு, படுவான் கரைப்பகுதிகளிலும் காணப்பட்டது. இப்பிராந்திய மக்களும் முஸ்லிம்களின் உதவியை நாடி வெற்றி பெற்றனர். இதன் விளைவாகவும் விவாக உறவு முஸ்லிம் - தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. இது போன்றே புத்தளப்பகுதியில் வசித்த முக்குவருக்கும் அங்கு கொடுங்கோல் செலுத்திய மன்னருக்கும் நடந்த பிரச்சினையில் முக்குவருக்கு முஸ்லிம்கள் உதவினர். இதன் விளைவாக ஆயிரக்கணக்கான முக்குவர்கள் மனமுவர்ந்து முஸ்லிகளாகினர். இவர்களில் பலர் தென் கிழக்கு பிராந்தியத்திற்கு வந்து குடியேறியதாக வரலாறு கூறுகின்றது. இவ்வாறெல்லாம் வந்த முஸ்லிம்கள் ஏலவே இங்கிருந்த சமூக, சமுதாய அமைப்பு முறைகளையும், குடிமரபு சம்பிரதாயங்களையும் ஏற்றுக் கொண்டனர். இதனாலேயே வாழைச்சேனை தொடக்கம் பொத்துவில் வரையுள்ள முஸ்லிம்களிடையே குடி மரபு நிலைத்து நின்றது. இதுவே தாய் வழிக் குடிமரபுக்குச் சான்றாகும். இதனாலேயே மட்டக்களப்பு முஸ்லிம் மக்களிடம் குடி வழிமுறை இன்று வரை மாறாமல் இருப்பதை நாம் காண்கிறோம். திரு. பொழிவிஸ் தம்பி முத்துவின் கூற்றுப்படி,

> "அவர்களில் ஒரு பகுதியினர் அக்கரைப்பற்றில் குடியேறியிருக்கின்றனர். கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சந்தேகமின்றி தங்கள் உடம்பில் அரபு இரத்தம் ஓடுவதை கொண்டவர்களே"

திரு. ராகவனின் கூற்றுப்படி

> "புத்தளத்தில் இஸ்லாம் மதத்திற்கு மாறிய முக்குவர்களில் ஒரு பகுதியினர் கல்முனைப் பகுதியில் குடியேறினர் என்பது தெளிவாகின்றது. அவர்களில் ஒரு பிரிவினரே பரவணிக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆபூவெக்கரும் ஏழு (07) குடியார்களுமாக இருக்க வேண்டும். அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசல் ஜமாஅத்தில் பணிய வீட்டுக் குடியினர் அதிகமாக இருப்பதும், பொன் நாச்சி குடியினர் இங்கு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் திருக்கோயில் தம்பட்டையிலிருந்த ஏழு குடிகளிலும் உள்ள தமிழ் மக்களை இஸ்லாமாக்கி மணம் செய்த முஸ்லிமகளின் குடிகளே அன்று அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலை அண்டித்து வாழ்ந்துள்ளனர்" என்கிறார்.

## குடிகளின் பெயர்கள்

01. தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுமிடையேயுள்ள பொதுவான குடிகள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | பொன் நாச்சி குடி | 2. | மூத்த நாச்சி குடி |
| 3. | இளைய நாச்சி குடி | 4. | வரிசை நாச்சி குடி |
| 5. | உலகிப் போடி குடி | 6. | படையாண்ட குடி |
| 7. | பெத்தாண்ட குடி | 8. | பணிக்கனா குடி |
| 9. | வடக்கனா குடி | 10. | கச்சியால் குடி |
| 11. | கோப்பிக் குடி | 12. | செட்டிக் குடி |
| 13. | கலிங்கனா குடி | 14. | உச வீட்டுக் குடி |
| 15. | இராசாம் பிள்ள குடி | 16. | சின்னக் கதிரன் குடி |

02. முஸ்லிம்களிடையே வழக்கிலிருக்கும் தமிழ் மொழிப் பெயர் கொண்ட குடிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளரசன் குடி | 2. | ஆலங்குடி |
| 3. | ஓடாவி குடி | 4. | மனனப் போடி குடி |
| 5. | சங்கதி குடி | 6. | சாயக்காரன் குடி |
| 7. | மாமனாப் பிள்ள குடி | 8. | சங்கரப்பத்தான் குடி |
| 9. | சேனைக் குடி | 10. | களனி குடி |
| 11. | வட்டுக்கத்தற குடி | 12. | ஒஸ்கட்டன் குடி |
| 13. | வெற்றி சிங்க ஆராச்சி குடி | 14. | பணியீட்டுக் குடி |
| 15. | உம்மானோட்டி குடி | | |

03. முஸ்லிம்களிடையே இருக்கும் முஸ்லிம் பெயர் கொண்ட குடிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | லெப்பைக் குடி | 2. | ஆலிம் குடி |
| 3. | மோதினார் குடி | 4. | ஜாவாக் குடி |
| 5. | ஆதம் பட்டாணி குடி | 6. | நெய்னா ஓடாவி குடி |
| 7. | சுல்தான் பிள்ளை குடி | 8. | மாப்பிள்ளை மரைக்காயர் குடி |
| 9. | முஹம்மது ஹாஜி குடி | 10. | உதுமான் போடி குடி |
| 11. | எலவக் குடி | | |

மேலுள்ள குடிப்பிரிவுகள் பெயர் நோக்கிலேயே வகுக்கப்பட்டன. வேறு எந்தவித தனித்துவத் தன்மையும் கருதியல்ல. மேலும் ஒரு பெரிய சமூகத்தின் மக்கள் தொகையை இலகுவாக இனம் காண்பதற்கு குடி, கோத்திரம், வம்சம் என்ற உட்பிரிவுகள் அவசியமானதாகும். இவ்வாறு குடி கொண்டு இனங்காண்பது இஸ்லாமிய மரபேயாகும். இக்குடி முறையின் நோக்கம் இனங்காண்பது மாத்திரமே மாறாக சாதிப்பிரிவோ அல்லது தொழில் பிரிவோ முஸ்லிம்களிடையே ஒரு போதும் இடம் பெறமாட்டாது.

கிழக்கிலங்கையில் காணப்படும் ஊர்களில் குடியமைப்பு முறை எவ்வாறு உள்ளது என்பதை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் நோக்குவோமாயின் முதலில் சம்மாந்துறையை எடுத்துக் கொண்டால், இது தென்கிழக்கிலேயே முஸ்லிம் குடும்பங்கள் அதிகமாகப் பரம்பிக் காணப்படுகின்ற ஊராகும். இங்கு வழக்கிலுள்ள

அழகு வெத்திலைக்குடி என்று அழைக்கபடும் மலையாளத்து லெப்பைக் குடியும், கைமலையார் குடி என அழைக்கப்படும் கையூம் மலையார் குடியும் இங்கு வாழ்ந்து வந்த சமயப் பெரியார்களின் பெயர்களைக் குறிக்கின்றன. மலையாளத்து லெப்பைக் குடியின் முதல்வர் என்று கருதப்படும் 'கலிங்கத்து அப்பா" என்பவர் 14ம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்த இறை நேசராவார். அவர் வரும் பொழுது அவரின் கூட வந்த சிஷ்யன் கையூம் என்பவராவார். இவ்விருவரும் மலையாளத்தை சேர்ந்தவராவார்கள். இவ்விருவரின் சந்ததியினரே மேற்படி குடிகளின் பெயரால் அழைக்கப்படுவதாக கூறப்படுகின்றது. முஸ்லிம்கள் கூட்டாக வாழும் இப்பிரதேசத்தில் சுமார் 31க்கு மேற்பட்ட குடிகள் காணப்படுகின்றன. இங்குள்ள குடிகளில் எட்டுக் குடிகள் தமிழ் சமூகத்தில் இருந்து வந்து முஸ்லிம்களிடத்தில் கலந்தது. 'பட்டிசிங்க பவளாராச்சி குடி' சிங்களவரிடத்தில் இருந்து வந்து கலந்ததாகும்.

சம்மாந்துறையில் தற்போது காணப்படும் குடிகளாவன .

01. கணக்கன் கத்தற குடி
02. மாமனாப் போடி குடி
02. தேன் முதலி குடி
04. பெரிய வெள்ளரசன் குடி
05. சங்கதி குடி
06. இராசாம் பிள்ள குடி
07. சுல்தான் குடி
08. கோசப்பா குடி
09. சின்ன வெள்ளரசன் குடி
10. சேனைக்குடி
11. பெரிய படையான் குடி
12. ஆதம் பட்டாணி குடி
13. நெய்னா ஒடாவி குடி
14. ஓடாவி குடி
15. வடக்கனா குடி
16. மாந்தரா குடி
17. செட்டிப் புள்ள குடி
18. உதுமான் பிள்ள குடி
19. உலவிப் போடி குடி
20. பட்டி சிங்க பவளாராச்சி குடி
21. மாப்பிள்ளை மரைக்கார் குடி
21. கச்சன் ஒடாவி குடி
23. பொன் நாச்சி குடி
24. சேர் முஹம்மது குடி
25. பெரிய படையாண்ட குடி
26. மடத்தடி குடி
27. மூத்தநாச்சியார் குடி
28. பணிக்கனா குடி
29. கைமலையார் குடி
30. மலையாளத்து லெப்பைக் குடி
31. வைத்திய நாச்சியார் குடி

தென் கிழக்குக் கரையில் காணப்படும் மற்றுமொரு ஊரான அக்கரைப்பற்றை எடுத்துக் கொண்டால் இங்கு பரம்பரையாக வாழ்ந்து வரும் மக்கள் பின்வரும் குடிகளைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

01.. மூத்தநாச்சி குடி
02. அம்மா நாச்சி குடி
03. பொன் நாச்சி குடி
04. பணி வீட்டுக் குடி
05. வடக்கனார் குடி
06. இராசாம் பிள்ள குடி
07. வட்டு நாச்சி குடி
08. வெள்ளரசன் குடி
09. சுல்தான் பிள்ள குடி
10. நெய்னா ஓடாவி குடி
11. யாவு குடி
12. மாப்பிள்ள மரைக்கார் குடி
13. மாமனாப் பிள்ள குடி
14. செட்டியார் குடி
15. தச்சனார் குடி
16. நமாந்தறாக் குடி
17. சங்கரப்பத்தான் குடி
18. காலிங்கா குடி

19. இரனசிங்கு முதலி குடி
20. எலவக் குடி
21. மரைக்கார் நெய்ந்த குடி
22. வட்டுக்கத்தற குடி
23. பணிக்கனா குடி
24. மழுவரசன் குடி
25. குருக்கள் குடி
26. கட்டடி குடி

ஏற்கனவே இங்கிருந்த குடியினர்களோடு வேறு இடங்களிலிருந்து சிலர் குடியேறியதால் ஏற்பட்ட சன அடர்த்தியின் காரணத்தால் மேலும் சில குடிகள் தோன்றின. அவையாவன -

01. படையாண்ட குடி
02. மூத்த நெய்ந்த குடி
03. முதலி குடி
04. தவுட்டு வத்தற குடி
05. தொட்டில் பிள்ள குடி
06. உலகிப் போடி குடி
07. கொசுக்கட்டை குடி
08. உத்துப் பிள்ள குடி
09. ஆதம்பட்டாணி குடி
10. சேகு முல்லைக்கார குடி
11. வம்மிக்கத்தற குடி
12. இனிக்கறுத்தன் குடி
13. காம்பிறாச்சி குடி
14. சாயக்காரன் குடி
15. மரைக்கான்ட குடி
16. ஆலிம் குடி
17. காமராசா் குடி
18. அவரக்காலிமு குடி

மேற்கூறப்பட்ட குடிகளின் பெயர்கள் தோற்றம் பெற்றுள்ள விதமானது குடிகள் தலைவர்களின் பெயரை கொண்டும், வேறு சில குடிகள் தலைவர்கள் - முக்கியஸ்தர்களின் தொழிலைக் கருத்திற் கொண்டுமாகும். உதாரணமாக சுல்தான் பிள்ளை குடி, பணிக்கனார் குடி, ஒடாவி குடி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இரண்டொரு குடிகள் பெயரையும் அத்தோடு தொழிலையும் குறிப்பின. உதாரணமான நெய்னா ஒடாவி குடியைக் குறிப்பிடலாம். இலங்கைக்கு தஃவாப் பணியின் பொருட்டு வடக்கிலிருந்து வந்தவர்கள் இங்கு குடியேறினர். அவர்களை வடக்கனார் குடி என்று அழைக்கும் மரபு காணப்படுகின்றது.

முஸ்லிம்களுக்கு திராவிடப் பெண்களை மணம் முடித்து கொடுக்கப்பட்டதென்கின்ற வரலாற்றின் படி அந்த அன்பளிப்பின் முதலாவது பெண் மூத்தனாச்சி குடியைச் சேர்ந்தவராதலால், இவருக்கும் முஸ்லிம்களுக்கும் பிறந்த குழந்தைகளை மூத்தநாச்சி குடிப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், தொடர்ந்து இளையநாச்சி குடி, பெண்நாச்சி குடி, வரிசை நாச்சி குடி, முகாந்திர நாச்சி குடி, மாலை கட்டுக் குடி என்பனவாறாக அத்திராவிடப் பெண்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பிறந்தவர்கள் அந்தந்த குடிப்பரம்பரையை சார்ந்தவர்கள் என்றும் பெயரிட்டு அழைக்கின்ற பாங்கும் தோன்றியிருக்கிறது.

குடிகளின் பிரிவுகளாக 'கத்தற', 'தத்தி', 'வகுத்துவாய்' என்பன அடங்கும். கத்தற என்பது தகப்பன் வழியில் இப்பெயர் வரும் ஒரு பெற்றோருக்கு பிறந்த பிள்ளைகள். பேரர், கொள்ளுப் பேரர்களை இது அடக்கும். இவர்களுடை தகப்பன் பெயர் உதுமாலெப்பை ஹாஜி என்றிருந்தால் உதுமாலெப்பை ஹாஜி கத்தறையான் என அவரின் பிள்ளைகள் அழைக்கப்படுவர்.

'தத்தி' என்பது தாய் வழியில் இப்பெயர் சம்பந்தப்பட்டது. தாயின் பெயர் ஹலீமா பீவி என்றிருந்தால் ஹலீமாட தத்தியார் என இவரின் பிள்ளைகளை அழைப்பர். 'வகுத்துவாய்' - இச் சொல்லானது தாய் தந்தை இருவருடைய அடையாளத்தையும் தெரிவிக்கும். உதாரணமாக உதுமாலெப்பை ஹாஜியார்ர பெண்டிட வகுத்துவாய் என இவர்களின் குடும்பத்தை அழைப்பர்.

'தத்துக் குடி' - இது கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஒரு ஆணும் காலியைச் சேர்ந்த ஒரு பெண்ணும் மணம் முடித்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையின் குடி, தாயின் குடியாகவே இருக்கும் என்பதாகும். காரணம் தாயின் குடியே பிள்ளையின் குடி என்பது பாரம்பரிய மரபாகும். குழந்தைக் குடியொன்றை தத்தெடுத்ததாகவே இது கொள்ளப்படுகிறது. மேலும் குடிகளின் பாரம்பரியம் திராவிடரைப் பின்பற்றி தாய் வழித் தொடரிலும், மத்திய கிழக்கு வாசிகளான அரபு - முஸ்லிம் பெண்களுக்கு ஆண் வழித் தொடரிலும் குடி மரபு வழங்கப்படுகிறது.

## குடியமைப்பின் மரைக்காயர் முறை

ஒரு குடியின் மதிப்பும் செல்வாக்கும் சனத்தொகை, பழமைச் செல்வாக்கு ஆகியவற்றில் தங்கியுள்ளது. பெரிய குடியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் என்று பல பாகங்கள் உண்டு. இப்பாகப் பிரிவு முறை ஏற்கனவே குறிப்பிட்டது போல வகுத்துவாய், கத்தற, தத்தி, என்ற உட்பிரிவுகளை நோக்கி பிரிக்கப்படுகின்றன. குடிகள் ஒவ்வொன்றுக்கும். சில தனித்துவமான பண்புகள் உண்டு என்று மக்கள் நம்புகின்றனர்.

இதன் படி மரைக்காயர் மார்கள் ஒவ்வொரு குடிக்கும் பிரத்தியேகமாகத் தனித்தனியாகக் காணப்படுவர். ஒவ்வொரு குடியிலுமுள்ள வயது, கல்வியறிவு, செல்வாக்கு, நேர்மை, மார்க்க அறிவு ஆகியவற்றில் கூடிய அறிவுள்ளவரை மக்கள் மரைக்காயராகத் தெரிவர். இம்மரக்காயருக்கு. மக்கள் தொகையைப் பொறுத்து உப மரைக்காயரும் இருப்பர். ஒரு குடியமைப்பு ஒழுங்கான சங்க அமைப்புப் போல் நடைபெறும். இவ்விதம் தெரிவு செய்யப்படும் மரைக்காயர்களே அக்கிராமத்துப் பள்ளிவாசலின் பாரம்பரிய தர்மகத்தாக்களாவர். இவர்கள் குடிக்குள் இடம்பெறும் நீதி தொடர்பான விசாரணைகளை செய்வதோடு, அதீத ஆளுமையும்; செல்வாகும் கொண்டவர்களாகக் காணப்படுவர். சுருங்கச் சொன்னால் ஒரு கிராமத்தின் வாழ்வியலும் பண்பாட்டையும் நெறிப்படுத்தும் அதிகார சபையே மரைக்காயர்மார் சபையாகும்.

குடிகளின் கட்டமைப்பை நோக்கின் கிழக்கிலங்கை மக்களின் குடிகளின் உள்ள இறுக்கமான செயற்பாடுகளைக் கவனிக்கும் போது அவையொரு சீராகக் காணப்படுகின்றன.

ஒரு குடியிலுள்ள அனைத்தும் பேரும் ஒரே குடும்பமாக இணைக்கப்பட்டிருக்கின்றனர். மரைக்காயர்மார் என்று அழைக்கப்படும் குடும்பத் தலைவர்கள் தங்கள் குடும்பங்களில் அல்லது குடியில் உள்ளவர்களின் இன்ப துன்பங்களில் மிகக் கரிசனை காட்டுவர். சில விசேட காரியங்களுக்கு இவரின் ஆலோசனை பெறப்படும். அவரின் நீதி; நேர்மை; சமயச் செயற்பாடுகள், மனிதாபிமானம், கூடின உழைப்புப் போன்றவற்றால் மக்கள் ஈர்க்கப்பட்டு அவருக்கு மதிப்பளிப்பர். ஒரு குடி ஒரே குடும்பத்தைக் கொண்டிருப்பதால் ஒரு குடியின் பணிகள் கூட்டு முயற்சியாக இருக்கும். உதாரணமாக திருமண வேலைகளைக் குறிப்பிடலாம். திருமண வீட்டுக்கு அடிக்கடி வரும் குடியினர் வேலைகளில் மிகக் காத்திரமாக ஈடுபடுவார்கள். என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அவற்றை மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் அவர்கள் செய்து கொடுப்பது பரம்பரை வழக்கமாகும். ஒரு குடியில் காணப்படும் நெருக்கமும் உறவும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப் போன்றதொரு மனப்பாங்கை ஏற்படுத்துகிறது. அதனால் ஒரே குடியில் பிறந்த ஒரு ஆணும் பெண்ணும் விவாகம் முடிப்பதை இவர்கள் விலக்கி வைத்துள்ளனர். ஒன்றாகப் பிறந்த ஒரு ஆணும், பெண்ணும் திருமணம் செய்வது போன்ற மாயையை இது ஏற்படுத்துவதாக இவர்கள் நம்புகின்றனர். மேலும் ஒரு குடியினரை மற்றக் குடியினர் தாழ்த்திப் பேசும் வழக்கமும் இங்கு காணப்படுகின்றது. தமது குடியைச் சொல்லி எங்கள் குடியில் இன்ன இன்னாரெல்லாம் உள்ளனர் என்று பெருமைப்படுவர்.

குடிகளின் செல்வாக்கில் தங்களது உடமைகளைப் பாதுகாக்கும் பொருட்டும் அடையாளங்களை இடும் பொருட்டும் தங்களின் குடிக்குரிய குறிகளை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தும். வழக்கும் பேணப்படுகிறது. இதனை

'குல விருதுகள்' எனக் குறிப்பிடப்படுவதும். வழக்கம். இது குடும்பச் சின்னமாகவும் வம்சாவழி அடையாளமாகவும் குடி உருத்துக் குறியாகவும் கருதப்படுகின்றது.

ஒவ்வொரு குடிக்கும் தனிப்பட்ட விருதுகள் உள்ளன. அவற்றை தமக்குரிய பசு, எருமை மாடுகளின் இடது புற கால் பகுதியில் பதியுமாறு சந்துப்பட்டையிலும் விலாப்பக்கங்களிலும் கண்ணங்களிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோளால் சுட்டுக் கொள்வர். மாடுகளை இனங்காணவே இந்த ஏற்பாடு நடை முறையில் இருக்கிறது.

தற்போது இந்தக் குடிகளின் செல்வாக்கு வெகுவாகக் குறைந்துள்ளது. பள்ளிவாசல் நிர்வாகம், திருமணம் என்பவற்றில் மாத்திரமே இச்செல்வாக்கு இன்னும் தங்கியிருக்கின்றது. எடுத்துக்காட்டாக அக்கரைப்பற்று பட்டினப்பள்ளி வாசலில் குடிமரபு அடிப்படையில் மரைக்காயர்மார் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இங்கு மொத்தம் 23 பேர் 03 வருடங்களுக்கு கடமை புரிவர். இது போல பொத்துவில் ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகமானது குடி மரைக்காயர் சபை மூலமாகவே தெரிவு செய்யப்பட்டு வந்தது. தற்போது தெரிவு செய்யப்பட்ட நம்பிக்கையாளர் சபை மூலம் நிருவாகம் நடைபெற்று வருகின்றது. இது குடிவழி முறை மரபு முறை அருகி வருவதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். காத்தான்குடியில் குடி மரபு முறை இருந்தும் அது ஆளுமை பெற்றதாக இல்லை. மேலும் மட்டக்களப்புக்கு வடக்கேயுள்ள கிராமங்களில் இம்முறை அருகியே வருகின்றது. வடக்கில் திருகோணமலை பொலநறுவை மாவட்டங்களில் இக்குடி மரபு இல்லை என்றே கூறலாம்.

## குடிகளும் குறிகளும்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மரைக்காண்ட குடி | உத்துப்பிள்ளை குடி | வெள்ளரசன் குடி | கொசுக்கட்ட குடி | படையாண்ட குடி | பொன்னாச்சி குடி |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| காமராசன் குடி | இலவக் குடி | மாந்தறா குடி | ஓடாவி குடி | ராசாம்பிள்ள குடி | பணிக்கனா குடி |

**உசாத்துணை :**


01. அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள் - எம். எச். எம். ஜெமீல் (பதிப்பாசிரியர்)
முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் அமைச்சு 1997

02. கிழக்கிலங்கை கிராமியம்- றமீஸ் அப்துல்லாஹ்
மல்லிகைப் பந்தல் வெளியீடு- 2001

03. மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை- மருதூர் ஏ மஜீட்
மருதூர் வெளியீட்டுப் பணிமை- 1995

04. வழி திறப்பு- நகரப்பாதை திறப்பு சிறப்பு மலர்
அக்கரைப்பற்று- 2003

# தென்கிழக்குப் பிரதேச முஸ்லிம் மக்களின் பாரம்பரிய விவசாயச் செய்முறைகளும், வாழ்வியலும்

எம்.எம்.ஏ. முஹியித்தீன்



தென்கிழக்கிலங்கையின் கரைவாகுப்பற்று, சம்மாந்துறைப்பற்று, நிந்தவூர்ப்பற்று, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்கள், முஸ்லிம் மக்கள் அடர்த்தியாகவும், பெரும்பான்மையாகவும் வாழும் இடங்களாகும். இம்மக்கள் நீண்ட நெடுங்காலத்திற்கு முற்பட்ட பல்வேறு காலப்பிரிவுகளில் இப்பிரதேசங்களில் குடியமர்ந்தவர்களாக இருப்பினும் சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் ஜீவனோபாய முயற்சிகள் சம்பந்தப்பட்ட வகையில் பெரும்பாலும் ஒத்த தன்மையுடையோராகக் காணப்படுவது வியப்புக்குரிய விடயமல்ல.

இலங்கை முஸ்லிம்களின் பிரதான தொழில் வர்த்தகமாக இருப்பினும், தென்கிழக்கு முஸ்லிம்கள், உலகின் புராதன தொழில்களாகிய விவசாயத்திலும், மீன்பிடித்தலிலும் முற்றுமுழுதுமாக ஈடுபட்டமை கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். நீர் வளமும், நிலவளமும் நிரம்பப் பெற்ற பிரதேசங்களில் இம்மக்கள் தங்கள் குடியிருப்புக்களை அமைத்தமையால், இத்தொழில் முயற்சிகளில் அவர்கள் இடையறாது ஈடுபட முடிந்தது: இயற்கையோடு இயைந்த அமைதியான வாழ்வை அனுபவிக்க முடிந்தது. நீரும், நிலமும், வயலும், வனமும், வானும், கடலும் இவற்றில் சஞ்சரிக்கும் பல்வகைப்பட்ட ஜீவராசிகளும் இம்மக்களது வாழ்வில் பிரிக்க முடியாத அங்கங்களாக அமைய முடிந்தது.

தென்கிழக்கு மக்களின் அன்றைய விவசாய நடவடிக்கைகள், இன்றுள்ளதைப் போன்று வர்த்தக நோக்கில் அமையாமல், வாழ்வியல் நோக்கில் அமைந்திருந்தன. எளிமையும், இரசனையும், எழிலார்ந்த பண்பாட்டுக் கூறுகளும் நிரம்பப் பெற்றதான, ஒரு பவித்திரமிக்க உபாசனையாகவே அத்தொழிலை அம்மக்கள் கருதினர். வழிபாட்டுத் தலமொன்றினுள் நுழையும் பரிசுத்த தன்மையுடனேயே அவர்கள் வயல் வெளிகளினுள் காலடி வைத்தனர். தங்கள் விவசாய செயற்பாடுகளை, சடங்கு சம்பிரதாயங்கள் போலவே அவர்கள் நிறைவேற்றி வந்துள்ளார்கள். கரைவாகுவட்டை என்றாலென்ன?, கருங்கொடித்தீவு வட்டை என்றாலென்ன? இம்மக்களுடைய விவசாயச் செய்முறைகள் ஒத்த தன்மை உடையனவாகவே காணப்பட்டன. விதைப்பும்,

வேலி அடைத்தலும், காவற் பரணும், குருவி விரட்டலும், வேளாண்மை வெட்டுதலும், சூடடித்தலும், பொலி தூற்றுதலும், பட்டறை கட்டுதலும், அப்பக்குடிலும், அவலிடித்தலும் என்று இவையாவும் எல்லாப் பிரதேசங்களிலும் ஏறக்குறைய ஒன்று போலவே நிகழ்ந்து வந்துள்ளன.

எனவே இச்செயன்முறைகள் யாவற்றையும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் பகைப்புலத்தில் நோக்குவது மிகவும் சௌகரியமாகவும், சுவையானதாகவும் இருக்கும் எனக்கருதுவதால், இன்று அக்கரைப்பற்று என்று அழைக்கப்படும் 'கருங்கொடித்தீவு' பிரதேச மக்களின் விவசாய முறைகளைப் பற்றி அறிவதன் மூலம் தென்கிழக்கு முஸ்லிம்களின் விவசாய முறைகளையும் அதனோடு இயைந்த வாழ்வியலையும் தெரிந்து கொள்ளலாம்.

'கல்லோயா' என்றழைக்கப்படும் பட்டிப்பளை ஆற்றின் கிளையொன்றை மேற்கு எல்லையாகக் கொண்ட ஒரு குடியிருப்பை, இற்றைக்குச் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் எம்முன்னோர் அமைத்தனர். கருந்தெகிழங்கொடி வெட்டி அமைக்கப்பட்ட இக்கிராமம், 'கருங்கொடித்தீவு' என்ற அழகிய பெயரால் அழைக்கப்பட்டது. ஆற்றில் இரு மருங்கிலும் வண்டல் மண்டிய வளப்பமான நிலம் பரந்து காணப்பட்டதால், ஆற்று நீரைப் பயன்படுத்தி அந்நிலத்தில் நெல் பயிரிட்டனர். பல நூற்றுக்கணக்கான ஏக்கராக அமைந்த அக்காணிகள், ஊருக்கு மிகமிக அணித்தாக இருந்தது மாத்திரமல்லாமல், மேட்டுவெளி, பள்ளவெளி, புரன்வெளி, சாதாளவெளி, சம்புக்களப்பு, உகாமுனை, துவரங்குடா முனை, கடுக்காமுனை, குடாக்கரை, வள்ளக்குண்டு, அவரிப்பிட்டி, குளக்கட்டுப்பள்ளம், சாட்டுவான் மூலை, ஏத்தாலை, முனை ஏத்தாலை, மண்தண்டை, சங்கடிவத்து போன்ற அழகான பெயர்களால் அழைக்கப்படலாயிற்று.

இக்காணிகள் யாவும் வருடத்தில் ஒரு போகம் மட்டும் – அதாவது சிறு போகம் மட்டும் செய்கை பண்ணப்பட்டன. மாரி காலத்தில் ஆறு, கரைபுரண்டோடுமாகையால், பெரும்போகம் செய்கை பண்ண முடியாது. மாசி மாதம் முடிவுடன் மாரிகாலம் முடிவடைவதால், பங்குனி அல்லது சித்திரை மாதத்தில் விதைப்பு வேலைகள் தொடங்கும்.

விதைப்பு வேலைகளுக்கு முதற்படியாக, நிலத்தைப் பண்படுத்தும் வேலையைத் தொடங்குவதற்கு சமயப்பெரியார்களிடம் சென்று நல்ல நாளும், சுபநேரமும் கேட்டறிந்து, குறிப்பிட்ட வேளையில் மண்வெட்டி கொண்டு நிலத்தைக் கொத்துவார்கள். இதனை 'ஏ(ர்)நான் கொத்துதல்' என்றழைப்பர். அதனைத் தொடர்ந்து எருமைகளால் மிதிப்பு வேலைகள் நடைபெறும். எருமைகள் பிணையல்களாகக் கொண்டு செல்லப்படும். நான்கு சோடி எருமைகளை ஒரு 'தொடுவை' என்று அழைப்பர். அதிகாலையிலிருந்து பொழுது உச்சிக்கு வரும்வரை மட்டுமே மிதிப்பு வேலை நடைபெறும். எருமைகளுக்கு கூலியாக நெல்லே கொடுக்கப்படும். இவ்விதம், முதற்தடவையாக எருமைகளாக் கொண்டு நிலத்தை மிதிப்பது 'பெருமிதி' எனப்படும். பெருமிதி மிதிக்கும் போது வயல் ஈரப்பாடாகவே இருக்க வேண்டும்.

"நடவாக் கிடாமாடும்
நானுமிந்தப் பாடுபட்டால்
காயாப் புழுங்கலும் என்
கண்மணியும் என்ன பாடோ?"

என்பது மிதிப்பது பற்றிய நாட்டுப்பாடல்.

பெருமிதி முடிந்ததும் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சப்படும். பாய்ச்சப்பட்ட தண்ணீர் வற்றிக் கொண்டு வரும் போது இரண்டாவது தடவை மிதிப்பு நடைபெறும். இதனை 'இரட்டித்தல்' என்பர். இரட்டிப்பின் போது, பூமி நன்கு பண்பட்டிருக்கும். புற்கள் யாவும் இல்லாதொழிந்து விடும். அதனைத் தொடர்ந்து மீண்டும் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டு, வரம்புகள் கட்டப்படும். மிகச் செவ்வையாகவும், நேர்த்தியாகவும் வரம்புகள் கட்டப்படவேண்டியது அவசியமாகும்.

வரம்பு கட்டும் வேளையிலேயே விதைப்பதற்கான முளை தயாரிப்பு வேலைகளும் நடைபெறும். அந்தக்காலத்தில் நொறுங்கன், சீனட்டி, வெள்ளைப் பெருநெல், இளங்கலையன், பச்சைப்பெருமாள், பறவைகலையன், முருங்கைக்காயன், குவிநெல் முதலான ஏகோத்திர நெல்வகைகளே விதைக்கப்பட்டன. இவற்றில் சில மூன்று மாதங்களிலும், சில மூன்றறை மாதங்களிலும், சில நான்கு மாதங்களிலும் பூரண விளைவைத்தரும். இந்நெல் வர்க்கங்கள் இன்றுள்ள நெல்வர்க்கங்களைப் போல் அபரிமிதமான விளைச்சலைத்தரக்கூடியவையல்ல. ஆனால் உண்பதற்கு மிகமிகச் சுவையானவை. நொறுங்கன், சீனட்டி போன்ற நெல்லரிசிச் சோற்றின் சுவையே அலாதிதான்.

> **"சீனட்டி நெல்லும் செல்ல இறால் ஆணமும்**
> **பொத்துவில் ஊரும் இப்ப பொருந்தினதோ வன்னிமைக்கு"**

என்ற நாட்டார் பாடலில் சீனட்டி நெல் அரிசிச் சோறு சிலாகித்துக் கூறப்படுவதைக் காணலாம்.

விதைப்புக்குரிய முளையைத் தயாரிப்பதற்காக, ஏக்கருக்கு 10 மரைக்கால் (2½ புசல்கள்) நெல் வீதம், 12 - 15 மணிநேரம் வரை நீரினுள் போடப்படும். இது 'நெல்லுப் போடுதல்' எனப்படும். சிலர் தமது வீடுகளில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள தொட்டில்களில் போடுவார்கள். தொட்டி வசதி இல்லாதவர்கள் சாக்கினுள் நெல்லைப் போட்டு, சற்றுத் தொய்வாகக் கட்டி ஆற்றிலோ அல்லது குளத்திலோ அமிழ்த்தி விடுவார்கள். தேவையான அளவு இளகிய பின் வீட்டின் ஓர் அறையில் அல்லது திண்ணையில், சுமார் 5 அல்லது 6 அங்குலக் கணத்தில் நெல் பரப்பட்டு அதன் மேல் வாழை இலை போடப்பட்டு சாக்கினால் மூடப்படும். நெல், தண்ணீரில் போடப்பட்டதிலிருந்து நாலாவது நாள், போதுமான அளவு முளை அரும்பி விதைப்புக்குத் தயாராகிவிடும். எனவே நாலாவது நாளில் முளை விதைக்கப்பட்டுவிடும். விதைப்பு எப்போது நடைபெறும் என்பதைப் பொறுத்துத்தான் நெல் தண்ணீரில் போடப்படும்.

எல்லா நெல்லும் முளைப்பதில்லை. பெரும்பாலும் 75 சதவீத முளை திறனே இருக்கும். எனவே நாளை விதைப்பதாக இருந்தால், இன்று நல்லிரவில் முளையைச் சூடு ஆறும்படி கலைத்துவிட்டு, முளையை மட்டும் பரவிப் பரவி எடுப்பார்கள். முளையாத நெல் 'வந்தை நெல்' எனப்படும். முளை பரபுபவர்களுக்கு வந்தை நெல்லே கூலியாகக் கொடுக்கப்படும். வந்தை நெல் அவல் இடிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

விதைப்பாடு நடைபெறும் தினத்தன்று வயலில் இருக்கும் நீர் முழுவதும் வெளியேற்றப்பட வேண்டும். எல்லா

வயல்களுக்கும் ஆற்றிலிருந்துதான் நீர் பாய வேண்டும். அதே போல் வயலில் உள்ள நீர் ஆற்றில்தான் வடியவும் வேண்டும். ஆற்று நீர் மட்டத்தை விட வயலின் நில மட்டம் தாழ்வாக இருப்பதால், பாய்ச்சல் இலேசாக இருக்கும். ஆனால் வடிச்சல் ஓடமாட்டாது. அதனால், ஏற்றுக் கட்டி, இறைத்தே நீரை வடிய வைக்க வேண்டும். எனவே விதைப்பாட்டு வயலில் அதிகாலையிலிருந்து முக்காலி நட்டு, ஏற்றைக்கட்டி இறைப்பு வேலை ஆரம்பமாகியிருக்கும். பல சோடி ஏற்றுக்கள் கட்டப்பட்டு இறைப்பு வேலை நடைபெறுகையில் அவ்வேளையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், களைப்புத் தோன்றாவண்ணம் நாட்டுப் பாடல்களை இசைப்பார்கள்.

"ஆசைக்கிளியே - என்ர
ஆசியத்து உம்மாவே
ஓசைக் குரலாலே - உன்ர
உம்மாவைக் கூப்பிடுகா"

என்பது அப்படியான பாடல்களுள் ஒன்று.

வயல்கள், நீர் பாய்ச்சுவதற்குத் தோதாகவும், நில மட்டத்திற்கு அமைவாகவும் 'வரவைகள்' எனப்படும் துண்டுகளாக வரம்புகள் வைத்து தெரிக்கப்படும். ஏறக்குறைய ஒரு றூட் பரப்பளவுள்ள துண்டுகள் வரவைகள் எனப்படும். மிகவும் விசாலமான பகுதிகள் 'போட்டா' எனப்படும். சில போட்டாக்கள் ஒரு ஏக்கர் பரப்புக்குக் கூடியதாகக் கூட இருக்கும். மிகச் சிறிய துண்டுகள் 'கனட்டி' எனப்படும். அகலத்திற்குக் குறைந்த மிக நீளமான வரவைகள் 'நெடுங்கண்ணி வரவைகள்' எனப்படும். அறுவடையின் போது சூடு வைக்கப்படும் வரவை, 'சூட்டடி வரவை' அல்லது 'களவெட்டி வரவை' எனப்படும். 'புரை' அல்லது 'வாடி' என்னும் தங்குமிடங்கள் அமைந்துள்ள வரவை 'புரையடி வரவை' அல்லது 'வாடியடி வரவை' என்றழைக்கப்படும். இதே போன்று 'பாய்ச்சலடி வரவை', 'வடிச்சல் வரவை', 'மூலை வரவை' என்ற பெயர்களாலும் வரவைகள் அழைக்கப்படும்.

நீரைத் தேக்கிப் பிடிப்பதற்காகக் கட்டப்படும் வரம்புகள் மிக முக்கியமானவை. வயலைக் சூழ, எல்லையாக அமைந்திருக்கும் வரம்பு 'அடையா வளைஞ்சான்' வரம்பு' என்றும், வயல்களினூடாக போக்குவரத்துக்காக அமைந்திருக்கும் வரம்பு, 'நடை வரம்பு' என்றும், போட்டா வரவையை அண்மித்த வரம்பு 'போட்டா வரம்பு' என்றும் பெயரிட்டு அழைக்கப்படும்.

**"போட்டா வரம்பால் புறா நடந்து போவதுபோல்**
**நாட்டாருக்கெல்லாம் நடை வரம்போ என் சதிரம்"**

(சதிரம் - சருமம்) என்பது நாட்டார் பாடல்

வயல் பரப்பினுள் தேக்கி வைக்கப்பட்டிருந்த நீர், இறைப்பு மூலம் வெளியேற்றப்பட்டதும் ஒவ்வொரு வரவையினுள்ளும் ஏராளமான மீன்கள் தென்படும். இம்மீன்களை இறைப்புக்கு வந்த தொழிலாளர்களும்,

விதைப்புக்கு வந்த தொழிலாளர்களும் பிடித்து எடுப்பர். 'விதைப்பாட்டில் மீன் பிடிப்பது' ஒரு முக்கியமான சம்பவமாகவே இருக்கும்.

விதைகள் சாக்கினுள் கட்டப்பட்டு, வண்டிகள் மூலம் ஏற்றி வரப்பட்டு, வரம்பு நாற்சந்திகளில் வைக்கப்படும். விதைப்புக்கு போதுமான அளவு நீர் வடிந்ததும் ஒரு தொடுவை மாடுகளைக் கொண்டு நிலத்தை மிதிக்கப்பண்ணி, பலகையைக் கொண்டு மட்டப்படுத்தப்படும். இது 'பலகை அடித்தல்' எனப்படும். பலகை அடித்து முடிந்ததும், வரவை மூலைகளிலும், மற்றுமுண்டான பகுதிகளிலும் ஓடாமல் எஞ்சி நிற்கும் நீரை ஒரு மூலைக்கு எடுப்பதற்காக 'அளைகள்' போடப்படும். அளைகள் போடப்பட்டு முடிக்கப்பட்ட பின், முளை வீசப்படும். ஒரே சீரான அளவுக்கு ஒரு இடமும் தவறிவிடாமல் கைதேர்ந்த முறையில் முளை வீசுபவர்களைக் கொண்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முளை வீசி முடிவதுடன், விதைப்பும் முடிவடையும். எனினும் முளை பயிராகி, ஏழெட்டு நாள் வரையும் நீர் ஊறி, பயிர் அவிந்து விடாமல் ஏற்று மூலம் இறைப்பு நடந்து கொண்டே இருக்கும்.

நிலம் ஈரம் வற்றிக் காய்ந்து கொண்டு வருகையில், பயிர் வளர்ச்சி துரிதமாக நடைபெறும். விதைப்பு நடைபெற்றுச் சுமார் 10 நாட்களின் பின்னர், நிலம் நன்கு காய்ந்து 'கணண்' பிடித்துக் காணப்படும். அவ்வேளையில் வயலுக்குப் பாய்ச்சப்படும் நீர் 'கங்களவு தண்ணீர்' (கண் கழுவு தண்ணீர்) என்றழைக்கப்படும். இதன் பின்னர் சீரான கால இடைவெளியிட்டு அடிக்கடி நீர் பாய்ச்சப்படும்.

தற்காலத்திலுள்ளது போன்று களை நாசினிகள், பூச்சிநாசினிகள், பீடை நாசினிகள் செயற்கை உர வகைகள் என்பனவற்றின் பிரயோகம் அக்காலத்தில் கிடையாது. வளம் குன்றா நிலமாகையால் நீர் பாய்ச்சப் பாய்ச்ச பயிர் செழிப்புற்று வளர்ந்து கொண்டே இருக்கும். இளம் பயிரை புழு மேய்ந்து விடுவதுமுண்டு. அப்படியான சந்தர்ப்பங்களில் பயிர் முழுவதும் அமிழ்ந்து விடும் படியாக நீரைக் கட்டி, மிதக்கும் புழுக்களை மரக் கொத்துக்களால் ஒரு மூலைக்கு கொண்டு வந்து, அள்ளி எடுத்து நாற்சந்தி வரம்பில் குழி வெட்டிப் புதைத்து விடுவார்கள். புழு மேய்ந்த வேளாண்மை நல்ல வாரிகாணும் (விளைவைத் தரும்) என்பது ஐதீகம். ஆயினும் இன்றும் கூட அது நடந்தேறுவது ஆச்சரியமானதொரு விடயமாகும்.

பயிரை - மாடு, பன்றி முதலான மிருகங்களின் அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக வட்டையைச் சுற்றி வேலி அமைப்பார்கள். வேலிகள்; கொத்து வேலி, முள் வேலி, கம்பு வேலி, சரக்கு வேலி என்று பல வகைப்படும். வேலிகளை உடைத்துக் கொண்டு மிருகங்கள் உட்புகாமல் பாதுகாப்பதற்காக, சகல வயற்காரர்களும் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் 'பரண்' அமைத்து காவல் காப்பார்கள் இது 'காவற்பரண்' எனப்படும்.

**"காவற் பறணில் கண்ணுறங்கும் வேளையிலே - என்**
**கண்ணான மச்சி வந்து காலூண்டக் கனவு கண்டேன்".**

(காலூண்ட - கால் ஊன்ற) என்பது நாட்டார் பாடல்

நெற்கா்ணிகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக பட்டிப்பளைக் கிளையாற்றை நம்பியிருந்தாலும் சிறு சிறு கிராமியக்

குளங்களையும் அமைத்து நீர் பாய்ச்சல் நடவடிக்கைகளில் இம்மக்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள். பள்ளியடிக் குளம், தாமரைக் குளம், அவிலிப்பிட்டிக் குளம், ஏத்தாளைக்குளம், ஆனை செத்த குளம், மண்குண்டுக் குளம், புறவி குளம் போன்றவை கிராமியக் குளங்களில் சிலவாகும். மாரி காலத்தில் இக்குளங்களில் நீரைத் தேக்கி வைத்து, கோடைகால சிறு போகத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இச்சிறு குளங்கள் பலவும் இன்று தூர்ந்து போயுள்ள நிலையில் அவை இரு போக நெற்செய்கைக் காணிகளாக பயன்படுத்தப்படுகின்றன. (தூர்ந்து போகாத நிலையிலுள்ள பள்ளியடிக் குளம் என்னும் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான குளம், இன்று மாற்று இன அரசியல் வாதிகளின் சதிராட்டம் காரணமான தமிழர்களின் ஆக்கிரமிப்புக் உட்பட்டிருப்பது மிகவும் வேதனையான விடயமாகும்)

பயிர் வளர்ந்து வேளாண்மையாகி, தாள் விரித்து, பசும் கம்பளம் போன்ற தோற்றம் காட்டி, சோளகக் காற்றுக்கு ஈடு மூச்சினையில்லாமல் அலை வீசி ஆட்டம் போடும் காட்சி அற்புதமானது; மனதுக்கு மிகவும் இதமானது.

நேரஞ்சினைப் பருவம் வந்ததும், காவலும் - கட்டும், சீரும்- சிரத்தையும் அதிகரிக்கும். ஒரு போதும் தண்ணீர் குறையாதவாறு கவனமாய் பார்த்துக் கொள்ளப்படும். ஈப்பூச்சி, இலைசுருட்டி முதலானவற்றின் ஊசாட்டம் உண்டா என்பது கண்காணிக்கப்படும். பூச்சி புழுக்களின் ஊசாட்டம் காணப்பட்டால் தண்ணீர் ஓதித் தெளித்து, வயல் காவல் பண்ணப்படும். இரவில் வெளிச்சம் வைக்கப்படும். நேரஞ்சினைப்பரும் கடந்தது இளங்குடலைப் பருவம். அதனைத் தொடர்ந்து, முட்டுக் குடலைப்பருவம் இனி, வேளாண்மை கதிர் பறிந்து பூக்கும் பருவம். முழு வயலும் கதிர் வெளியாகித் தெரிவதை 'சோனப்பறிதல்' (சோ எனப்பறிதல்) என்பர். கதிர் பறிந்ததும் பால் ஏறிக் காய் சவளும். இப்பருவத்து வயல் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். பால் ஏறிய வேளாண்மை பன்றிகளுக்கு மிகவும் இனிமையாக இருக்கும் ஆகையால் 'பன்றிக் காவல்' கண்ணயராது காக்கப்படும். இப்பருவத்தில்தான் குருவிகளும் விழுந்து நெல் மணிகளுக்கு சேதத்தை ஏற்படுத்தும். எனவே இரவில் பன்றிக் காவல்; பகலில் குருவிக் காவல்.

> **"கதிரு குடலை காயடக்கம் வெள்ளாமை**
> **பண்டி நெருக்கம் என்ர பாடெல்லாம் போகுதுகா"**

(பண்டி - பன்றி, பாடெல்லாம் போகுது - சக்தியெல்லாம் விரயமாகின்றது) என்பது நாட்டுப்பாடல்

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அமைந்த வயல்களின் தொகுதி 'வட்டை' என்றழைக்கப்படும். ஒரு வட்டையின் நிருவாகியாக 'வட்டை விதானை'யும், அவருக்கு உதவியாக 'வட்டை அதிகாரி'யும் நியமிக்கப்படுவார்கள். நீர்ப்பங்கீடு, வாய்க்கால் துப்பரவு, வேலி அளந்து கொடுத்தல், காவற்பரங்களை அமைக்கும் இடங்களை நிர்ணயித்தல், காவற்கட்டுகளை மேற்பார்வை செய்தல், விதைப்பு தொடங்குதல், அறுவடை ஆரம்பித்தல், வட்டையின் நியதிகளுக்கு கட்டுப்பாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் முதலான செயற்பாடுகளுக்கு வட்டை விதானை பொறுப்பாக இருப்பார். இக்கடமையைப் பார்ப்பதற்கான ஊதியமாக, ஏக்கருக்கு இவ்வளவு என்ற அளவுப் பிரமானத்தில் அவருக்கு வழங்கப்படும் நெல் 'சுமந்திரம்' எனப்படும். அறுவடை காலத்தில் சூடடிக்கும் களவெட்டிகளுக்கு அதிகாரியானவர் சென்று சுமந்திர நெல்லை வசூலித்து வருவார். இச் சுமந்திர நெல் அவர்கள் இருவருக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்படும்.

வட்டை விதானையானவர், வட்டை விவகாரங்களைப் பொறுத்தவரையில் அதிகாரமிக்கவராகக் கருதப்படுவார். விளைவு காலத்தில் இரவிலே பன்றிக் காவல் காக்கும் வயற்காரர்களை மேற்பார்வை செய்வதற்காக அவரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை 'வட்டை வளைத்தல்' எனப்படும். வயற்காரர் ஒவ்வொருவரும் மாலையானதும் தமது இராச் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு காவற்பரனுக்கு வந்து விடுவர். பரணுக்குக் கீழ் அல்லது அருகில் விறகுக்கட்டைகளை எரித்துத் 'தீனா' போடப்படும். குளிரையும், நுளம்புத் தொல்லையையும் நீக்குவதற்கும், காட்டு விலங்குகளை பயப்பட வைப்பதற்கும் இந்தத் தீனா உதவும். கண்ணோடு கண் பொத்தாமல் கவனமாகக் காவல் காக்கப்படும். காவற் பறணில் இருப்பவர்கள் நித்திரையைத் தவிர்ப்பதற்காக நாட்டுப் பாடல்களை குரல் எடுத்துப் பாடுவார்கள்

"திடுதிடென்று மழை பொழிய
திட்டி ரெண்டும் வாந்தோட
மருதையடி நாய் குலைக்க - இங்கு
வந்த கள்ளன் ஆர் பொடிச்சி"

"பொடுபொடென்ற மழைத் தூறல்
பூ ங்காரமான நிலா
கடுமிருட்டு மாலை வெள்ளி
கதவு திற கண்மணியே"

என்பவை அவர்களால் பாடப்படும் சில நாட்டார் பாடல்கள்

வயற்காரர்கள் பாடல்கள் பாடுவது மட்டுமன்றி, தமக்குப் பக்கத்தில் இருக்கும் பறண்களில் இருப்போரைக் கூவென்று கூப்பிட்டு உசார்படுத்துவார்கள். பன்றியை விரட்டுவதற்காக பெருங் குரல் எழுப்புவார்கள்.

முன்னிரவு கழிந்ததன் பின்னர் வட்டை விதானை, அதிகாரி புடைசூழ வட்டை வளைப்பில் ஈடுபடுவார். முதலாவது பறணுக்கு அவர்கள் போய்ச் சேர்ந்ததும், வட்டை விதானை தனது கையிலிருக்கும் பிரம்பை அதிகாரி வசம் கொடுத்து விட்டு, அந்தப் பறணில் நீட்டி நிமிர்ந்து படுத்து விடுவார். அந்தப் பறணுக்குரிய வயற்காரனும், அதிகாரியும் ஓலை தீப்பந்தத்தை கொழுத்தி எடுத்துக் கொண்டு அடுத்த பறணுக்குப் போய் விடுவார்கள். முதற் பறணுக்குரியவன் இரண்டாம் பறணில் தங்கிவிட, இரண்டாம் பறணுக்குரியவனும் அதிகாரியும் மூன்றாம் பறணுக்குச் செல்வார்கள். இவ்விதமாகவே தொடர்ச்சியாக நடைபெற்று, விடியச்சாமம் மட்டில், கடைசிப் பறண்காரனும் அதிகாரியும் வட்டை விதானை தூங்கிக் கொண்டிருக்கும் முதலாவது பறணுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள். வட்டை வளைப்பின் போது பறணுக்குரிய வயற்காரன் நித்திரையில் இருந்தால், அதிகாரி தம் வசமிருக்கும் பிரம்பால் அவனது பிட்டத்தில் விளாசுவது வழக்கம். மேலும் ஒரு பறணிலிருந்து மறு பறணுக்குச் சென்றவர்கள் அங்கு சிறிது நேரம் தரித்து, தேனீர் வைத்துக் குடித்து, வெற்றிலை பாக்குப் போட்டு அல்லது பாட்டுப் பதம் பாடி, அல்லது கூவென்று சத்தமிட்டு சற்று சிரம பரிகாரம் செய்த பின்பே மற்றப் பரணுக்குச் செல்வதும் வழக்கம்.

வேளாண்மை, குடலை, கதிர், விளைவு பற்றிய பின்வரும் நாட்டுப் பாடல்கள் ரசனைக்குரியனவாகும்.

"ஏத்தால வெள்ளாமை
இளங்குடலை பூங்கதிரு
மாட்டால் அழியுதெண்டு - என்ர
மன்னருக்குச் சொல்லிடுகா"

"ஆத்தியடி வரவ
அதுக்கடுத்த நீள் வரவ
கதிர் பழுத்து நெல் விளைவு - நான்
காவலுக்குப் போய் வாரன்"

வேளாண்மையின் வாழ்வு வட்டத்தில், விளைவு காலத்தை 'பூ ஏழு, காய் ஏழு, பழம் ஏழு' என்பர். அதாவது பூப்பருவம் ஏழு நாட்கள், காய்ப்பருவம் ஏழு நாட்கள், நெல் பழுப்பு நிறம் கொள்ள ஏழு நாட்கள் என்பது அதன் பொருள். எனவே கதிர் மஞ்சள் நிறம் கொண்டு நெல் முற்றிப் பழுத்ததும், அறுவடைக்குத் தயாராக நிலத்தைக் காய வைப்பதற்காக, வயலில் இருக்கும் நீரை எல்லாம் வெட்டி அப்புறப்படுத்தி விடுவார்கள். அறுவடைக்கு முன்னர் வயற்காரப் போடிமார் எல்லாரும் சேர்ந்து கந்தூரி, நிய்யத்து முதலான சமயச் சடங்குகளை செய்வார்கள். அதன் பின்னர் யாருடைய வயல் முதலில் வெட்டப்பட வேண்டும். அடுத்தடுத்து யார் யாருடைய வயல்கள் வெட்டப்பட வேண்டும் என்று விதைத்த ஒழுங்கின் பிரகாரம் வட்டை விதானையால் தீர்மானிக்கப்படும். அதற்கமைவாக வேளாண்மை வெட்டு நடைபெறும்.

வேளாண்மை வெட்டுவதற்காக தொழிலாளர்கள் திரண்டு வருவார்கள். 'பங்கு' என்ற அளவுத்திட்டத்தில் வேளாண்மை பகிர்ந்து கொடுக்கப்படும். ஒரு ஏக்கர் பூமியில் உள்ள வேளாண்மை ஏறக்குறைய எட்டுப் பங்குகளாகப் பிரிக்கப்படும். 4½ முழ நீளமான கம்பு ஒன்றினால், 16 கம்பு நீளமும், 7 கம்பு அகலமும் போடப்பட்டால் அது ஒரு பங்காகக் கருதப்படும். ஒரு பங்கு வேளாண்மை வெட்டுவதற்கு கூலியாக இவ்வளவு நெல் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும். தொழிலாளர்கள் இக்கூலியை வெட்டிய வேளாண்மையைத் துவைத்தும் எடுத்துக் கொண்டும் போவர். சூடடிக்கும் போது களவெட்டிக்கு வந்தும் பெற்றுக் கொண்டு போவர். சராசரியாக ஒரு தொழிலாளி நாளொன்றுக்கு இரண்டு பங்கு வேளாண்மை வெட்டுவார். ஆனால் சில தேர்ந்த வெட்டுக்காரர்கள் நான்கு, ஐந்து பங்கு வெட்டுவதுமுண்டு.

வெட்டப்பட்ட 'உப்பட்டிகள்' சுமார் இரண்டு நாட்கள் காயப்போடப்படும். உப்பட்டிகள் நன்றாகக் காய்ந்ததும், பல உப்பட்டிகளை ஒன்று சேர்த்து கயிற்றினால் கூட்டாகக்கட்டி சூடு வைக்கப்படும். சூடு வைக்கப்படும் வரவை எழுந்தமானமாகத் தீர்மானிக்கப்படுவதில்லை. முழு வயலையும் வடக்குத் தெற்காக சமமாகப் பிரித்து, வடபுறப்பங்கில் மேற்குப் புறமாகவே களவெட்டி வரவை அமைந்து சூடு வைக்கப்படும். தென் புறப்பங்கில் மேற்குப் புறத்தில் தப்பித் தவறியேனும் களவெட்டி அமைக்க மாட்டார்கள். அது 'சாமூலை' என்பதும் அதில் சூடு வைக்கப்பட்டால் 'வாரி' இருக்காது என்பது ஐதீகம். வயலின் பரப்பு எத்தனை ஏக்கராக இருந்தாலும் ஒரு சூடு மட்டுமே வைக்கப்படும்.

வைக்கப்பட்ட சூடு வைக்கோலினால், மேடு பள்ளம் இல்லாமல் வேயப்படும். சூடடிக்கும் தொழிலாளர்கள் ஓய்வெடுப்பதற்காகவும், உண்பதற்காகவும் அன்று சூட்டடி வரவையினுள் 'குடில்' ஒன்று கட்டப்படும். சூடு,

தற்காலத்தில் நடைமுறையில் உள்ளது போல் உடனுக்குடன் அடிக்கப்படுவதில்லை. பல நாட்கள் கழித்தே அடிக்கப்படும். எனவே மாடுகள் வந்து சூட்டு வெள்ளாமையை தின்று விடாமல் தடுப்பதற்காக, சூட்டை வளைத்து வேலியிடப்படும். சூட்டுக் காவல் பகலிலும் இரவிலும் மிகக் கவனமாகக் காக்கப்படும்.

படங்குகளில் நெற்கதிர்களைப் போட்டு சூடடிக்கும் வழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருக்கவில்லை. சூடடிப்பதற்கென்று களவெட்டி செதுக்கி, செதுக்கப்பட்ட நிலத்திலேயே சூடு அடிக்கப்படும். நிலம் களித்தன்மையாக இருப்பதால் வேளாண்மை 'ஒட்டுக்களை' செதுக்கிய பின், வெயிலுக்கு காய்ந்து கண்டித்து விடும். எனவே தன்னிலத்தில், வெறும் நிலத்தில் சூடடித்தபின் பொலியைக் கூட்டி எடுப்பதில் பெரும் சிரமம் இருப்பதில்லை.

வட்டை விதானையின் அனுமதியுடன் சூடடிக்கும் தினம் நிர்ணயிக்கப்படும். சூடடிப்பு இரவு வேளையிலேயே நடைபெறும். ஆரம்பத்தில் சூட்டுக் களத்தின் மத்தியாகிய 'அரக்கில்' பாதுகாப்புக்கான 'இசும்' மற்றும் கூடிய விளைச்சலுக்கான தங்கப் பவுன் என்பன புதைக்கப்படும். அதனைத் தொடர்ந்து சூடு போட வந்தவர்களுள் பாகு பத்திரமான மூத்தவர் ஒருவர் 'வுழு' என்னும் பரிசுத்தத்துடன் சூட்டின் மேல் ஏறி 'பாங்கு' சொல்லுவார். பின்னர் சூட்டில் உள்ள கதிர்கள் களத்தில் அள்ளிப் போடப்படும். இரண்டு நீளமான கம்புகளை, சுமார் ஒன்றரை முழ இடைவெளியில் சமாந்தரமாக வைத்து, அதன் மேல் கதிர்களை வைத்து களத்தில் கொண்டு வந்து குவிப்பார்கள். ஒரு இரவில் சூடடிப்பதற்கு சுமார் 50 கட்டு வேளாண்மை. அளவில் குவிக்கப்படும். இந்த அளவு அக்காலச் செய்கை முறையில் ஒரு ஏக்கர் காணியில் விளைந்ததாக இருக்கும். இந்த 50 கட்டு வேளாண்மையும் அடித்து முடிப்பதற்கு நாலு வேலையாட்களும், ஒரு தொடுகை (04 பிணையல்கள்) மாடும், மாடு சாய்ப்பதற்காக ஒரு பொடியனும் ஈடு பட வேண்டியிருக்கும். களத்தில் சூடு இழுத்துப் போடப்பட்டதும் வேளையாட்கள் ஓய்வு எடுப்பவர். பொடியன் மாடு சாய்த்துக் கொண்டு அதற்கெனவேயுள்ள பாட்டுக்களைப் பாடுவான்.

களவெட்டியினுள் ஒரு பொருளுக்கான இயற்பெயர் கொண்டு, அப்பொருள் அழைக்கப்படுவதில்லை. காரணத்தினடிப்படையில் அமைந்த குழூவுக் குறியீட்டுப் பெயர் கொண்டே அழைக்கப்படும். சூடு போடும் மாடு 'வாரிக்காலன்' என்று அழைக்கப்படும். களத்தின் வெளிப்புறமாகவுள்ள மாடு 'வாட்டி' என்றும், உற்புறமாகவுள்ள மாடு 'அரக்கு' என்றும் அழைக்கப்படும். நெல்லைப் 'பொலி' என்றும், வைக்கோலை 'பொலிக் கொடி' என்றும் நெல் அளக்கும் மரைக்காலை 'கணக்கன்' என்றும், ஓலைப் பெட்டியை 'பெருவாயன்' என்றும், மண்வெட்டியை 'வெட்டுவாயன்' என்றும், மாட்டின் சானத்தை 'கோல்' என்றும், காற்றை 'வாகராசன்' என்றும், நெல் அளத்தலை 'பொலி மதித்தல்' என்றும், பதரை 'கள்ளன்' என்றும் இன்னோரன்ன குழூவுக் குறியீடுகளாலே அழைக்கப்படும். பெண்கள் எக்காரணம் கொண்டும் களவெட்டி எல்லையினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பொழுதோடு தள்ளப்பட்ட சூடு, விடிவெள்ளி காரிக்கையில் வைக்கோல் எல்லாம் புறப்படுத்தப்பட்டு பொலி கூட்டப்படும்.

பொடியன் மாடு சாய்த்துக் கொண்டிருக்கையில், நள்ளிரவு வேளையில், வேலையாட்கள் உறங்கிக் கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் பொடியனும் தூக்கக் கலக்கத்தில் வைக்கோல் கந்தினுள் விழுந்து

படுக்க, மாடுகள் சாய்ப்பாரில்லாமல் களத்தை விட்டு வெளியேறிப் போய் ஆற்றினுள் படுத்து விடுவதுமுண்டு. இராப்பொழுதின் இருட்டில், களத்தின் ஒரு பக்கத்தில் நின்று வைக்கோலை வாட்டிப் போட்டுக் கொண்டிருக்கும் ஒரு வேலையாள், நித்திரை மயக்கத்தில் வைக்கோலினுள் வீழ்ந்து உறங்கி விடுவதும், அதனை அறியாத மற்றொரு வேலையாள், தான் வாட்டிய வைக்கோலை அவன் மீது குவித்து விடுவதும் சூட்டுக் களத்தினுள் சாதாரணமாக நிகழும் சம்பவங்கள்.

பொலி கூட்டி முடிந்ததும், வேலையாட்கள் ஆற்றுக்குப் போய் வைக்கோல் சுணையும், உடற்களையும் தீர குளித்து விட்டு வருவதற்குள் அப்பக்குடிலிலிருந்து சுடச் சுட அப்பம் வந்திருக்கும். வசதி குறைந்த கைம்பெண்கள் அறுவடை காலத்தில் வட்டை எல்லையினுள் குடில் கட்டியிருந்து அப்பம் சுட்டு பொலி கூட்டி முடிந்ததும் களவெட்டிகளுக்கு அனுப்புவது வழக்கம். அப்பம் மிகப் பெரிதாகவும், கணக்கான சூட்டிலும், கட்டித் தேங்காய்ப் பால் ஊற்றப்பட்டதாகவும், ஒன்றின் மேல் ஒன்று கவிழ்க்கப்பட்ட சோடிகளாகவும் இருக்கும். ஒரு சோடியை நம்மில் ஒருவர் சமாளிப்பதே கஷ்டம். எனினும் நாலைந்து சோடிகளை பார்த்திருக்கும் போதே தின்று ஏப்பம் விடும் இயல்பு உடையவர்களாக அம்மக்கள் இருந்திருக்கிறார்கள். அப்பக் குடில் பெண்மணிக்கு நித்திரை போய், எழும்புவதற்கு தாமதமாகியோ, அப்பத்திற்குப் போட்ட மாவு புளிக்காமலோ , அப்பம் களவெட்டிக்கு வரத் தாமதமானால் பசி பொறுக்காத நபர்கள், அப்பக் குடிலுக்குள் சென்று உரிய அப்பச் சோடிகளுக்குரிய மாவை வாங்கிக் குடித்துவிட்டு, 'மாக்குடிச்சான்' என்ற பட்டத்தை வாணாள் (வாழ் நாள்) முழுவதும் சுமந்து கொண்டு திரிந்த வரலாறுகளும் ஏராளமாக உண்டு. ஒரு சோடி அப்பத்திற்கு இவ்வளவு நெல் என்ற கணக்கில் வயற்காரப் போடிமார் பெண்மணிக்கு பின்னர் அனுப்பி வைப்பார்.

இவ்விதமாகவே சூடு முழுமையும் நாளாந்தம் போடப்படும். ஐந்து ஏக்கருக்குரிய சூடாக இருந்தால் ஏறக்குறைய ஐந்து இரவுகளில் போட்டு முடிக்கப்படும். ஒவ்வொரு நாளும் போடப்பட்ட சூட்டின் பொலி, 'அவரி' என்னும் முக்காலி வைத்து தூற்றப்பட்டு, 'வைரப்பொலி' ஆகிய நெல், வைக்கோல் மற்றும் வைக்கோல் புரிகளால் அமைக்கப்படும் 'பட்டறை' களிலோ, 'பாவரை'களிலோ பத்திரமாகக் கொட்டி வைக்கப்படும். சூடு முழுவதும் போட்டு முடிக்கப்பட்டதும் பட்டறையிலுள்ள பொலி மதிக்கப்பட்டு (அளக்கப்பட்டு) மாட்டு வண்டில்கள் மூலம் ஏற்றி வரப்படும்.

பட்டறையிலுள்ள பொலி மதிக்கப்படும் நிகழ்வு 'பொலிவு களவெட்டி' எனப்படும். வயல் விதைப்புக்கு முளை ஏற்றி வருவதும், விளைந்த நெல்லை வீட்டுக்கு ஏற்றிக் கொண்டு செல்வதும், குறிப்பிட்ட ஒரு வண்டிக்காரராலேயே மேற் கொள்ளப்படும். இதற்கு 'ஏருவை' என்று சொல்லப்படும். ஏருவை வண்டிக்காரர் - விதை ஏற்றுதல், விளைந்த நெல் ஏற்றுதல் என்பவற்றிற்கு மேலதிகமாக வயல் சொந்தக்காரப் போடியார் வீட்டுக்கு ஒரு வண்டி நிறைந்த விறகும் ஏற்றிக் கொடுக்க வேண்டும். இவற்றுக்கு கூலியாக விளைந்த நெல், 'அவணம்' ஒன்றுக்கு இத்தனை மரைக்கால் என்ற ரீதியில் கொடுக்கப்படும். ஒரு வண்டியில் 10 மூடை நெல் மட்டுமே ஏற்றுவார்கள். ஒரே நாளில் களவெட்டி நெல் முழுவதையும் ஏற்றிக் கொண்டு வருவதற்காக ஏருவை வண்டிக்காரர், தனது நண்பர்களான வண்டிக் காரர்களின் உதவியை நாடுவார். 'அத்தம்' என்றழைக்கப்படும் இதற்கு கூலி கொடுக்கப்படுவதில்லை. உதவியளித்த வண்டிக்காரர்களும் வேறு வேறு போடிமார்களுக்கு ஏருவைக் காரர்களாக இருப்பார்களாகையால், உதவி பெற்ற வண்டிக்காரர் உதவியளித்த வண்டிக்காரர்களுக்கு அத்தம் வழங்கித் தம் கடனைக் கழிப்பர்.

பொலிவு களவெட்டியன்று நெல் அளந்து சாக்கினுள் கட்டப்படும். 'வெளியார்' என்னும் வயற் செய்கையில் ஈடுபட்ட வயற்காரரின் கணக்குப் பார்த்து அவருக்கான 'பொருத்தம்' கொடுக்கப்படும். வயற்காரருக்கு பொருத்த நெல்லுடன் 'கடைப்பொலி' தூற்றி மிஞ்சிய பதக்கடையும், சூட்டடி கூட்டிய நெல்லும் களவெட்டிக் கழிவாகிய 'மண்ணங்கட்டி' என்னும் மண் கலந்த நெல்லும் கொடுக்கப்படும். வட்டை விதானைக்குரிய சுமந்திரம், குருவி விரட்டிய பொடியனுக்கான கூலி நெல், வண்டிக்காரருக்கான ஏருவைக் கூலி, அப்பக்குடிலிலிருந்து களவெட்டிக்கு அனுப்பப்பட்ட அப்பத்திற்கான நெல், வட்டைக் கடைக்கு கொடுமதியான நெல், குடிமைத் தொழில் செய்யும் வண்ணான், ஒஸ்தா மாமா ஆகியோருக்கான வருஷக்கூலி நெல், அத்துடன் ஏழை எளியவர்களுக்கான ஸதக்கா நெல் ஆகியன கொடுக்கப்பட்ட பின், மீதி நெல் போடியாரின் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் 'அட்டுவம்' அல்லது 'கொட்டு' அல்லது பட்டறையில் கொட்டி வைக்கப்படுவதுடன் அந்தப் போக வேளாண்மைச் செய்கை முற்றுப் பெறுகிறது.

இந்த விவசாயச் செய்ம்முறையில் போடியார் - செய்கைக்காரன் (பொருத்தக் காரன் அல்லது வயற்காரன் அல்லது வெளியான்) உறவும் தொடர்பும் பழமையானது: பாரம்பரிமிக்கது. ஓரளவு நில மானிய பிரபுத்துவ சாயல் கொண்டது.

நிலத்திற்குச் சொந்தமான போடியார் தனது நிலத்திற் பயிர் செய்வதற்கான முதலை (மூலதனத்தை) போடுவார். செய்கைக்காரர் தமது உழைப்பை நல்குவார். உழுதல், மிதித்தல், தண்ணீர் விடுதல், வரம்பு செதுக்குதல், வரம்பு கட்டுதல், காவல் பார்த்தல், வாடியமைத்தல், விவசாய தொழிலாளர்களுக்கு சூடடிப்பின் போது உணவு தயாரித்தல், வக்கடைகள் கட்டுதல், வட்டை வேலி அடைத்தல் முதலானவற்றுடன் போடியார் வீட்டில் வேலி கட்டுதல், கூரை மேய்தல், விறகு வெட்டுதல், பண்டிகைகள் - விசேட வைபவங்களில் ஓடியாடி ஒத்தாசை புரிதல் முதலானவை வயற்காரரின் ஊழியங்களாகும். வயற்காரரின் மனைவியோ போடியார் வீட்டில் நெல் குற்றுதல், மாவிடித்தல், விசேட வைபவங்களுக்கு உணவு மற்றும் பட்சணங்கள் தயாரித்தல் போன்றவற்றை தனியாளாகச் செய்வதுமுண்டு: ஒத்தாசை புரிவதுமுண்டு. போடியார் வீட்டில் செய்யப்படும் ஊழியங்களுக்காக போடியார் அல்லது போடியாரின் பெண் சாதியாரால் சன்மானங்கள் வழங்கப்படுவதுமுண்டு.

மேலே கூறப்பட்டவை தென்கிழக்கிலங்கையின் , குறித்த ஒரு பிரதேசத்தின் குறித்ததொரு காலகட்டத்தின் தொழில் சார் வாழ்க்கை முறையாகும். இந்த வாழ்க்கை முறையை இப்பிரதேச மக்கள் தங்களுக்கேயுரியதொன்றாக வரித்துக் கொண்டார்கள். அதன் கஷ்டங்களையும், நஷ்டங்களையும், துன்பங்களையும், துயரங்களையும், விசாரங்களையும், வேதனைகளையும் மனோ வலிமையுடனும், நாளை பற்றிய நம்பிக்கையுடனும் எதிர் கொண்டார்கள். 'சிறுவால்' என்னும் ஓர் உடுமானத்துடன் சேறு தோய்ந்த திறந்த மேனியராய், கையில் மண்வெட்டியுடனும், தோளில் பிணையல் கயிற்றுடனும் அவர்கள் பராரிகளாகத் திரிந்தாலும், நேர்மை தவறாதவர்களாகவும், கொடுத்த வாக்கை உயிரைக் கொடுத்தேனும் நிறைவேற்றுபவர்களாகவும், உறவையும் நட்பையும் பேணிக் காப்பவர்களாகவும், அயலவர்கள் மீது கொண்ட அபிமானம் காரணமாக எவ்வித உதவியையும் அவர்களுக்குச் செய்வதற்கு சித்தம் கொண்டவர்களாகவும், தமக்கு கிடைக்கும் சொற்பத்தையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பரோபகார சிந்தையுடையவர்களாகவும் இருந்தனர். இவை எல்லா வற்றையும் விட செய்யும் தொழிலை சிரத்தையுடனும், இதய சுத்தியுடனும், மன விருப்பத்துடனும் செய்தமையால் சொற்ப வருமானத்துடன் திருப்தியான வாழ்வு காண அவர்களால் முடிவதாயிற்று. இயற்கையை ஒட்டிய தொழிலும், தொழிலையொட்டிய பண்பாடும், பண்பாடு

சார்ந்த பொழுது போக்குகளும், அவற்றிற்கேயுரித்தான கவியும், பாட்டும், பதமும், பண்டிகையும், ஊராண்மையும், மிடுக்கும், விகடமும் தாங்கள் எவ்வளவுதான் பஞ்சப்பட்டாலும் தன்மானத்தை இழந்து விடக் கூடியவர்களல்லர். என்ற பெருமிதமும் அவர்களிடம் மண்டிக் கிடந்தன.

எனவேதான் ஊரை வாட்டியெடுத்த ஒரு பஞ்ச காலத்தின் போது, கூலி வேலைக்குப் போகும் வழக்கமற்ற முஸ்லிம் பெண்கள் வீதி அமைப்பதற்கான மண் சுமக்கும் வேலைக்கு வருமாறு வன்னிமை அழைத்த போது, அந்த அழைப்பை மறுதலிக்கும் பாங்கில்

**"சம்புக்களப்பில் தளைச்ச வள்ளல் பிச்சி வந்து**
**கறியாக்கித் தின்று நாங்க களை தீர்ப்போம் வன்னிமையே"**

என்று வீராப்புடன் ஒரு முஸ்லிம் பெண்மணியால் பாட முடிந்தது.

இந்த மக்களும், இந்த மனப்பாங்கும் இன்று எம்மிடையே இல்லை. மகத்துவமும் பவித்திரமும் இழந்த நிலையில் விவசாயம் மட்டும் ஒரு வர்த்தகப் பயிர்ச் செய்கையாக எஞ்சி நிற்கிறது. எங்கள் முன்னோர்களால் கட்டிக் காக்கப்பட்டு வந்த விவசாயப் பாரம்பரியங்கள் எல்லாம் சிதைந்து, சின்னா பின்னமாகி வெறும் எலும்புக்கூடாய் எஞ்சி நிற்கிறது.

பத்து ஏக்கர் வேளான்மையை ஒரு பகல் பொழுதுக்குள் வெட்டி நெல்லைக் கொண்டுவர இயந்திரக் குறளியின் உதவியால் இயலுமாக இருக்கிறது. காவல், கட்டு, பண், பாகு என்று ஒன்றும் இல்லாமல் ஒரு இருபது ஏக்கர் காணியை செய்கை பண்ணவும், வயற்காரப் போடி வாங்கித் தந்த புல் மருந்தையோ, பூச்சி மருந்தையோ ஒருவருக்கம் தெரியாமல் நின்ற இடத்திலேயே விற்றுக் காசாக்கிவிட்டு, அவற்றை வயற்காணிக்கு விசிறியதாகவும், வீசியதாகவும் பாவணை பண்ணவும் ஒரு வயற்காரனால் முடிகின்றது. பக்கத்து வயலை வெட்டுவதற்கு வரும் வெட்டுக்காரர்களை இடை மறித்து இரண்டு சாராயப் போத்தல்களை கைமாறுவதன் மூலம் தனது வயலை வெட்டிக் கொள்ளவும், செய்கைக் காரனின் பொருத்தக் கணக்கை தொழில் நீதிமன்றத்தில் தீர்த்துக் கொள்ளவும் வயற்காரப் போடியால் முடிகின்றது. மிக விரைவாக வேலையைச் செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக, வைக்கோலோடு பொலியை அள்ளி வெளியே வீசவும், அற்ப காரணங்களுக்காக சூடு போட மறுத்துவிட்டு மனச்சாட்சியின் உறுத்தல் இல்லாமல் திரும்பி வரவும் தொழிலாளர்களால் முடிகின்றது. ஒதுங்கி நிற்க ஒரு நிழலும இல்லாமல், தகிக்கும் வெயிலையும், கொட்டும் மழையையும் சருமத்தில் தாங்கிக் கொள்ளவும் பாலும், தயிரும், வேதும், நெய்யும், மீனும், தேனும், புழுக்கிய இறைச்சியும், கீரை வகையும், காய்கறி கனிகளும் சேர்ந்த உணவுகளுக்கு என்றுமே பஞ்சமில்லாத சூட்டுக் களவெட்டிகளில், மட்டரகமான சாப்பாட்டுக்கடைகளின் சோற்றுப் பார்சல்களுடன் திருப்திப்பட்டுக் கொள்ளவும் எல்லோராலுமே இப்பொழுது முடிகின்றது. ●

**அஞ்ஞானம் ஒரு விஷப்பூச்சி. அதற்குக் கை கால் கிடையாது. வீரியம் கிடையாது. நெளிந்து நெளிந்து உள்ளே புகுந்து ஒளியையும். இன்பத்தையும் மறைக்கிறது**

**- மகாகவி பாரதியார்**

எது நடந்ததோ
அதுவும் நன்றாகவே நடந்தது
இது இன்று நேற்று நடந்ததல்ல
ஏதோ ஒரு மார்கழியில்.

பல ஆண்டுகளாக
பல இடங்களில்
வைகறையில், மாலையில்
வியர்வை வடியும் நண்பகலில்
இரவு போன்ற பொழுதுகளில்
தனித்த அறைக்குள்ளும்
பூசாத சுவர் இடுக்குகளிலும்
மழைக்குக் கீழேயும்
நிலவொளி உருளும் வாய்க்கால் வரம்புகளிலும்
சதைகளை நசுக்கும் சன நெரிசலிலும்
நானும் புனிதாவும்
தனித்து சந்தித்திருக்கிறோம்

என் பிடரியிலும்
புனிதாவின் மார்புகளின் மீதும்
சாத்தான் குடிகொண்டிருந்தாலும்
அவள் மேல் கொண்ட மரியாதையின் நிமித்தம்
விட்டு விலகியே வாழ்ந்திருக்கின்றேன்

என் சுக்கிலமும்
அவள் இரத்தமும் கொதி கொண்டு
ஆவியாய், செந்தணலாய், அனலாய், மெழுகாய்
ஏன் நெருப்பலையாய்
அதிர்கின்ற வயதிலும்
அவளைத் தொட்டது கிடையாது

அன்றைய மழை நாளில்
புனிதாவின் பாதாதிகேசம்
பச்சையம் உண்ட பனிப் புல்வெளி போல
பசுந்தாக இருந்தது

பொன்னாங்கனி நனைந்து
துளிர்த்ததைப் போலிருந்தாள்
அந்த அழகை புத்தனின் போதி மரமும்
ஒரு முறை தொட்டுப் பார்த்திருக்கும்
விசுவாமித்திரனின் தவமும்
ஒரு முறை தழுவிப் பார்த்திருக்கும்

நான் இவையிரண்டையும்
விடவும் மேலானவனா?

இருவரும்
தனிமையிலிருந்தோம்
சாத்தான் கடவுள் ஆனான்
வெளியில் பெய்த மழைத் துளிகளெல்லாம்
எச்சில் போல அருவருப்பாய் இருந்தன
எச்சிலில் இருந்த குளிர்ச்சி மட்டும்
ஏனோ முடிவில் மன நிறைவைத் தந்தது

தராமல் இருந்தாள்
தேவையே இருக்கவில்லை
ஒன்று தந்தாள்
ஒவ்வொரு நாளும் தேவை ஏற்பட்டது
சங்கு கழுத்தில் சந்தணம் மணத்தது
குடைக்காம்பு போல இறுக அணைத்தாள்
குடைக்கம்பி குத்தியது
அன்றுதான் நியூட்டனின்
புவியீர்ப்பு விதி விளங்கியது

வெட்கக் கடல்
விட்டுக் கொடுப்பதில்
மக்கத்து ஒட்டகையாய் இருந்தாள்
தட்டிப் பறிப்பதில்
ஒரு தலைவன் போன்றிருந்தேன் என்றாள்

**அதீக் ஹாஸன்**

# கடிதங்கள்

நீங்கள் அனுப்பி வைத்த துயரி நான்காவது இதழ் கிடைத்தது. கட்டுரைகள் சிறுகதைகள், கவிதைகள் என ஒரு நிறைவான அகன்ற வாசிப்பை இதழ் படித்து முடிந்ததும் உணர்ந்தேன். ஒவ்வொரு ஆக்கத்திலும் கடின உழைப்பின் கனதி தெரிகிறது. தேடலுள்ள சமூகம் ஒன்றிற்கான விதைகளை துயரி ஊன்றியுள்ளது.

சில கவிதைகளில் உயிர் ததும்பும் வீச்சும், சுவையும் மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுகின்றன. ஒரு சமூகத்தின் இருப்பை உரத்துக் கூறவல்ல ஒரு முயற்சியின் பலனாக துயரியைப் பார்க்கிறேன்.

தெளிவும், தெளிவில் முகிழும் ஞானமும், ஞானத்தில் பிறக்கும் சிந்தனைகளுமான சந்ததி துயரியின் மூலம் உருவாக வேண்டும். இன்ஷா அல்லாஹ் அது உருவாகியே தீரும் என்ற நம்பிக்கையுடன் கைகோர்ப்போம்.

**ஓட்டமாவடி அறபாத்**

துயரி இதழ் - 04 கிடைக்கப் பெற்றேன். நன்றி. வாசித்தும் பக்கங்கள் தீர்ந்தாயிற்று. பொழுதும் புலர்ந்தாயிற்று. நியமங்கள் கலைந்து, புதுப்பிரவாகம் எடுத்து ஆத்மார்த்தமாக கற்ற ஓர் அனுபவம் பிறந்தாயிற்று. ஏன்? நீண்ட ஓய்வொன்றை பலிக்கடாவாக்கி ஒரு மாதமளவில் நான்கு சுவர்களுக்குள் இரு பக்கமும் கறையான்களால் சிங்காரப்படுத்தப்பட்டு கிறுக்கப்பட்ட ஒரு பழமை நூலகத்தினுள் ஆற அமர்ந்து முக்தி நிலையைப் பெற்ற அனுபவமே கிடைத்தது.

வெளியே சர்வ சாதராணமாக திறந்து கிடக்கும் மொழி தொலைந்து போய், சிந்தித்து, சீராக்கிய பண்டைய இலக்கிய மொழிகளை செதுக்கி புது முகங்கள் ஆக்கங்கள் படைத்திருக்கிறார்கள் எனும் போது உண்மையில் மெய் சிலிர்த்துப் போகின்றது. வெறுமனே தெருவில் தேய்காய் கூவி விற்கும் பாமரன் தொட்டு, பேனாக்களுக்குள் தினமும் தன்னைப் புகுத்தி பரந்த விருட்சங்கள் படைக்கின்ற ஒரு சிறந்த இலக்கியவாதி வரைக்கும் தேடித் தெரிந்து கற்க வேண்டியளவு தமிழை - மொழியை அடுக்கியிருக்கிறார்கள்.

தென்கிழக்கில் பூத்துக் கிடக்கின்ற பல்கலைப் பூங்காவில் இலக்கியத் துயர் துடைக்கும் ஒரு துயரியை பெற்றெடுத்தது நாம் அனைவரும் பெற்ற பெரும் பேறே. இது கால வேகத்திற்குள் களைத்து விடாமல் காத்திரமான படைப்புக்கள் தொடர்ந்து மேவி எம் இதயங்களில் என்றும் துளிர் விட்டு ஆலவிருட்சமாக இலக்கியத் தூளியிட வாழ்த்துகிறேன்.

**மு.ஷெ.மனாஸிர் ஷெரீப்**
**பொத்துவில்**

துயரியின் நான்காவது இதழ் என் கரம் அடைந்தது. இடைவிடா வாசிப்பில் ஈடுபட்டு முடித்தேன். நன்கு திட்டமிடப்பட்ட தேர்வில் துயரியின் காத்திரமான கட்டுரைகள் அமைவதானது பண்பட்டதோர் புத்திஜீவிகளின் முயற்சியாகவே தென்படுகிறது. கால மாற்ற தேவைகருதி கருத்தாடல்களை வெளிப்படுத்துகின்ற தூர நோக்குப் பணியினை துயரி முன்னெடுத்திருப்பது மகிழ்வானதே. சிறாஜ் மஷ்ஹுர், எஸ். ஏ. றணீஸ் ஆகியோரின் கருத்துக்கள் முஸ்லிம் தேசத்தின் எதிர்காலத்தை வலுப்படுத்தும் அமைப்பில் அமைந்துள்ளன.

இலக்கியத்தின் எல்லையை தொட்டதான சிறுகதைகள் உண்மையிலேயே ரசிக்க மட்டுமானதல்ல. சிந்திக்கத் தக்கன. கவிதைகள் கவிதைகளாகவே உள்ளன. அற்புதமான கவிதைத் தலைப்புகளில் ஆணி வரிகள். இப்படித்தான் சிறுகதை, கவிதை கட்டுரைத் தேர்வுகளை ஓர் இலக்கிய சஞ்சிகை மேற்கொள்ள வேண்டும் என்பதனை துயரியைத் தொடர்ந்தும், தொய்வின்றியும் படிக்கும் போது புலனாகும்.

துயரியின் 60ம் பக்கத்தில் ஆசிரியர் குழுவின் ஆணித்தர கருத்துக்கள் அலாதியாய் அமைந்து விட்டிருக்கின்றன. ஏனைய பல்கலைக்கழக புத்திஜீவிகளின் கட்டுரைகளையும் எதிர்காலத்தில் துயரி உள்வாங்க வேண்டும்.

**எம். பி. நளீம்**

Akkaraipattu ZEEMA HOTEL

# ZEEMA RESTAURANT



கேக் வகைகள் (ஐசிங் கேக், அப்பிள் கேக்)
திருமணச் சிற்றுண்டி வகைகள்
குளிர் பானங்கள்
பிறைட் றைஸ் புரியாணி
இன்னும் பல உணவு வகைகள்...

**ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு குறித்த நேரத்திற்குள்
திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும்**

760
210
15
985

**Main Street, Akkaraipattu**
*0777 - 160668*